# தமிழரசு

1.7.1984 75 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2015

ரக்தாக்ஷி — ஆனி 18





மாண்புமிகு முதல்வர் அவர்களை, மாண்பு மிகு கேரள நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு எம். பி. கங்காதரன் சென்னையில் சந்தித்தார். அப்போது, மாண்புமிகு தமிழகத் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம், அரசு தலைமைச் செயலாளர் திரு கே. சொக்கலிங்கம் ஆகியோர் உடன் இருந்தனர்.



பூவிருந்தவல்லியில் நடைபெற்ற தேசிய வேளாண்மை இடுபொருள் இருவார விழாவில் (14-6-84) பங்கேற்ற மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு காளிமுத்து விவசாயப் பெருமக்களுக்கு இடுபொருட்களை வழங்கினார்.



அம்பத்தூர் தொழிற்பேட்டையில் (15-6-84) நிரந்தரப் பொருட்காட்சியொன்றை மாண்புமிகு சட்ட அமைச்சர் தலைமையில், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு ஆர். அருணாசலம் துவக்கி வைத்தார்.

காயிதே மில்லத் அவர்களின் 89-வது பிறந்த நாள் விழா, நெல்லை மாவட்டத்தில், அவர் பிறந்த ஊரான பேட்டையிலே நடைபெற்றது (10-6 84). மாண்புமிகு பாசனத் துறை அமைசசர் திரு ஒய். எஸ். எம். யூசுப் தலைமையில், காயிதே மில்லத் அவர்களின் திருவுருவப் படத்தை மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் துறை அமைச்சர் திரு எஸ். என். ராஜேந்திரன் திறந்து வைத்தார்.





# தகுதிக்குத் தகுதி

இப்போது நுழைவுத் தேர்வை எதிர்க்கிறார்கள்; இதனால் யாருக்கு என்ன நன்மை?

ஆயிரம்-பத்தாயிரம் லட்சம் ரூபாய் என்று லஞ்சம் வாங்கினார்கள் என்றார்கள். இப்போது அதற்கு வழியே இல்லையே. நுழைவுத் தேர்வில் பதில்கள்தான் கொடுக்கப்படுகின்றன. கேள்விகள் இல்லை. அதில் சரியான பதிலை 'டிக்' செய்யவேண்டும். அதாவது கோடு போடவேண்டும். அவன் போடுகிற கோடு அவன் தனக்கே போட்டுக்கொள்கிற கோடு. யாரும் இதில் தலையிட முடியாது. சிபாரிசு பண்ண முடியாது. இதைத் தவறு என்று சொல்பவர்களும் நாட்டில் இருக்கின்றார்கள்,

இதை எதிர்த்தால் ஏழைகளுக்கு எப்படி விமோசனம் கிடைக்கும்?



இந்த அரசைப் பொறுத்தவரை தகுதியானவர்களுக்குத் தகுதியான இடம் இருக்கும்.

—மாண்புமிகு முதல்வர்



# நுழைவுத் தேர்வை மகிழ்வோடு வரவேற்கிறேன்

"தொழிற் கல்லூரிகளிலும் மருத்துவக் கல்லூரிகளிலும் மாணவர்கள் சேர நுழைவுத் தேர்வு நடத்தப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்து இருப்பதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

பிற்பட்ட சமூகத்தினிடமும், தாழ்த்தப்பட்ட சமூகத்தினரிடமும் எனக்கு மிகவும் அக்கறையுண்டு. இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஏழையாகவும், பலவீனமானவர்களாகவும் இருந்து, அறிவாற்றல் உள்ளவர்களாக விளங்கினால் அப்படிப்பட்டவர்கள் முன்னுக்கு வர ஏற்பாடு செய்தால் பிற்பட்ட சமூகம் உயர்ந்த நிலைக்கு வரும்.

இந்த அடிப்படையில்தான் தமிழக முதல்வர் நுழைவுத் தேர்வு முறையை அறிவித்து இருக்கிறார் என்று நினைக்கிறேன்.

வேலூர் மற்றும் பாண்டிச்சேரி மருத்துவக் கல்லூரிகளில் நுழைவுத் தேர்வு நடந்து கொண்டுதானே இருக்கிறது? அதனால் நல்ல பலன் ஏற்படாமலா போய்விட்டது?

நேர்முகப் பேட்டி நடத்துபவர்கள் மனிதர்கள்தானே அவர்களும் சில சமயம் விருப்பு, வெறுப்பு உணர்வுக்கு ஆளாக நேரிடும். இது நேர்முகப்பேட்டியில் கலந்து கொள்பவரைப் பாதிக்கக்கூடும்.

## 15ஆம் ஆண்டில் 'தமிழரசு'

'தமிழரசு' இதழ் தனது பதினான்கு ஆண்டுப் பயணத்தை முடித்துப் பதினைந்தாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்கிறோம். எங்களுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வரும் எழுத்தாளர்கள், விளம்பரதாரர்கள், வாசகர்கள், முகவர்கள் ஆகியோருக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்




தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2015
ரக்தாக்ஷி — ஆனி 18
மலர் : 15 இதழ் : 1
1-7-1984

நுழைவுத் தேர்வு முறையால் பிற்பட்ட மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பது தவறு. தகுதிக்கு உரிய இடம் தரக்கூடாதா? பல மாநிலங்களில் இதுபோன்ற நுழைவுத் தேர்வு நடத்தப்படுகிறது; சிலர் குறிப்பிடுவதுபோல் பிற்பட்ட மாணவர்களுக்கும், கிராமப்புற மாணவர்களுக்கும் என்று இம்முறையில் அங்கெல்லாம் கூடுதல் மதிப்பெண் எதுவும் தருவதில்லை. அப்படி மதிப்பெண் தருவது முறைகேட்டை அதிகரிக்கச் செய்யாதா?

மாண்புமிகு கல்வி அமைச்சர் **திரு. செ. அரங்கநாயகம்**

இந்த நிலை நுழைவுத்தேர்வு முறையில் ஏற்பட வழி இல்லை. மாணவனின் விடைத் தாளை கம்ப்யூட்டர் திருத்தும் என்பதால் தகுதிப் படிதான் மதிப்பெண் கிடைக்கும்.

மேலும் முன்பு இருந்ததைப் போலவே நுழைவுத்தேர்வு முறையிலும் இட ஒதுக்கீடு பின்பற்றப்பட இருக்கிறது. இந்நிலையில் கிராமப்புற மாணவர்கள் நன்றாகப் படித்தால் அவர்களுக்கு உரிய இடம் கிடைத்துவிடும்.

நுழைவுத்தேர்வு முறையை ஆட்சேபிப் பவர்களை அரசியல் ரீதியில் பார்க்கப்போனால் அவர்கள் பிற்பட்ட மக்கள் நலத்திலோ, அவர் களுடைய நிலையை உயர்த்துவதிலோ அக்கறை கொண்டவர்கள் அல்ல என்பது தெளிவு ஆகிறது.

அவர்களுடைய பேச்சைக் கேட்டால் கிராமத்தவர் கிராமத்திலேயே அழுந்திக்கிடக்க வேண்டியதுதான்!

**திரு-எம். பக்தவத்சலம்**
முன்னாள் முதல்வர்.

# நுழைவுத் தேர்வால் பாதிப்பா?

**போ**றியியல் மற்றும் மருத் துவக் கல்லூரிகளில் நேர்முகப் பேட்டிக்குப் பதிலாக நுழைவுத் தேர்வு முறையைத் தமிழக முதல்வர் அறிவித்து இருக்கிறார்.

முன்பு இருந்ததை விட இது நல்ல முறை. இதிலே கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லை.

நேர்முகப் பேட்டியில் வேண் டியவர், வேண்டாதவர் என்ற பாரபட்சம் ஏற்படச் சாத்தியம் உண்டு.

அதனால் ஏற்படும் பாதிப்பு எப்போதும் இருந்து வந்தது. ஆனால் நுழைவுத் தேர்வில் கலந்து கொண்டு எழுதும் மாணவர்களின் அறிவுத்திறனைச் சோதிக்கும் வகையில் வினாக் களுடன் அவற்றிற்கு உரிய விடைகளும் தரப்படும் என்றும் அந்த விடைதான் கம்ப்யூட்டர் மூலம் திருத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது அறி வுக்கு முதலிடம் ஏற்படுத்தும்.

நுழைவுத் தேர்வு முறையால் பிற்பட்டோர் பாதிக்கப்படுவார் கள் என்று சிலபேர் சொல் கிறார்கள்.

பிற்பட்டோருக்கு இப்போ துள்ள இட ஒதுக்கீட்டுச் சலுகை நுழைவுத் தேர்வு முறையிலும் பின்பற்றப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டுள்ளது. அப்படி



இருக்கையில், பிற்பட்டோர் பாதிக் கப்படுவார்கள் என்று சொல்வது எப்படிச் சரியாகும்?

பிற்பட்டோரில் பலர் இன்று நல்ல வசதியுடன் வாழ்கிறார்கள். அப்படி இருந்தும் அவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகையைப் பயன்படுத்த முனையும்போது அதே பிற்பட் டோரில் ஏழ்மைநிலையில் உள்ள வர்கள் கதி என்னாவது?

நானும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன்தான். எங்கள் குடும் பத்தில் 2 தலைமுறைகளாகவே எல்லோரும் பட்டதாரிகளாக இருந்து வருகிறார்கள். நாங்களும் எங்களுக்கு வழங்கப் பட்டுள்ள சலுகையைப் பயன்படுத்திக் கொண்டால் அது எப்படிச் சரியாகும்?

பன்னிரெண்டாம் வகுப்பில் தேர்வு எழுதி அதற்கான மதிப் பெண்கள் பெற்றுவிட்ட பிறகு மீண்டும் ஒரு எழுத்துத்தேர்வு எதற்கு என்று கேட்ப வர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவது - இந்தக் கேள்வி முறை வேறு; நுழைவுத் தேர்வில் பின்பற்றப்பட உள்ள கேள்விமுறை வேறு என்பது தான்.

பள்ளிகளில் மாணவர்கள்

எழுதும் விடைத்தாள்களைப் பலபேர் திருத்துகிறார்கள், அதனால் மதிப்பெண்களில் வித்தியாசம் ஏற்பட இடமுண்டு.

ஆனால் நுழைவுத் தேர்வு முறையில் கேள்வியுடன் பதில்கள் தரப்பட்டு இருக்கும். சரியான விடை எது என்று கண்டுபிடித்து 'டிக்' அடிப்பது மட்டுமே தேர்வு எழுதும் மாணவனின் வேலை. இந்தவிடைத்தாளை கம்ப்யூட்டர் திருத்தும் எனப்படுவதால் ஏறுமாறாக மதிப்பெண் கிடைக்க இடமில்லை.

நுழைவுத் தேர்வுமுறையால் கிராமங்களில் வாழும் பிற்பட்ட மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சிலர் கூறுகிறார்கள். அவர்களுடைய நலனுக்காகத் தமிழக முதல்வர் வருடாந்திர வருமானம் 9 ஆயிரம் ரூபாய் என்ற முறையை அறிவித்தார். அப்போது அவர்கள் அதை எதிர்த்தது ஏன்?

கிராமத்தில் வாழும் நபரின் வருவாய் மற்றும் அவர் ஈடுபட்டிருக்கும் தொழில் ஆகியவற்றைக் கொண்டே அவர் பிற்படுத்தப்பட்டவரா என்று தீர்மானிக்க வேண்டும் என்பதே என்னுடைய கருத்து. அவருக்குத்தான் பிற்பட்டோருக்குரிய சலுகை தரப்படவேண்டும்.

சிலர் அறிவித்துள்ள போராட்டம் வெறும் அரசியல் அடிப்படையிலான போராட்டமே தவிர உண்மையான பிரச்சினைகளுக்கான போராட்டம் அல்ல.

புதிய நுழைவுத் தேர்வு முறையின் காரணமாக எவ்விதப் பாதிப்பும் ஏற்பட இடமில்லை.

**திரு. சி. சுப்பிரமணியம்**
**(முன்னாள் மத்திய அமைச்சர்)**

## நுழைவுத் தேர்வால் நன்மை

நடப்புக் கல்வி ஆண்டில் இருந்து தொழில் பயில் கல்லூரிகளில் சேரும் மாணவர்களுக்கு நுழைவுத்தேர்வு நடத்துவது என்று தமிழக அரசு உத்தேசித்து இருப்பதைத் திராவிடர் கழகம் மற்றும் தி.மு.க. தலைவர்கள் கடுமையாக ஆட்சேபித்து இருக்கிறார்கள்.



காங்கிரஸ் ஆட்சி காலத்திலிருந்தே தொழில் பயில் கல்லூரிகள் அல்லது அரசுப் பணிகளில் சேர பின்பற்றப்பட்டுவரும் நேர்முகப் பேட்டி முறை பல்வேறு நிர்வாகச் சீர்கேடுகளுக்கும் இடமளித்திருப்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆட்சியில் அமர்ந்திருக்கும் அரசியல் கட்சியைப் பொறுத்து அதில் வித்தியாசம் இருக்கும்.

மிகச் சிறந்த மாணவர்களைத் தவிர மற்றவர்கள் தொழில் பயில் கல்லூரிகளிலும், அரசின் முதல் மற்றும் இரண்டாம் பணி நிலைகளிலும் சேர எந்தெந்த முறைகள் எல்லாம் கையாளப்படுகிறது என்பது தெரிந்த விஷயம்.

நேர்முகப் பேட்டி முறையால் ஏற்படும் நிர்வாகச் சீர்கேடுகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க நுழைவுத் தேர்வு முறையைக் கொண்டு வருவதுதான் அரசுக்கு உள்ள ஒரே வழி ஆகும். இதில் இரண்டு கருத்துக்களுக்கு இடம் இருக்க முடியாது.

இது நீண்டகாலமாக எதிர்பார்த்துஇருந்த சீர்திருத்தம்ஆகும்.

உயர் அதிகாரிகளின் குழந்தைகள் மற்றும் பணக்காரர்கள், அரசியல் கட்சியினர் ஆகியோர் இந்த ஒதுக்கீடு செய்யப்படும் கோட்டாவில் அதிகபட்ச இடத்தை எடுத்துக்கொள்வதற்கு இடமளிக்காமலும் பெரிய நகரங்கள் மற்றும் கிராமங்களிலிருந்து ஆஜராகும் மாணவர்களுக்கிடையே உள்ள இடைவெளி மிகக் குறைந்த அளவே உள்ளவாறு குறைப்பதற்கும் இந்த முறை வழிவகுக்கும்.

சட்டசபை வாக்குவாதத்தில் கல்வி அமைச்சர் அரங்கநாயகம் பேசுகையில் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் 50 சதவிகித ஒதுக்கீடு கோட்டா முறை மிகத் தீவிரமாகப் பின்பற்றப்படும் என்று உறுதி அளித்துள்ளார்.

நுழைவுத் தேர்வு கம்ப்யூட்டர் மூலம் மதிப்பிடப்பட்டு முடிவுகள்

## சிறந்த முறை



**தகுதியின் அடிப்படையில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு நுழைவுத் தேர்வு மூலம் தேர்ந்தெடுப்பதுதான் சிறந்த முறையாகும். இந்த நுழைவுத் தேர்வுமுறை, சுலபமாக மாணவர்கள் எளிதில் புரிந்துகொண்டு தேர்வில் வெற்றி பெற ஏதுவாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்ற உண்மையையும் குறிப்பிடத்தான் வேண்டும்.**

**— திரு ஜி.ஆர். தாமோதரன்,**
**கல்வி நிபுணர்**

அறிவிக்கப்படும் என்று பத்திரிகைகள் வாயிலாக அறிய முடிகிறது. கம்ப்யூட்டர் முறைப்படி விடைத்தாள்கள் திருத்தப்படும் என்று முதல்வர் உறுதி அளித்துள்ளார்.

அகில இந்திய பின்தங்கிய மக்கள் அமைப்பின் தலைவர் என்ற முறையில் பின்தங்கியவகுப்பினருக்குப் பொருளாதார முறையை (வருட வருமானம் ரூ. 9 ஆயிரம் என்பதை) செயல் படுத்துமாறு தமிழக முதல்வரைக் கேட்டுக் கொள்கிறேன்.

நுழைவுத் தேர்வு முறை என்ற சீர்திருத்த முறையை மருத்துவ, பொறியியற் கல்லூரிகளுக்குக் கொண்டு வருவதை மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் நீதி, நேர்மை இருக்க வேண்டும் என்று விரும்பும் ஒவ்வொருவரும் வரவேற்பார்கள்.

**திரு இ. பி. ராயப்பா,**
ஐ.ஏ.எஸ்.,
முன்னாள் தலைமைச் செயலர்.



* யுகம் யுகமாக இருந்து வருவதாகக் கூறப்படும் ஏற்பாடுகளை நாம், திருத்தி அமைக்க விரும்புகிறோம். மமதை மலைக்கு வேட்டு வைக்கிறோம். நம்மீது சிறு சிறு துண்டுகள் சிதறி விழுந்து, மண்டையைப் பிளக்கின்றன என்றால், நாம் வைத்த வேட்டு, மலையைப் பிளந்து வருகிறது என்று பொருள்! மலையைப் பிளக்கும் காரியத்தில் இறங்கி விட்டு, மலர் தலைமீது விழும் என்று எதிர்பார்க்க முடியாதல்லவா!

—பேரறிஞர் அண்ணா

## நம்பிக்கை நட்சத்திரம்

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தில் ஏற்படும் பலன்கள் கல்லின் மேல் எழுத்தாக இருப்பதை, ஏற்கெனவே பல ஆய்வுகள் புலப்படுத்தியுள்ளன. இப்பொழுது மதுரையில் உள்ள காந்தி கிராமப் பல்கலைக் கழகம் நடத்திய ஆய்வும் இதை மெய்ப்பித்துள்ளது.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் தலைவர் டாக்டர் பி. எஸ். நாகராஜன் தலைமையில், அந்தப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திரு என். நாராயணசாமி, திரு ஆர். தண்டபாணி ஆகியோர் இந்த ஆய்வை 6 கிராமங்களில் நடத்தினர்.

ஆய்வு புலப்படுத்தும் ஆணித்தரமான உண்மைகள் :—

* சத்துணவுத் திட்டத்தால் கிராமப்புறப் பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது.

* சத்துணவுத் திட்டத்தில் கிராம மக்கள் மிகுந்த அக்கறை செலுத்துவதோடு, தங்களது குழந்தைகளின் எதிர்காலம் இந்தத் திட்டத்தால் சிறப்பாக அமையும் என்று நம்புகிறார்கள்.

* முதியோருக்கு உணவளிப்பதை மக்கள் வரவேற்கின்றனர்.

* குழந்தைகளிடையே சமத்துவ மனப்பான்மை வளர்ந்து வருகிறது.





# விண்வெளிப் பயணச் சாதனை

### முதல் அட்டைச் செய்தி

## தமிழகம் பாராட்டுகிறது

மலிஷேவ், ஸ்த்ரெகலோவ் ஆகிய இரு சோவியத் விண்வெளி வீரர்களுடன் இந்திய விமானி ராகேஷ்சர்மா எப்ரல் 3இல் சோவியத் நாட்டிலிருந்து சோயூஸ் டி-11 என்ற விண்வெளிக் கலத்தில் புறப்பட்டு, புறவெளியில் ஏற்கெனவே மூன்று சோவியத் விண்வெளி விமானிகளுடன் பூமியை வலம் வந்து கொண்டிருந்த சல்யூத்-7விண்வெளி நிலயத்துடன் இணைந்து, பிறகு சோயுஸிலிருந்து சல்யூத்திற்கு மாறிச் சென்று, அங்கு விஞ்ஞான ஆராய்ச்சிகள் புரிந்து 11.4.'84 மாலை 4.19 மணிக்கு வெற்றிகரமாக பூமியில் வந்திறங்கினார். அந்தச் சாதனையைப் பாராட்டி அவருக்கும் விண்வெளியில் பறப்பதற்குத் தயாராக இருந்த இந்திய வீரர் ரவீஷ்மல்ஹோத்ரா அவர்கட்கும் தமிழக அரசின் சார்பில் வரவேற்பும் பாராட்டும், விருந்தும் 4.6.84 அன்று சென்னையில் வழங்கப்பட்டன.

விண்வெளிவீரர்களை விமான நிலையத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு அலுவலர்கள், அரசியல் பிரமுகர்கள், என்.சி.சி. மாணவ மாணவியர் ஆகியோர் வரவேற்றனர்.

விண்வெளி வீரர்கள் ஆளுநர் மாளிகையில் ஆளுநர் குடும்பத்தினராலும், முதல்வர் குடும்பத்தினராலும் வரவேற்கப்பட்டனர்.

விண்வெளி வீரர்கட்கு, மாலையில் வள்ளுவர் கோட்டத்தில் வரவேற்புக் கூட்டம் மேதகு ஆளுநர் திரு. எஸ்.எல்.குரானா் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைமைச் செயலர் திரு.கு. சொக்கலிங்கம் இ.ஆ.ப., வரவேற்புரை நிகழ்த்தினார். சென்னையில் உள்ள ரஷ்ய நாட்டுத் தூதுவர் பாராட்டுரை வழங்கினார்.

நினைவுப் பரிசுகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்., இந்திய விண்வெளி





வீரர்கட்கு வழங்கிச் சிறப்புரை யாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''விண்வெளி வீரர்களுக்கு இப்பொழுது அளித்து வரும் பாராட்டை இன்னும் சிறப்பாக அளிக்க விரும்பியிருந்தோம். ஆனால் போதுமான கால அவகாசம் இல்லாததால் இது இயலவில்லை. இந்த விண்வெளிப் பயணத்தின் மூலம் அமரர் நேருவின் கனவு நனவாகி இருக்கிறது. இந்தப் பெருமையை இந்தியாவுக்கு வழங்கிய பொதுவுடைமைப் பூங்காவான ரஷ்யாவின் உதவியை எண்ணிப் பெருமைப் படுகின்றேன்.



''இந்த அறிவியல் முயற்சிக்கு நேருவழியில் நின்று உதவிய பிரதமர் இந்திராகாந்தி அவர்கட்கு நாடு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறது. அறிவியல் மேம்பாட்டில் தமிழகத்துக்கு உள்ள ஆர்வத்தை, திறமையை வெளிப்படுத்தவும் இந்தப் பாராட்டு விழா உதவி இருக்கிறது''

சர்மா ஐதராபாத்தில் தொடர்பு வைத்திருந்தவர். மல்ஹோத்ரா சிறிது காலம் தாம்பரத்தில் பணியாற்றியவர்.

''இந்த விண்வெளிப் பயணத்தின் மூலம் இந்தியாவுக்குச்சரிநிகர் பெருமை கிடைக்க காரணமாக இருந்த விண்வெளி வீரர்களைப் பாராட்டுகிறேன்'' என்றார்.

பாராட்டுக்கு நன்றிதெரிவித்து மல்ஹோத்ரா பேசுகையில்,''விண்வெளிப் பயணச் சாதனை பாரத நாட்டு மக்களின் அனைவரின் சாதனையாகும்'' என்றார்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து ராகேஷ்சர்மாபேசுகையில், ''விண்வெளியில் இருந்தபடி இந்தியாவைப் பார்த்தபோது ஏற்பட்ட மகிழ்ச்சியை இன்று அளித்த வரவேற்பிலும் காண்கிறேன். விண்கலத்தில் இருந்து மற்றொரு விண்கலத்திற்கு மாறிய நேரத்தில் இந்தியாவைக் காண முடிந்தது. இந்துமாக் கடலையும், கன்னியாகுமரியையும், இலங்கைப் பகுதிகளையும், இமயமலையையும், அடர்த்தியான அசாம் காடுகளையும் பார்க்க முடிந்தது. நான் பார்த்த காட்சிகளை என்னுடைய வாழ்நாளில் மறக்க முடியாது'' என்றார்.

விழா இறுதியில் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. நா. கிருஷ்ண பாரதி இ.ஆ.ப.,நன்றி கூறினார்.

துவக்கத்தில் இந்திய விண்வெளி வீரர்கள் தாம்பரத்திலிருந்து வள்ளுவர் கோட்டம் வரை திறந்த ஜீப்பில் வந்தனர். மக்கள் இரு பக்கத்திலும் மகிழ்வோடு இருந்து வரவேற்றனர்.

வள்ளுவர் கோட்டத்தில் விண்வெளிவீரர் தம்பதியர்கள்தமிழக வருகையின் நினைவாக மரங்களை நட்டனர்.

இரவு தமிழக அரசின் சார்பில் சென்னை ராஜாஜிமண்டபத்தில் நடைபெற்ற விருந்தில் விண்வெளி வீரர்கள் கலந்து கொண்டனர். செல்வி சொர்ணமுகி நாட்டிய நிகழ்ச்சியைக் கண்டு ரசித்தனர் விண்வெளிவீரர்கள். விண்வெளி வீரர்களின் குடும்பத்திற்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்திய விண்வெளி வீரர்களின் தமிழக வருகை வரலாற்றில் சிறப்பு மிக்க நிகழ்ச்சியாகும் என்றால் மிகையாகாது.

**அ. மருது**




# தமிழினத்தின் அற்புத முத்து

"தமிழர்கள் கல்வி வாய்ப்புகளைப் பெற வேண்டுமென்பதற்காக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்து வளர்த்து வருகின்ற முத்தையாச் செட்டியார் அவர்களின் குடும்பத்தைப் பாராட்ட வேண்டும். செட்டிநாட்டரசரின் திறமை, தகுதி, பண்பு, ஒழுக்கங்களைப் பற்றி இங்கே எடுத்துக் கூறினார்கள். செட்டிநாட்டரசரின் குடும்பத்தை எண்ணிப் பார்த்தால், இப்படிப்பட்ட பணிகளைச் செய்துதான் தங்களை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற நிலையில் அவர்கள் இல்லை. தமிழ் மொழிக்காக மத்திய அரசையே எதிர்த்துப் போராடினார். தமிழ் இசைக்காக அவர் பாடுபட்டார். எத்தனையோ எதிர்ப்புகளுக்கிடையேயும் அவர் தமிழிசையை வளர்த்தார்'' என்று 16.6.84 அன்று சென்னை கலைவாணர் அரங்கில், நகர மக்கள் சார்பில் சென்னை ஷெரீப் அவர்கள் கூட்டிய இரங்கற் கூட்டத்தில், மறைந்த தமிழிசைக் காவலர் டாக்டர் ராஜா சர் முத்தையாச்செட்டியார் அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் புகழாரம் சூட்டினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்:

''சில நாட்களுக்கு முன் முத்தையாச்செட்டியார் எனக்கு டெலிபோன் செய்தார். 'என்ன' என்று கேட்டேன்; 'இந்தி மறுபடியும் வரப்போகிறது தயாராக இருங்கள்' என்றார். அவருக்கு என்ன தேவை? உடல் நிலை இடங்கொடாது என்றிருந்தாலும் தமிழ்மீது அளவிட முடியாத பற்றுக் கொண்டிருந்தார். **27 வயதில் சென்னை மாநகராட்சியின் முதல் மேயரானார். அவரது பணிக்காக மாநகராட்சி வளாகத்தில் சிலை வைக்கப்படும்.**

''அவருடைய டிரஸ்ட்டை அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும். என்று சிலர் சொன்னார்கள். நான் முதலமைச்சராக இருக்கும் வரை அதைச் செய்ய மாட்டேன் என்று கூறினேன். இப்படிப்பட்டவர்கள் பற்றி புத்தகம் எழுத வேண்டும். பிற்பட்ட சமூகத்திற்கு இடம் ஒதுக்கி வைத்து இருக்கிறோம். பிற்பட்ட சமூகத்தில் தகப்பன் என்ஜினீயர், மகன் டாக்டர், பேரன் வழக்கறிஞர். வசதி மிக்கவர்கள்தான் பெறுகிறார்கள். இன்னொரு பிற்பட்ட சமூகத்தில் தந்தை வண்டி இழுக்கிறான். அவனுடைய மகனும் வண்டி இழுக்கும் நிலையில் இருக்கிறான். இத்தகைய நிலையை முத்தையாச் செட்டியார் ஏற்றுக்கொள்ளவில்லை. வசதியில்லாத-பிற்பட்டவர்களுக்குக்கல்வி அறிவுகிடைக்க வழி செய்ய வேண்டும் என்ற கருத்தை முத்தையாச் செட்டியார் கொண்டிருந்தார்''.

சென்னை ஷெரீப் திருமதி சரோஜினி வரதப்பன், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு சை. வே. சிட்டிபாபு, தொழிலதிபர் திரு டி. சி. கோத்தாரி, முன்னாள் தமிழக முதல்வர் திரு. எம். பக்தவத்சலம், டாக்டர் வி. வைத்யசுப்ரமணி அய்யர், டாக்டர் எம்.வி.எம். அழகப்பன், மாண்புமிகு உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி பு. ரா. கோகுலகிருஷ்ணன், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு க. இராசாராம், தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு ஹாஜாசெரீப், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் ஆகியோர், மறைந்த டாக்டர் ராஜா சர் முத்தையாச் செட்டியாரின் பணிகள் குறித்து நினைவு கூர்ந்தார்கள்.



தமிழ்நாடு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களின் 79வது பிறந்தநாள் விழா 26.6.84ல் சென்னை மியூசிக் அகாடமியில் நடைபெற்றது. விழாவில் கலந்து கொண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள், சிலம்புச் செல்வருக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். அவர் எழுதி, பூங்கொடி பதிப்பகம் வெளியிட்ட "விடுதலைப் போரில் தமிழகம்" என்னும் நூல் அரசுடைமையாக்கப்பட்டதற்குரிய ஆணையையும்-நூல் எழுதியமைக்காக ஒரு இலட்ச ரூபாய்க்குரிய காசோலையையும் சிலம்புச் செல்வரிடம் அளித்தார் மாண்புமிகு முதல்வர்.

# படமும் செய்தியும்

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள் தலைமையில், மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தரராஜன் அவர்கள் முன்னிலையில் 24.6.84ல் கடற்கரை, கலைவிழா-குடும்ப நல விழா சென்னையில் நடைபெற்றது. நாடகம், இசை நிகழ்ச்சி நடைபெற்றன.









# பாங்குறப் பணியாற்றும் பத்திரப் பதிவுத் துறை


மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்

**திரு கே. ஏ. கிருஷ்ணசாமி**


பத்திரப் பதிவுத்துறை 1834ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனி காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. இத்துறை 1864ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் தேதியில் ஒரு தனித் துறையாக உருவாக்கப்பட்டது; ஆனால், பத்திரப் பதிவுத்துறைத் தலைவர் என்ற பெயருடன் இவ்வலுவலகம் 1871ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. 113 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கிவரும் இத்துறை, முக்கியமாக 1908ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தை (மத்தியச் சட்டம் 16/1908) செயல்படுத்தி வருகிறது. பொதுமக்களின் சொத்துக்கள் தொடர்பான உரிமைப் பத்திரங்களைப் பாதுகாக்கிறது. உழவர்கள் உட்பட பொதுமக்களுக்குப் பத்திரப்பதிவுத் துறை வழங்கும் 'வில்லங்கச் சான்றிதழின்' அடிப்படையிலேயே கடன் வழங்கப்படுகிறது.

**பல்வேறு வகைச்சட்டங்களை நிருவகித்தல்.**

1908ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தைத் தவிர, பின்வரும் சட்டங்களின் நிருவாகமும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது:

(அ) 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டம் (1.12.80 முதல்).

(ஆ) தமிழ்நாடு 1975ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம்

(இ) தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம்

(ஈ) 1972ஆம் ஆண்டு வணிகம் அல்லாத நிறுவனங்கள் சட்டம் (1.7.81 முதல்)

(உ) 1955ஆம் ஆண்டு இந்து திருமணங்கள் சட்டம்

- (i) 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணங்கள் சட்டம்
- (ii) 1936ஆம் ஆண்டு பார்சி திருமணம், திருமண விலக்குச்சட்டம்
- (iii) 1872ஆம் ஆண்டு இந்தியக் கிறித்துவத் திருமணங்கள் சட்டம்

  1969 ஆம் ஆண்டு பிறப்பு, இறப்புச்சட்டம்

(ஊ) 1932ஆம் ஆண்டு இந்தியக் கூட்டாண்மைச் சட்டம்

(எ) 1886ஆம் ஆண்டு பிறப்பு, இறப்பு மற்றும் திருமணங்கள் சட்டம் (1886ஆம் ஆண்டு மத்திய சட்டம்)

(ஏ) 1961ஆம் ஆண்டு வரதட்சிணைத் தடுப்புச் சட்டம்

— இச்சட்டங்கள் அன்றி ''ஆவணம் எழுதுவோர் உரிமம் வழங்கும் விதிகள்'' மற்றும் ''ஆவண நகல்கள் எழுதும் உரிமம் வழங்கும் விதிகளையும்'' நிருவகிக்கிறது.

இத்துறை காணும் சட்டங்களை நோக்குங்கால், கீழ்க்கண்டவாறு ஒரு மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை பொதுமக்களுக்குச் சேவை செய்து வருகிறது என்பது புலனாகும்.

- குழந்தை பிறந்தவுடன் பிறப்பு பதிவு செய்தல்.

- பின்னர் கல்லூரிப் படிப்பிற்கும் மேற்படிப்பிற்கும் க'-ன் பெற விரும்பினால் சடு ஆவணங்கள் பதிவு செய்தல்.

- இந்து திருமணச்சட்டம் அல்லது தனித் திருமணச் சட்டம் ஆகியவைகளின்கீழ் திருமணங்களைப் பதிவு செய்தல் அல்லது திருமணங்களை நடத்தி வைத்தல்.

- பெண்கள் திருமணங்கள் செய்ய விரும்பும்போது வரதட்சணைக் கொடுமையால் தாமதமானால் அதற்குக் காரணமானவர்களின் மீது வரதட்சணைத் தடைச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுத்தல்.

- சிறுபான்மை சமுதாயமான பார்சி மக்களுக்குத் திருமணம் செய்யவும் தேவையானால் விவகாரத்து செய்வதற்கும் உதவுதல். இந்திய கிறித்துவத் திருமணச் சட்டத்தின் கீழ் திருமணங்களைப் பதிவு செய்தலும், பதிவுகளைப் பாதுகாத்தலும்.

- முதல் தலைமுறையிலிருந்து இரண்டாவது தலைமுறைக்கு வரும்போது அந்த குழந்தை பெரியவராகும்போது அவருக்குரிய பிதுரார்ஜித சொத்துக்களைப் பொறுத்து ஆவணங்களைப் பதிவு செய்தல், அவைகளுக்கு நகல் வழங்குதல்.

- சிறு துளி பெருவெள்ளம் என்ற முதுமொழிக்கேற்ப சேமிப்புப் பழக்கத்தை மக்களிடையே ஊக்குவிக்க சிட்டு நிதி நிறுவனங்களைப் பதிவு செய்தல், சீட்டுச் சந்தாதாரர்களின் பணத்தை ஒழுங்காக வழங்க உதவுதல்.

- சமூக, பொருளாதார, சமய மற்றும் பொழுதுபோக்கு சங்கங்களை தமிழ்நாடு சங்கங்களின்சட்டத்தின் படி பதிவு செய்தலும், நிருவகித்தலும்.

- கூட்டு வணிகச் சட்டத்தின்கீழ் வியாபார நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

- வயோதிக காலத்தில் சொத்துக்களைப்பொறுத்து ஏற்பாடு செய்ய இரகசியமாக உயில்களைப் பாதுகாத்தல், உயில் ஆவணங்களைப் பதிவு செய்தல்

- மனிதன் இறந்து விட்டால் அதன் பதிவையும் செய்கிறது.

**இந்திய முத்திரைச் சட்டம்.**

(அ) 1.12.'80 முதல், வருவாய் வாரியம் கலைக்கப்பட்டது. பதிவுத் துறைத் தலைவர் முக்கிய வருவாய்க்கட்டுப்பாட்டு அதிகாரியாக நியமிக்கப்பட்டு, வருவாய் வாரியம் ஆற்றிய பணிகளை ஆற்றி வருகிறார். பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் தனியாக ஒரு பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) மேற்படி சட்டமும் மற்ற சட்டங்களும் பதிவுத்துறையால் நிருவகிக்கப்படுவதால் துணைப் பதிவுத் துறைத்தலைவர் தரத்தில் ஒரு சட்ட அலுவலர், பணியாளர்களுடன் 1.8.'81 முதல், பதிவுத் துறை அலுவலகத்தில் நியமிக்கப்பட்டு, பணிபுரிந்து வருகிறார்.

(இ) முத்திரைச் சட்டத்தின்கீழ் கட்டடங்களின் அங்காடி மதிப்பினை நிர்ணயிப்பதற்காக உதவி நிருவாகப் பொறியாளர் பணிபுரிந்து வருகிறார்.

(ஈ) முத்திரைத்தாள் விற்பனையாளர்களை நியமிக்கும் அதிகாரம் வட்டாட்சியருக்குப் பதிலாக மாவட்டப் பதிவாளர்களுக்கு 10.11.'82 நாள் அரசாணைப்படி வழங்கப்பட்டுள்ளது.

(உ) சொத்துக்கள் மதிப்பு நிர்ணயித்து வழிகாட்டிப் பதிவேடுகள் 1981ல் தயாரிக்கப்பட்டன. இந்தச் சந்தை மதிப்பின் மாற்றத்தால் கீழ்க்கண்டவாறு அரசுக்கு முத்திரைத் தீர்வை வருவாய் கிடைத்துள்ளது.

| | |
|---|---|
| 1980 —81 | ரூ 53.96 கோடி |
| 1981 —82 | ரூ 64.98 கோடி |
| 1982 —83 | ரூ 74.42 கோடி |
| 1983 —84 | ரூ 90.22 கோடி |

## எக்ஸ்ரே பிலிம் உற்பத்தி

இந்தியாவில் இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் தயாரிப்பு நிறுவனம் ஒன்றுதான் எக்ஸ்ரே பிலிம்களைத் தயாரித்து வருகிறது. ஓராண்டுக்கு 38.20 லட்சம் சதுர மீட்டர் பிலிம் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1983-84ஆம் ஆண்டு 31.36 லட்சம் சதுர மீட்டர் பிலிம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. நாட்டின் தேவை, தக்க விதத்தில் நிறைவு செய்யப்படும் வகையில் எக்ஸ்ரே பிலிம் விநியோகிக்கப்பட்டுள்ளது. 1984 மார்ச் மாத இறுதியில் மேற்படி நிறுவனத்தில் 4 லட்சம் சதுர மீட்டர் பிலிம் இருப்பில் இருந்தது. சென்ற ஆண்டு அரசு மருத்துவமனைகளுக்குத் தேவைப்பட்ட பிலிம்களை விநியோகம் செய்திருக்கிறது இந்த நிறுவனம்.

(ஊ) அனைத்து சார்பதிவகங்களிலும், நீதித் துறை சார்பற்ற முத்திரைத்தாள்களும், நீதிமன்றக் கட்டணவில்லைகள், நீதிமன்ற முத்திரைத் தாள்களும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

(எ) முத்திரைத் தாள்கள் கிடைக்கப் பெறாமல் ஆவணங்கள் எழுதுவது நடைபெறக் கூடாது என்பதற்காக அடமானம், கிரையம், தானசெட்டில்மெண்டு, பரிவர்த்தனைபோன்ற முக்கிய ஆவணங்களை வெற்றுத்தாளில் எழுதி பதிவுக்குத் தாக்கல் செய்யும்போது முத்திரைக் கட்டணத்தைப் பணமாக வசூலித்து இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 41ன்படி சான்று செய்யவும் சார்பதிவாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.



## சீட்டு நிதிகள் சட்டம்.

சீட்டு நிதி கூடுதல் இயக்குநர் துணைப் பதிவுத்துறை தலைவர் தரத்தில் பணியாற்றுகிறார். சீட்டு நிதி ஆய்வு அதிகாரி சென்னையில் உள்ளார். சீட்டு நிதிகள் மற்றும் சங்கங்கள் சட்டங்களை நிர்வகிக்க 41 சார் பதிவாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(அ) 1982-83ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தம் 19,001 சீட்டு நிதிகள் இயங்கின. 1979-80ஆம் ஆண்டு இறுதியில் மொத்தம் 10,668 சீட்டு நிதிகள் இருந்தன. 1982-83ஆம் ஆண்டின் இறுதியில் சீட்டு நிதி நிறுவனங்கள் பதிவாளரிடம் மொத்தம் 21.74 கோடி ரூபாய் பிணைய வைப்புத் தொகையாக இருந்தது. 1979-80ஆம் ஆண்டின் இறுதியில் இத்தொகை ரூ.12.53 கோடியாக இருந்தது.

(ஆ) சீட்டு நிதியில் சேருபவர்களின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு சட்டப்படியான விதித்துறைகளுடன் கூடிய 1982ஆம் ஆண்டு மத்தியச் சீட்டு நிதிகள் சட்டத்தை மத்திய அரசு 13.4.'84 முதல் இம்மாநிலத்தில் செயலுக்குக் கொண்டு வந்துள்ளது. இச்சட்டம் தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு சீட்டு நிதி நிறுவனங்கள் சட்டத்திற்குப் பதிலாகச் செயல்படும்.

## தமிழ்நாடு சீட்டு நிறுவனத்தின் தோற்றம்.

1956ஆம் ஆண்டு நிறுவனங்களின் சட்டத்தின் கீழ் 11.1.1984 ஆம் நாளன்று பதிவு செய்யப்பட்டுள்ள சீட்டு நிறுவனம், சீட்டுக்களை வெளியிடுவதற்கான தொடக்க ஏற்பாடுகளைச் செய்துவருகிறது. இந்நிறுவனம் தொடங்கும் சீட்டுகளில் பொதுமக்கள் அரசுப் பணியாளர்கள், ஓரளவு அரசுத் தன்மை வாய்ந்த பணியாளர்கள் ஆகியோர் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

## பதிவுத்துறையில் முன்னேற்றம் :

(அ) பதிவத்துறை நிர்வாகத்தினைச் செம்மைப்படுத்த பெரிய பதிவு மாவட்டங்களைப் பிரித்து, கூடுதல் மாவட்டங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. 1980-81ல் 40 பதிவு மாவட்டங்களே இருந்தன. இரண்டு இரண்டாக ஒவ்வொரு ஆண்டும் பதிவு மாவட்டங்கள் திறக்கப்பட்டு, 1983-84ல் மொத்தம் 46 பதிவுமாவட்டங்கள் உள்ளன.

(ஆ) இதனைப் போன்றே 1980-81ஆம் ஆண்டில் நம் மாநிலத்தில் 435 சார்பதிவகங்கள் இருந்தன. 1981-82ல் 15 சார்பதிவகங்களும்; 1982-83ல் 30 சார்பதிவகங்களும்; 1983-84ல் 30 சார்பதிவகங்களும் திறக்கப்பட்டு தற்போது 510 சார்பதிவகங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. மூன்று ஆண்டுகளில் 75 சார்பதிவகங்கள் திறக்கப்பட்டுள்ளன. தற்போது பத்திரப் பதிவு கிளை அலுவலகங்கள் உட்பட 556 பத்திரப் பதிவு அலுவலகங்கள் உள்ளன. இந்தப் பதிவகங்களில் பல, பொதுமக்களின் நன்மையைக் கருதி மலைப் பகுதியிலும், கிராமங்களிலும்கூட திறக்கப்பட்டுள்ளன. 1984-85ஆம் ஆண்டில் 4 புதிய சார்பதிவகங்கள் திறக்கப்படும்.

(இ) சிறந்த நிருவாக நலனுக்காக 1982 முதல், பதிவுத் துறை நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் ஒவ்வொரு துணைப் பதிவுத் துறைத் தலைவரின் கீழ் இயங்கி வருகின்றது.

(ஈ) கூடுதல் சீட்டு இயக்குநர், சட்ட அலுவலர், முதுநிலைக் கணக்கு அலுவலர் உதவி நிர்வாகப் பொறியாளர் மற்றும் துணை காவல் கண்காணிப்பாளர் (கண்காணிப்புப் பிரிவு) பணியில் உதவி செய்கிறனர்.

(உ) சார்பதிவகங்களில் கணக்குகளைத் தணிக்கை செய்ய 24 மாவட்டப் பதிவாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ஊ) பத்திரங்களின் நகல்களை விரைவில் அளிக்க 15 நகல் எடுக்கும் இயந்திரங்களும் மற்றும் 42 தட்டச்சுகளும் சில அலுவலகங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும்

இதனைப் படிப்படியாக விரிவாக்கக் கருதப் பட்டுள்ளது.

(எ) பகுதி II திட்டத்தின் கீழ் இள நிலை உதவியாளர்கள் புதிதாக நியமிக்கப்படு கின்றனர். வேலைப்பளு மிகுவதால் பொது மக்களின் பணிக்கு ஊறுநேரக்கூடாதுஎன்னும் கருத்தில் இத்துறையில் பன்னெடுங்காலமாகத் தற்காலிகப் பிரிவு எழுத்தர்கள் எனும் ஒரு பிரிவினர் பணி செய்து வருகின்றனர். இவர் களின் பணி நிரந்தரம் அற்றது. ஆதலின், ஓய்வு ஊதியத்திற்கு இவர்கள் உரியவர்கள் அல்லர். ஆனால் இளநிலை உதவியாளர்களின் பணிக்கு ஒத்த பணியினை இவர்கள் செய் வதைக் கருத்தில் கொண்டு, மற்றைய அரசு ஊழியர்கள் பெறும் பயன் அனைத்தும் இவர்கள் பெறும் பொருட்டு, 329 தற்காலிக தகுதி வாய்ந்த பிரிவு எழுத்தர்கள் பதவிகளை அரசு இளநிலை உதவியாளர் பதவியாக உயர்த்தியுள்ளது. இன்னும் 130 தகுதியற்ற தற்காலிகத் (எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெறாத) பிரிவு எழுத்தர்கள் பணிபுரிகின்றனர்.

(ஏ) ஒரு சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணங்களை ஒழுங்குபடுத்த ஆவண எழுத் தர் ஒருவரும், முக்கியமான மேற்படி ஆவ ணங்களைப் பாதுகாக்க இரவுக் காவலர் ஒரு வரும் நியமிக்கப்பட்டு வருகின்றனர். இந் நிலையில் ஒரு சார்பதிவகம் அடக்கமான அலு வலகம் ஆகிறது.

(ஐ) தொலைபேசிகள், ஊர்திகள், பொது மக்கள் உட்கார நாற்காலி முதலியவை வழங் கப்படுகின்றன.

**ஆவணங்கள் எழுதுவோர் உரிம விதிகள் :**

விதிகளின் கீழ் 31.12.'83 ஆம் நாள்வரை வழங்கப்பட்டுள்ள உரிமங்களின் விவரம் வரு மாறு:

| | |
|---|---|
| மாநில உரிமங்களின் எண்ணிக்கை | 1,211 |
| மாவட்ட உரிமங்களின் எண்ணிக்கை | 4,756 |
| துணை மாவட்ட உரிமங்களின் எண்ணிக்கை | 3,221 |
| மொத்தம் | 9,188 |

மொத்தம் ரூ. 7,59,950 உரிமக் கட்டண மாக வசூலிக்கப்பட்டுள்ளது.

இந்த சில ஆண்டுகளுக்குள் பொதுமக்க ளுக்குத் தொண்டு செய்யும் சிறந்த துறை யாகப் பதிவுத்துறை செயல்பட்டு வருகிறது.

## கடலிலிருந்து மின்விசை உற்பத்தி

கடலில் பொதிந்திருக்கும் சக்தியைப் பயன்படுத்தி மின் விசை உற்பத்தி செய்யும் சாத்தியப்பாடு பற்றிய ஓர் அறிக்கையை, சோவியத் விஞ்ஞானப் பேரவையின் கடல் இயல் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளின் குழு ஒன்று லெனின் கிராடில் வெளியிட் டுள்ளது.

உலக மாக்கடல்களிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 100 மில்லி யன் / மில்லியன் கிலோவாட் மின்சக்தியை உற்பத்தி செய்ய முடியுமென்று அவர்கள் மதிப் பிடுகின்றனர். கடல் நீர் ஆழத் தின் பல்வேறு நிலைகளிலும் வெப்பநிலை வேறுபடுகிறது. இந்த வேற்றுமை அலைகள், கடல்-எழுச்சி, ஆற்று நீர் கடலில் கலக்கும் இடத்தில் ஏற்படும் அழுத்த வேறுபாடு, கடலில் ஏற்படும் நீரோட்டம் முதலிய சக்திகளைப் பயன் படுத்தி மின்விசையை உற்பத்தி செய்யலாம் என்பது விஞ்ஞானி களின் கருத்து.

—சோவியத் செய்தி நிலையம்



## ரயில் பெட்டித் தொழிற்சாலைக்கு நவீன கம்ப்யூட்டர்

பெரம்பூர் இணைப்பு ரயில் பெட்டித் தொழிற்சாலையில் 4-ஆம் தலைமுறையைச் சேர்ந்த பெரிய கம்ப்யூட்டர் ஒன்றை வாங்கியிருக்கிறார்கள்.

புள்ளி விவரச் சேகரிப்பு மற் றும் தகவல் தொடர்பு பிரிவை நவீனப்படுத்த இந்தத் தொழிற் சாலை இந்தக் கம்ப்யூட்டரை வாங்கியிருக்கிறது. தேவை யான விவரங்களைக் கேட்பவர், ஆலையில் வெகு தொலைவில் இருந்தாலும் அவர் முன் நிற்கும் ஒலித்திரையில் அந்த விவரங் கள் விழும். இப்படி இந்த ஆலையின் நாலாபக்கத்தில் உள்ள ஒலித்திரைகளோடு இணைக்கப்பட்டுள்ள இந்த அதி நவீன கம்ப்யூட்டர் இங்கு ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டு வந்த 2-ஆம் தலைமுறைக் கம்ப்யூட்டருக்கு ஓய்வு அளித் துள்ளது.




மாண்புமிகு செய்தி -
அறநிலையத்துறை அமைச்சர்
**திரு இராம. வீரப்பன்**


# சமூக வனங்களின் வளர்ச்சியும் பயனும்

**ம**னித குலத்தின் நலனுக்கென இயற்கை அளித்த அருட்கொடைகளில் காடுகள் முக்கியமானவைகளாகும்.

''அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்
அழகாய் முத்துக்குவியும் கடல்கள்
முகிலும் செந்நெலும் முழங்கும் நஞ்சை
முல்லைக் காடுமணக்கும் நாடு''

என்ற **பாவேந்தர்** பாரதிதாசனின் பாடல் தமிழ்நாட்டின் இயற்கை வளத்தையும் காட்டு வளத்தையும் சிறப்பித்துக் கூறுகிறது.

நாட்டில் மக்கள் பெருக்கம் வளர வளர, நாகரிக வளர்ச்சியின் பெயரால், நகர வளர்ச்சியின் பெயரால், தொழில் வளர்ச்சியின் பெயரால் காடுகள் கடந்த காலங்களில் கண் மூடித்தனமாக அழிக்கப்பட்டுவிட்டன.

கடந்த நூற்றாண்டு ஆரம்பத்தில் இந்தியத்துணைக்கண்டத்தில் மொத்த நிலப்பரப்பில் 37 விழுக்காடு அளவிற்குக் காடுகள் இருந்தன; அவைகள் வளமான காடுகளாகவும் இருந்தன; ஆனால் இன்று 23 விழுக்காடுதான் இந்தியாவில் காடுகள் இருக்கின்றன. அதுவும் தமிழகத்தில் 16 விழுக்காடுதான். அவற்றில் கணிசமான அளவு வளமற்ற வறண்ட காடுகள்; 10 விழுக்காடுதான் வளமிக்க உருப்படியான காடுகளாகத் தேறும் என்ற அவல நிலையில் தமிழகமுள்ளது.

ஒரு நாட்டின் ஆரோக்கியமான பொருளாதார வளர்ச்சிக்கு அந்த நாட்டின் மொத்த நிலப்பரப்பில் குறைந்தது 33 விழுக்காடு அளவு, காடுகளாக இருக்க வேண்டும் என்பது அறிவியல் அறிஞர்கள் கண்ட முடிவு. இந்தக் குறைந்தபட்ச அளவிற்கும் மிகக் குறைவாக நம்நாட்டில் காடுகள் இருந்ததால், நம்நாட்டின் காட்டு வளத்தினை விரிவுபடுத்துவதற்கும், இருக்கும் காடுகளின் வளத்தைப் பெருக்குவதற்கும் அரசும் அறிஞர்களும் தீவிர சிந்தனையுடன் செயல்பட முனைந்தனர்.

இதன் விளைவாக 1952ஆம் ஆண்டில் இந்திய தேசிய திருத்திய வனக்கொள்கை உருவாக்கப்பட்டது. அதன்படி வளமிழந்த ஒதுக்கக் காடுகளிலும் அதற்கு அப்பாலே உள்ள அரசு நிலங்களிலும் கிராம நலக் காடுகள் ( Farm Forestry ) எழுப்புவதென இந்தியப் பேரரசு முடிவு எடுத்தது.

இந்தக் கொள்கையைப் பின்பற்றி,சில மாநில அரசுகள்,கிராம நலக் காடுகளை உருவாக்கும் முனைப்பில் ஈடுபட்டன. அவை அங்கும், இங்கும் சாலையோரங்களிலும், கால்வாய்க் கரைகளிலும், சிறு அளவில் மரங்களை நட்டன. பல மாநிலங்களில் இந்தத் திட்டம் வெறும்



கொள்கை அளவிலும் எழுத்தளவிலுமிருந்தது; செயல்படுத்தப்படவில்லை. ஆனால், தமிழக அரசு, கிராம நலக்காடுகள் எழுப்பும் திட்டத்தை 1960 ஆம் ஆண்டிலே முறையாவும், சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் செயல்படுத்தியது.

பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை இதர துறைகளின் பொறுப்பிலிருந்த ஏரி குளங்களிலும் இதர ஊரக புறம் போக்கு நிலங்களிலும் காடுகளிலும் கிராமநலக் காடுகள் வெற்றிகரமாக எழுப்பப்பட்டன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியிலே இவ்விதம் கிராம மக்கள் நல்னுக்காக நாட்டுப்புறங்களில் உற்பத்தி செய்யப்பட்ட ஊரகக் காடுகளின் (Community Forest) பரப்பளவு 41,561 எக்டேர் ஆகும். 1973 ஆம் ஆண்டில் (National Commission on Agriculture) தேசிய வேளாண்மைக் குழு அரசுக்கு அனுப்பிய தன்னுடைய இடைக்கால அறிக்கையில் சமூக வனவியல் திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தியது.

இந்தத் திட்டத்தின் சிறந்த அம்சங்களாவன: அரசுக்குச்சொந்தமான காலி நிலங்கள், புறம்போக்குகள், காடுகள், கால்வாய்கள், சாலையோர நிலங்கள், இருப்புப் பாதை நிலங்கள் போன்ற வெற்று நிலங்களிலெல்லாம், அந்தந்தக் கிராம மக்களுக்குப் பயன்தரும் மரங்களை நட்டு, புத்தம் புதுக் காடுகளை உருவாக்க வேண்டும், இப்பணியில் கிராம மக்களை முடிந்த மட்டும் முழுமையாக ஈடுபாடு கொள்ளச் செய்ய வேண்டும்; சாகுபடிக்குத் தகுதியற்ற தனியார் நிலங்களில், பயன்தரும் மரம் நட்டுத் தோப்புகளை உருவாக்க உதவ வேண்டும்.

தேசிய வேளாண்மைக் குழுவின் மேற்கண்ட பரிந்துரையைப் பின்பற்றி இந்தியப் பேரரசு சமூக வனவியல் திட்டத்தைச் செயல்படுத்த மாநில அரசுகளை வலியுறுத்தி வந்தது. எனவே மாநில அரசுகள் இத்திட்டத்தைச்செயல்படுத்த முன்வந்தன. வெளிநாட்டுப் பொருளாதார உதவியுடன் இத்திட்டத்தை அமல்படுத்த பல மாநில அரசுகள் முனைந்தன.

தமிழ்நாடு அரசும் சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டம் ஒன்றினைத் தயார் செய்தது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் தனித்த ஆர்வத்தாலும், தளராத உழைப்பினாலும், சலியாத முயற்சியாலும் சமூக வனவியல் திட்டத்திற்கான பொருளாதார உதவிக்கு வழிவகை காணப்பட்டது. இத்திட்டத்திற்குப் பொருளாதார உதவி தர அனைத்துலக சுவீடன் வளர்ச்சி நிறுவனம் முன்வந்தது. இந்த உதவியைப் பயன்படுத்தி தமிழக அரசும் 1981ஆம் ஆண்டில் தமிழ்நாடு சமூக வனவியல் திட்டத்தைச் செயல்படுத்தியது.

இந்தத் திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னரே சுமார் இருபதாண்டுக் காலத்தில் தமிழக வனத்துறை கிராம நலக் காடுகள், வனவிரிவாக்கக் காடுகள் உற்பத்தி செய்தல் எனும் திட்டங்களின் மூலம் 1.75 லட்சம் எக்டர்கள் பரப்பளவில் கிராம நலக் காடுகளை உருவாக்கியுள்ளது.

இவ்விதம் அனுபவ முதிர்வும், செயல் திட்ட வடிவமைப்பும் ஏற்கெனவே கொண்டிருந்தது தமிழ்நாடு வனத்துறை, இந்த முன் அனுபவம் காரணமாக, இந்தியாவிலேயே மிகப் பெரிய திட்டமாகிய 'அசுவநி' (SIDA) உதவி பெற்ற இந்த சமூக வனவியல் திட்டத்தினைச் செயல்படுத்துவதில் எழுந்த இடர்ப்பாடுகளையும் சிரமங்களையும் தமிழ்நாடு வனத்துறை இலகுவாகச் சமாளிக்க முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அனைத்துலக சுவீடன் வளர்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் மேற்சொள்ளப்பட்டுள்ள தமிழ்நாடு சமூக வனவியல் திட்டம், வடிவமைப்பில் மட்டுமல்லாது, பொருளாதார ரீதியிலும் இந்தியாவிலேயே மிகப்பெரியதிட்டம்.

இந்தத் திட்டம் 1981 முதல் 1991 முடிய பத்தாண்டுகளில் செயல்படுத்தப்படும். மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 108 கோடி. முதல் கட்டமாக, முதல் ஐந்தாண்டிலும், இரண்டாவது கட்டமாக மீதி ஐந்தாண்டிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. முதல் கட்டமாக 1981 முதல் 1986 முடியவுள்ள ஐந்தாண்டுக்கு இத்திட்டம் செயல்பட மொத்தம் ரூபாய் 45 கோடி நிதி ஒதுக்கீடு பெற்றுள்ளது.

இத்திட்டத்தின்படி முதல் ஐந்தாண்டுக் காலத்தில் 1,76,450 எக்டர் பரப்பளவுள்ள ஊரகக் காடுகளும் (Block Planting) 6075 கி.மீ. நீளமுள்ள சாலை நிழல் மரங்கள், கால்வாய் மரங்கள், இருப்புப் பாதை மரங்கள் (Strip Planting) எழுப்பப்படவிருக்கின்றன. தவிரவும், கிராமப்புற மக்களுக்கு ஊக்குவிப்பு மர வளர்ச்சித் திட்டத்தின் மூலமும் வனவிரிவாக்கத் திட்டத்தின் மூலமும் தங்கள் நிலங்களிலும் வீட்டுக் கொல்லைகளிலும் நடுவதற்கு இலவசமாக

வும், மலிவு விலையிலும் சேர்ந்து வழங்கப்படவிருக்கும் மரக்கன்றுகள் எண்ணிக்கை சுமார் ஐந்து கோடியாகும்.

இம்மாபெரும் திட்டத்தினைச் செயல்படுத்தும் பாங்கினை ஆய்வு செய்து கண்காணிக்கும் பொறுப்பு (Monitoring) வனத் துறைக்கும், அரசுக்கும் தொடர்பில்லாத வெளி நிறுவனங்களிடம் ( External agencies ) ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதாவது (1) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை (2) காந்தி கிராம, கிராமிய பல்கலை கழகம், (3) அண்ணா நிர்வாகக் கல்லூரி, சென்னை(4)பாரதியார் பல்கலைக் கழகம் (5) பாரதிதாசன் பல்கலைக் கழகம் ஆகிய சுதந்தரமாகச் செயல்படும் கல்வி நிலையங்கள் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளன. இந்த நிறுவனங்கள் எவ்வித விருப்பும் வெறுப்புமின்றி, சுதந்தரமாகவும், அச்ச உணர்வின்றியும் செயல்படும் தன்மையதாகும். இது போன்ற ஏற்பாடு இந்திய துணைக்கண்டத்தில் இதுபோல செயல்படுத்தப்படும் எந்தப் பெரிய திட்டத்திலும் கிடையாது என்பது இத்திட்டத்தின் சிறப்பான அம்சமாகும்.

சமூக வனவியல் என்றால் என்ன? மக்கள் ஒத்துழைப்புடன் ஊர்ப்புறங்களிலுள்ள காலி நிலங்களிலெல்லாம் மரங்களை நட்டு வளர்ப்பதும், அதில் வரும் பலன்களையும் வளங்களையும் ஊர் மக்களுக்கே கிடைக்கச் செய்வதுமாகும்.

கிராம மக்களுக்குத் தேவையான உழவுக் கருவிகள், பசுந்தாளுரங்கள், விறகு, சிறுதடிகள் மற்றும் மரங்களில் கிடைக்கும் கனிகள், கொட்டைகள், மாப் பட்டைகள், எண்ணெய்வித்துக்கள் கால்நடைகளுக்குத் தேவையான தீவனம் போன்ற எண்ணிறந்த மர வளங்களை கிராமமக்களுக்கு அவர்கள் குடியிருக்கும் ஊர்ப்புறங்களிலேயே கிடைக்கச் செய்வதற்காக உற்பத்திசெய்யப்படும் காடுகளைத்தான் ஊரகக்காடுகள் என்கிறோம்.

நாட்டுப்புறங்களிலும், பட்டி தொட்டிகளிலும் வாழ்கின்ற வேளாண்மைக் குடிமக்களுக்கும், இதர நலிந்த மெலிந்த பிரிவினராகிய, சமுதாயத்தின் பெரும்பான்மையினரின் நலன்களையும் தேவைகளையும் நிரப்பவிருப்பதால் இந்தக் காடுகள் சமூக நலக்காடுகளென்னும் காரணப் பெயரைக் கொண்டுள்ளன. இந்தக் காடுகளின் சொந்தக்காரரும் நிர்வகிக்கும் எஜமானரும் சம்பந்தப்பட்ட ஊர் மக்கள்தான்; ஆம், சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்கள்!

இத்தகைய சமூக நலக்காடுகளின் திட்டத்தின் தலையாய குறிக்கோள்களாவன .—

மேலே கூறியவாறு கிராம மக்களின் தேவைகளுக்கேற்ற மரங்களை ஊர் புறம்போக்கு நிலங்களிலும் இதர அரசு நிலங்களிலும் நட்டு, கிராம மக்கள் ஒத்துழைப்புடன் ஊரகக் காடுகளை உற்பத்தி செய்வது.

இந்தக் காடுகளில் கிடைக்கும் மர வளங்களை, கிராம மக்களுக்குச் சம அளவில் கிடைப்பதற்கான பணிகளைச் செயல்படுத்துவது.

வேளாண்மைக்கு ஒவ்வாத நிலங்களிலும், கிணற்றுக் கரைகள் வரப்புகள், பண்ணை, வீடுகளைச் சுற்றியுள்ள காலியிடங்கள் போன்ற தனியார் நிலங்களில் மரங்கள் நடுதல், குறுகிய கால மரப் பயிர் சாகுபடி செய்தல் அதற்குத் தேவைப்பட்ட மரக்கன்றுகளை விநியோகம்செய்தல், அவைகளைப் பயிர் செய்வதற்கான தொழில்நுட்ப அறிவினை உதவுதல் இதுபோன்ற வன விரிவாக்கப்பணிகள் மேற்கொள்ளுதல்.

நாட்டுப் புற ஏழை, எளிய கிராமவாசிகட்குக் கூடுதல் வேலைவாய்ப்புகளை உண்டாக்கித் தருதல்.

இத்தகைய கிராம மக்கள் மேம்பாட்டுப் பணிகள் தமிழக வனத்துறையினரால் 1981-ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு மூன்றாண்டுகள் நிறைவு பெறவிருக்கின்றன. இந்த மூன்றாண்டுகளில் 2.5 இலட்சம் எக்டர் பரப்பளவுள்ள ஊரகக் காடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. வன விரிவாக்கப் பணிகளின் பலன்கள் 5,000 கிராமங்கட்குக் கிடைத்துள்ளன. பல லட்சக்கணக்கான கிராம மக்கட்கு வேலை வாய்ப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. மற்றும் குடும்பங்கட்கு கிராம சமூக நல ஊழியர் வேலை கொடுக்கப்பட்டுள்ளன. இவைகள் சிறிய அளவு சாதனைகள் என்று சொல்ல முடியாது.





### தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம்:

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் 1.8.74ல் தோற்றுவிக்கப்பட்டது. முந்திரி, உயர்ரக யூகலிப்டஸ், சவுக்குத் தோட்டங்களை வனத்துறையிடமிருந்து, 1974ல் எடுத்துக் கொண்டது. 1982-83ல் இக்கழகம் 2,107 எக்டேர் பரப்பில் கலப்பின ரக யூகலிப்டஸ் மரங்களையும், 771 எக்டேர் பரப்பில் முந்திரித் தோட்டங்களையும் பயிராக்கியது. 1982-83ல் 1,19,550 டன் கலப்பின ரக யூகலிப்டஸ் மரங்களை, இக்கழகம், தொழிற்சாலைக்கு வழங்கியது. இக்கழகம் 1982ல் இதுவரை இல்லாத அளவுக்கு 1,802.857 டன் முந்திரியைச் சேகரித்துள்ளது.

கலப்பின யூகலிப்டஸ் மரம், முந்திரி, காடுபடுசிறு பொருட்கள், அரக்கு முதலியவற்றை விற்பனை செய்ததன் மூலமாக, இக்கழகம் ரூ. 193.51 லட்சம் வருவாய் ஈட்டியுள்ளது. 1983-84-ல் 2,100 எக்டேர் பரப்பில் கலப்பினரக யூகலிப்டஸ் மரங்களையும், 1,200 எக்டேர் பரப்பில் முந்திரித்தோட்டங்களையும் இக்கழகம் வளர்க்கக் கருதியுள்ளது. மேலும் தற்போதுள்ள முந்திரி விளைச்சலை அதிகரிக்கும் பொருட்டு, முந்திரி பயிராகும் 4,000 எக்டேர் பரப்பில், மும்மரத்தோட்டக் கலைப் பணிகளை (Intensive Cultural Operation) மேற்கொள்ளும்

இந்தத் திட்டப்பணிகள் அதற்கான குறிக்கோள்களை எய்தும் ரீதியிலும், மன நிறைவளிக்கும் வகையிலும் செயல்படுத்தப்படுகின்றனவா என்று ஆய்வு செய்வதற்காக 'அசுவநி' ஆய்வுக் குழுமம் (SIDA Review Mission) தமிழ்நாட்டிற்கு ஆறு திங்களுக்கொருமுறை வருகை தந்து தீவிர ஆய்வுகளை மேற்கொண்டு ஆய்வு அறிக்கைகளை அரசுக்கும் கொடுக்கின்றது.

அத்துடன் கடந்த பிப்ரவரி (84) திங்களில் 'அசுவநி' ஆய்வுக் குழு இயக்குநர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தனர். இந்தக் குழுவில் 'அசுவநி' தலைமை இயக்குநர்சுவீடன் அரசின் முன்னாளைய அமைச்சரொருவர், சுவீடனரசின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொழில் சங்கத் தலைவர்கள் 'அசுவநி' (சீடா) உயர்மட்ட அதிகாரிகள் அங்கம் வகிக்கின்றனர்.

தமிழகத்திலே பின் தங்கிய இராமநாதபுரம் மாவட்டத்திலும் வளர்ச்சியுற்ற மதுரை மாவட்டத்திலுமுள்ள சமூக நலக் காடுகள் பணிகளை இந்தக் குழுவினர் தணிக்கை செய்து, திட்டப் பணிகளை ஆய்வு செய்தனர். தணிக்கை முடிந்த பின், பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி கொடுத்தபோது இந்தக் குழுவின் தலைவர் திரு அண்ட்ரஸ்போர்சி என்பவர், (Andreforsse) 'சமூக வனவியல் திட்டம் முழு மனநிறைவளிக்கும் வண்ணம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப் படுகிறது' என்று மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

கிராமப்புறங்களில் நிலவி வரும் கால்நடைத் தீவனம், எருத்தழை, விறகு போன்ற அத்தியாவசியத்தேவைகளின் பற்றாக் குறைகளைப் போக்க இத்திட்டத்தின் வாயிலாக நல்லதொரு முயற்சி மேற்கொள்ளப் படுகிறது.

**ஆண்டுக்குச் சுமார் ஆயிரம் படித்த இளைஞர்கட்குக் கிராமச் சமூகநல ஊழியர் வேலை கொடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டப் பணிகள் பெரும் வனக்குத்தகைதாரர் மூலம் நிறைவேற்றப்படாமல் கிராம மக்களைக் கொண்டு செயல் படுத்தப்படுவதால் கிராம மக்களுக்குவேலை வாய்ப்புகள் விரிவு படுத்தப்பட்டுள்ளன.**

இயற்கை வள அழிவினால் ஏற்பட்டுள்ள சுற்றுப்புறச் சூழல் அழிவினைத் தடுக்கவும், ஏற்கெனவே அழிந்து சிதைந்து வரும் இயற்கை வளத்தினை மீட்கவும் இத்திட்டம் துணை புரிகிறது.



### தேயிலைத் தோட்டக்கழகம்.

வனத்துறையிடமிருந்து 1976ல் சுமார் 945 எக்டேர் தேயிலைத் தோட்டத்தை எடுத்துக் கொண்டு, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. படிப்படியாக அமைந்த திட்டத்தின்கீழ், கூடுதல் பரப்பில், மேற்கொண்டும் தேயிலையைப் பயிராக்கியுள்ளது.

தற்போது 2,394 எக்டேர் பரப்பில் தேயிலை பயிராகிறது. 1982-83ல் இக்கழகம், தேயிலைத் தூள் முதலியவற்றை விற்பனை செய்வதன் மூலம் ரூ. 495 லட்சம் வருமானம் ஈட்டும். வருவாய் தொடர்பான செலவுகள் சுமார் ரூ. 566 லட்சமாகும். 1983ல் சுமார் 100 எக்டேர் பரப்பில் தேயிலை பயிரிடப்படும். தேயிலைத்தோட்டங்களில்1982-83ஆம் ஆண்டிற்கான தேயிலைத் தளிர் உற்பத்தி 11,524 டன் ஆகும். தற்போது ஆண்டொன்றுக்குச் சராசரியாக 27 லட்சம் கிலோ கிராம் தேயிலைத் தூள் தயார் செய்யப்படுகிறது.

இக்கழகம், 30.9.1982ஆம் நாளிலிருந்து அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, கனடா போன்ற வெளி நாடுகளுக்கு நேரடியாகத் தேயிலையை ஏற்றுமதி செய்யத் தொடங்கியுள்ளது. இதுவரை ரூ. 9,38,342 மதிப்புள்ள 45,020 கி.கி.தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

கூடலூரிலுள்ள சேரன் கோட்டில் ஒன்றும், குன்னூரிலுள்ள டைகர் ஹில்ஸில் (Tiger Hills) ஒன்றுமாக, மொத்தம் இரண்டு தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன. சேரம்பாடியில் மேலும் ஒரு தொழிற்சாலை ரூ. 1.40 கோடி மதிப்பீட்டில் அமைக்கப் பட்டு வருகிறது.

1982 டிசம்பர் வரையில் 2,325 ஸ்ரீலங்கா நாடு பெயர்ந்தோர் குடும்பத்தினருக்கு இக்கழகத்தில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.



# தமிழ்ப்பண்பாடு தழைத்தோங்குகிறது!

**மாண்புமிகு கல்வி அமைச்சர்**
**திரு. செ. அரங்கநாயகம்**

அன்னைத் தமிழ் வளரவும், ஆக்கப்பணிகள் மிளிரவும் அரசு வகுத்துவரும் தமிழ்த் திட்டங்கள் வேண்டிய வெற்றிக் கனிகளை நல்கி வருகின்றன.

தமிழ் வளர்ச்சியையும் பண்பாட்டுச் செழுமையையும் பல்வேறு நிலைகளில் ஒருமுகப் படுத்தி நிலையான செயற்பாட்டுக்குத் துணைசெய்யும் வகையில் மாண்புமிகுபுரட்சித்தலைவர்தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை என்னும் பெயரில் ஒரு புதியதுறையையே தலைமைச் செயலகத்தில் தொடங்கியிருப்பது, தமிழ்நாட்டு மக்கள் நெஞ்சில் நின்று நிலைக்கும் பெருஞ்செயலாகும். இப்புதிய செயலகத்துறையில், தமிழ் வளர்ச்சி இயக்ககம், மொழி பெயர்ப்புத் துறை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழ்ப் பழங்கலை இயக்ககம், தொல்பொருள் ஆய்வுத் துறை, அகரமுதலித் திட்டத்துறை ஆகியவை கொண்டு வரப்பட்டுள்ளன. இத்துறைகள் ஆற்றிவரும் பணிகள் சுருக்கமாக இங்கே விளக்கப்படுகின்றன.

**ஆட்சிப் பணிகள் அனைத்தும் தமிழ்:**

தமிழ் ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டபின் தமிழ்நாட்டு அரசு அலுவலகங்களில் தமிழிலேயே ஆணைகள், மடல் போக்குவரவுகள் அனைத்தும் நடைபெறத் தகுந்த கலைச் சொற்களைப் படைத்து நடைமுறைப் படுத்தப்படுவதைத் தமிழ் வளர்ச்சித்துறை நேரில் கண்காணித்து வருகிறது. பொது மக்களுக்கும், அரசுக்கும் தமிழ் மொழியே தொடர்பு மொழியாக அமைய வேண்டுமென்னும் நடைமுறையால் கண் கட்டப்பட்டிருந்த பொது மக்களுக்கு நல்வொளி கிட்டியுள்ளது. இதனால் அரசின் செயற்பாடுகளையும் அன்றாட நடைமுறைகளையும் நேரடியாக மக்கள் புரிந்து கொள்கிறார்கள்.

அலுவலக நடைமுறை மொழியாகத் தமிழ் பயன்படும் வகையில் அரசுத் துறைகளுக்குரிய நடைமுறை நூல்கள், விதிகள், விதித் தொகுப்புகள் போன்றவற்றைத் தமிழ் வளர்ச்சித்துறை வழங்குகிறது. ஆட்சிச் சொல்லகராதி, சிறப்புச் சொல் துணையகராதி போன்றவற்றையும் அச்சிட்டுள்ளது. மாவட்ட நிலை அலுவலர்களின் கருத்தரங்குகளை ஆங்காங்கே நடத்தி ஆட்சி மொழிச் செயலாக்கத்திற்கு இத்துறை வழிவகுத்து வருகிறது.

நலிந்த தமிழ்ப் புலவர்க்கு உதவித் தொகை வழங்கல், தமிழக வரலாற்றை முறையாக வரைதல், சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசளித்தல், நூலாசிரியர்களுக்கு நூல் வெளியீட்டு உதவி அளித்தல் ஆகிய பல துறைகளிலும் தமிழ்வளர்ச்சிஇயக்ககம் நற்பணி ஆற்றி வருகிறது.

மூவாண்டு முனைப்புத் திட்டம்



'திருக்குறள் உரை' எழுதியமைக்காக தமிழ்வளர்ச்சி இயக்ககத்தின் பரிசினை, மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து திருக்குறளார் வீ. முனிசாமி அவர்கள் பெறுகிறார்.

தொடங்கியதன் வாயிலாக, அரசு அலுவலகங்கள் அனைத்தும் முழுமையாகத் தமிழிற் செயற்படும் வகையில் முடுக்கப்பட்டிருப்பது தமிழ் வளர்ச்சித் துறையின் சீரிய செயல்களுள் ஒன்றாகும்.

**தலைமைச் செயலகத்தில் தமிழுக்கு ஏற்றம்**

**த**மிழ் வளர்ச்சித்துறை, மொழிபெயர்ப்புத் துறை, பழங்கலை இயக்ககம், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகர முதலி, தொல்பொருள் துறை ஆகிய 6 துறைகளின் பொறுப்பையும் கவனிக்கத் தனியாகச்செயலர் ஒருவரை நியமித்துள்ளது அரசு. இதன் மூலம், தலைமைச் செயலகத்தில் தமிழுக்கு ஏற்றம் அளிக்கப்பெறுகிறது. டாக்டர் அவ்வை நடராசன் அவர்கள் தமிழ் வளர்ச்சி, பண்பாட்டுத் துறையின் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

"வெள்ளையர் ஆட்சிக் காலத்திலிருந்து எந்த அரசும் சாதிக்காத வகையில் தமிழுக்கு இத்தகைய ஏற்றத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவரின் அரசு அளித்திருப்பது பாராட்டுக்குரியது" என்று முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்:**

உலகெங்கும் தமிழ்வளர்ச்சிக்கு உறுதுணை புரியவும் உலகளாவிய நிலையில் தமிழ் நலம் காக்கவும், வளர்க்கவும், உயர்நிலை ஆராய்ச்சிக்கு வழி வகுக்கவும் இந்நிறுவனம் பல துறைகளின் பலகணியாக அமைந்துள்ளது. ஓலைச்சுவடி ஆய்வு முதல் கண் மருத்துவம் வரை பல்துறை நூல்களையும், இலக்கியத் திறனாய்வு முதல் பண்பாடு, இலக்கியம், வரலாறு உள்ளிட்ட கருத்தரங்குகள் வரை ஆய்வு நூல்களையும், வேற்று நாட்டார் சில நாட்களில் ஆங்கிலம் வாயிலாகத் தமிழ் கற்றுக் கொள்ளப் புதிய அறிவியல் முறையைத் தழுவி அமைக்கப்பட்ட ஒலிச் சுருள்களையும், தொல்காப்பிய உரை விளக்கங்களையும் இத்துறை வெளியிட்டு வருகிறது.

**அதியமான் பகுதியில் அருங்கலை ஓவியம் :**

பழந்தமிழர் வாழ்ந்த வரலாற்றை ஆய்ந்து அளவிடுவது தொல்பொருள் ஆய்வுத் துறையாகும். பழைய எழுத்துக்களில் உள்ள கல்வெட்டுகளும் ஓலைச் சுவடிகளும், செப்புப் பட்டயங்களும் தொல்பொருள் கருவூலங்களாகும். மூவேந்தர் அரண்மனைகள், வரலாற்றுக்கு முந்தைய மக்களின் கருவிகள், கடலுள் மறைந்த நாகரிகப் பொருள்கள் போன்றவற்றை வரலாற்றுப் புதையலில் கண்டெடுத்து மாசு போக்கித் தூசு துடைத்து மீள்பார்வைக்கு நமக்கு மீட்டுத் தருவதும் தொல்பொருள் ஆய்வுத் துறையின் பணியேயாகும்.

வள்ளல் அதியமான் வாழ்ந்த தருமபுரி மாவட்டத்தில் மகாராசக்கடை என்னும் சிற்றூரையடுத்த குன்றில் 2,000 ஆண்டுகளுக்கு முன் வரையப்பட்ட வெள்ளை வண்ண ஓவியங்களையும் பழைய தமிழ் எழுத்துச் சொற்றொடர்களையும் அண்மையில் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

**பழங்கலையும் பண்பாடும்:**

ஒரு மாநிலத்து மக்களின் வாழ்வோடும் உணர்வோடும் பழக்க வழக்கங்களோடும் ஊறிப் பரிமளிக்கும் பண்பாட்டுக் கதிர்கள் சிற்றூர்களில் அரும்பி மலர்ந்து நாடெல்லாம் நறுமணம் பரப்புகின்றன. நாட்டுப்புறப் பழங்கலைகளும் பண்பாட்டுக் கூறுகளும் நலிந்து போகாமல் அவற்றின் பொலிவுக்கு வலிவூட்டும் ஊற்றுக்காலாகத் திருக்குறளாரை இயக்குநராகக் கொண்ட தமிழ்ப் பழங்கலை இயக்ககம் திகழ்கிறது.

ஒரு நாட்டின் இரண்டு விழிகளான வரலாறும், மொழியும் பழுதுபட்டாலும், பண்பாட்டுச் செழுமைதான் காலூன்றி எத்தகைய வறட்சியையும் தாங்கிக் கொண்டு மக்களினத்தை இனங்காட்டும் வல்லமை வாய்ந்தது. அந்த நிலையில் பழங்கலை இயக்ககம் பண்பாட்டியலைக் காத்து வரும் பணியேற்றுள்ளது.

**அன்னைத் தமிழுக்கு அகரமுதலி :**

மொழியின் நலங்காக்கும் சட்ட நூலாக இலக்கணங்கள் அந்நாளில் எழுதப்பட்டன. இக்காலத்தில் அகராதிகள் அப்பணியை ஆற்றுகின்றன. மொழி ஞாயிறு பாவாணர் அகராதிக்கு 'அகரமுதலி' என்ற தூய தமிழ்ப் பெயரிட்டார்.

சொல்லுக்குச்சரியான பொருள் விளக்கம் தருவது அகரமுதலியின் நோக்கம். சொல்லின் திருத்தமான வடிவத்தைக் காட்டுவதும், அச்சொல் எப்படிப் பிறந்தது என்று விளக்கும் வேர்ச்சொல் வரலாறு கூறுவதும், தமிழுக்கும் திராவிட மொழிகளுக்கும் உள்ள உறவை நிலைநாட்டுவதும் பாவாணர் அகரமுதலியின் தனிப் பண்புகளாகும்.

தமிழிலுள்ள கொச்சை வடிவங்களுக்குச் செந்தமிழ் வடிவமும் வேற்றுமொழிச் சொற்களுக்குத் தனித் தமிழ் வடிவமும் காட்டுவதால் இதற்குச் செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகர முதலி என்று பெயரிடப்பட்டது.

இத்துறையின் அகரமுதலி வண்ணப்பட விளக்கங்களுடன், தமிழில் இதுவரை சேர்க்கப்படாத மூன்றிலக்கம்சொற்களைப் புதிதாகச் சேர்த்துப்பன்னிரண்டு மடலங்களாக வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் மடலில் முதற் பகுதி, வரும் செப்டம்பர்த் திங்கள் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று வெளிவரவிருக்கிறது.

**நலம் விளைக்கும் மொழிபெயர்ப்பு :**

அரசின் நடைமுறைகள் ஆங்கிலத்திலேயே நடைபெற்று வந்ததால் ஆங்கிலத்தில் கூறப்பட்ட செய்திகளை உடனுக்குடன் தமிழ்ப்படுத்துவது இன்றைய நிலையில் பெருந்தேவையாகும். அப்பணியைச் செவ்வனே செய்ய மொழிபெயர்ப்புத் துறை தலைமைச் செயலகத்தில் இயங்கி வருகிறது.

மெத்த வளரும் புத்தம் புதிய கலைகளும் அவை தழுவிய அரசாங்கச் செய்திகளும் தமிழுக்குப் புதியவையாயினும் அவற்றைப் பழுதற எல்லோர்க்கும் விளங்கும் எளிய நடையில் தெளிவும் செப்பமும் மிளிர தமிழ்ப்படுத்துவதும் இத்துறையின் பணியாகிறது.

மொழி பெயர்ப்பது அரிய செயல். எத்தகு வல்லுநரையும் தொடராட்சிகள் மயக்கி விடும். மரபறிந்து மொழி பெயர்ப்பது மொழிபெயர்ப்பாளரின் தனித்திறன். எந்தப் பள்ளியிலும், கல்லூரியிலும் அவற்றைப் பெற முடியாது. மொழி பெயர்ப்புத் துறையிலேயே பல்லாண்டு ஊறித் திளைத்து ஊற்றம் பெற்றாக வேண்டும் என்ற உணர்வோடு இத்துறையும் இயங்குகிறது.

எங்கும் எதிலும் என்றும் தமிழ் என்ற இலக்குடன் இத்துறை பணியாற்றி வருவதோடு மொழியும் பண்பாடும் செழுமையுற்றுத் திகழ்வதற்கான செயல்களையும் மேற்கொண்டுள்ளது.





# சிறு துறைமுகங்களின் சீரிய பணிகள்

**மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்**
**திரு சு. முத்துசாமி**

தமிழ்நாடு வங்காள விரிகுடா, பாக் இடுகடல், மன்னார் வளைகுடா இந்துமாக் கடல், அரபிக் கடல் நெடுக கிழக்கு, தெற்கு, மேற்காக 1,000 கிலோ மீட்டர் நீளத்திற்கு இடையீடில்லாத கடற்கரையைப் பெற்றுள்ளது. இந்தியாவில் இதுபோன்று முப்புறமும் கடல் சூழ்ந்த மாநிலம் வேறெங்கும் இல்லை. இதுவே தமிழகத்தின் தனிச் சிறப்பு எனக் கூறலாம். சென்னையிலும் தூத்துக்குடியிலும் பெரிய துறைமுகங்கள் உள்ளன. இவை மைய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குபவை.

கடலூர், நாகப்பட்டினம் ஆகிய நடுத்தரத் துறைமுகங்களும், இராமேசுவரம், பாம்பன், கீழக்கரை, கன்னியாகுமரி, வாலிநோக்கம், குளச்சல் ஆகிய சிறு துறைமுகங்களும் தமிழ்நாட்டில் உள்ளன. இவை அனைத்தும் தமிழக அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன.

**கடலூர் துறைமுகம் :**

இந்தத் துறைமுகத்தில் முக்கியமாக ஏற்றுமதி ஆகும் பொருட்கள் இரும்புக்கனி மற்றும் பொதுச் சரக்குகள், இறக்குமதியாகும் சரக்குகள் உரம் மற்றும் பொதுச் சரக்குகள் ஆகும். 1980-81ல், 1.38 இலட்சம் டன், 1981-82ல்1.69 இலட்சம் டன், 1982-83ல் 2.33 இலட்சம் டன், 1983-84-ல் 1.3 இலட்சம் டன் சரக்குகள் இத்துறைமுகத்தில் கையாளப்பட்டிருக்கின்றன. மற்ற ஆண்டுகளைவிட இந்த நான்காண்டுகளில் கணிசமான அளவுக்குச் சரக்குகள் கையாளப்பட்டிருக்கின்றன என்பது பெருமைக்குரியதாகும்.

சரக்குகளை அடுக்கி வைப்பதற்காக 2,000 டன் கொள்ளளவு கொண்ட இரண்டு சரக்குக் கொட்டகைகள் கட்டப்பட்டுள்ளன. மாற்றுச் சரக்குக் கொட்டகையும் கட்டப்பட்டுள்ளது. இந்தத் துறைமுகத்தின் நீண்ட நாளைய தேவையான ஒரு புதிய கிடங்குக் கொட்டகை ரூ. 1 இலட்சம் செலவில் இப்பொழுது கட்டப்பட்டு வருகிறது. திருட்டுகளைத் தடுப்பதற்காகத் துறைமுகத்தைச் சுற்றிலும் அலைவாய் எல்லைச் சுற்றுச் சுவரொன்று ரூ. 8.19 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. வலுவூட்டப் பெற்ற கான்கிரீட்டிலான சரக்குக் கையாளப்படும் மேடையின் கீழ், பாறாங்கற்களாலான நீர்த்தடை அமைப்பதற்கு ரூ. 20 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

உந்து விசையற்ற இரு 50 டன் எஃகு சரக்குப் பரிசல்களும், அதே அளவுள்ள ஒரு தண்ணீர் எஃகுப் பரிசலும் ரூ. 9 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன.

1981-82-ல் துறைமுக உபயோகத்திற்காக 10 டன் திறனுள்ள ஒரு நடமாடும் பாரந்தூக்கி ரூ. 11.12 இலட்சத்திற்கு வாங்கப்பட்டுள்ளது.



**நாகப்பட்டினம் துறைமுகம் :**

இந்தத் துறைமுகத்தில் முக்கியமாக ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் வெங்காயம் மற்றும் பொதுச்சரக்குகள்; இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் கோதுமை மற்றும் பொதுச்சரக்குகள் ஆகும். 1980-81ல் 41,722

டன்; 1981-82ல் 69,228 டன்; 1982-83ல் 48,871டன், 1983-84ல் 1,11,418 டன்சரக்குகள் இத்துறைமுகத்தில் கையாளப்பட்டுள்ளன. இது தவிர, இந்தத் துறைமுகத்தின் வாயிலாக சிங்கப்பூருக்குச் சென்று வருகின்ற பயணிகள் போக்குவரவும் நடைபெறுகிறது. 1980-81-ல் 6281 பயணிகள், 1981-82ல் 6508 பயணிகள், 1982-83ல் 3528 பயணிகள், 1983-84-ல் 3510 பயணிகள் சென்று வந்துள்ளனர்.

**இராமேசுவரம் துறைமுகம் :**

இங்கு ஆண்டுதோறும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமாகப் பயணிகள் போக்குவரவு நடைபெறுகிறது. இது மட்டுமின்றி சாஸ்திரி பண்டாரநாயகா உடன்படிக்கையின் அடிப்படையில் இலங்கையிலிருந்து இந்தியா திரும்பும் தாயகம் திரும்புவோர் இந்தத் துறைமுகம் வழியாகவே வருகின்றனர்.

1980-81ல் 1,76,346 பயணிகள், 1981-82ல் 1,83,568 பயணிகள், 1982-83ல் 2,11,667 பயணிகள், 1983-84-ல் 1,50,155 பயணிகள் இத்துறைமுகத்தின் வாயிலாகச் சென்று வந்துள்ளனர். இதில் தாயகம் திரும்பியோர் எண்ணிக்கையும் அடங்கும்.

இந்த ஆண்டில் பயணிகள் போக்குவரத்தில் ஏற்பட்ட குறைவுக்குக் காரணம் அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரமேயாகும்.

கப்பல்களைக் கரையோரமாக நிறுத்துவதற்காக ஒரு நிலையான - வலுவூட்டப்பெற்ற - கான்கிரீட்டிலான கப்பல் அணையும் மேடை ரூ. 107 இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் பணி விரைவில் துவக்கப்படும். மேலும் பலவசதிகள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பாம்பன் துறைமுகம் :**

இது ஒரு சிறு துறைமுகம். இங்குள்ள பாம்பன் கால்வாய் வழியாகக் கலங்கள் வழிகாட்டப்படுகின்றன. 1980-81-ல் 50 கலங்களும், 1981-82-ல் 50 கலங்களும், 1982-83ல் 57 கலங்களும், 1983-84-ல் 68 கலங்களும் வழிகாட்டப்பட்டுள்ளன.

இத்துறைமுகத்தில் ரூ. 2.50 இலட்சம் செலவில் பாம்பன் கால்வாய் வழியாகக் கலங்கள் இரவில் சரியாகச் செல்வதற்கென விளக்குகள் பொருத்திய மிதவைகள் அமைக்கும் பணி விரைவில் முடிவுறும்.

**குளச்சல் துறைமுகம் :**

இங்கிருந்து இல்மனைட் என்னும் மணல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. இந்த ஏற்றுமதி இப்பொழுது கணிசமான அளவில் முன்னேறி உள்ளது. 1980-81-ல் 12,500 டன்னாக இருந்தது 1983-84-ல் 58,297 டன்னாக உயர்ந்துள்ளது. இந்தத் துறைமுகத்தை மேம்பாடு செய்வதற்காக, பொறியியல் பொருளாதார ஆய்வின்படி ரூ. 245 இலட்சம் செலவில் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதற்படியாக 90 மீட்டர் நீளத்திற்கு வலுவூட்டப் பெற்ற கான்கிரீட்டிலான படகு அணையும் மேடை ஒன்று 1984-85-ல் ரூ. 67.14 இலட்சம் செலவில் அமைக்கப்பட உள்ளது.





**வாலிநோக்கம் துறைமுகம் :**

அண்மையில் அரசு வாலிநோக்கத்தை ஒரு சிறு துறைமுகமாக அறிவிப்புச் செய்துள்ளது. இதன் அடிப்படையில் ரூ. 75 இலட்சம் செலவில் துறைமுகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இங்குக் கிடைக்கும் உப்பு மற்றும் மற்ற பண்டங்களை மேற்கு வங்கம் மற்றும் அயல்நாட்டுச் சந்தைகளுக்காக ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் வலுவூட்டப் பெற்ற கான்கிரீட்டிலான ஒரு படகு அணையும் மேடை, உத்தேசிக்கப்பட்டுள்ள துறைமுக வளாகத்திற்கான இடத்தைப் பண்படுத்தும் பணி, மற்றும் அந்த இடத்திற்கு அணுகுசாலை அமைக்கும் பணி ஆகியவை தற்சமயம் நடைபெற்று வருகின்றன.

**கன்னியாகுமரித் துறைமுகம் :**

அனைத்துக்கும் சிகரமாக இந்தக் காலகட்டத்தில் ஒரு சிறப்பான நிகழ்ச்சி இத்துறையில் நடைபெற்றுள்ளதை ஈண்டுப் பெருமையுடன் குறிப்பிடலாம். அதாவது கன்னியாகுமரியில் கடல் நடுவே அமைக்கப்பட்டுள்ள விவேகானந்தர் நினைவுப்பாறைக்குப் படகுப்போக்குவரவினை நடத்திக்கொண்டிருந்த விவேகானந்தா கேந்திரத்தினர் அங்கு ஏற்பட்ட சில பிரச்சினைகள் காரணமாக 1981 ஜூலை 20-ஆம் நாளன்று நிறுத்தி விட்டனர். இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் மற்றும் மேல்நாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் இந்தப் படகுப் போக்குவரவு நின்று போன காரணத்தினால் விவேகானந்தர் நினைவுப் பாறைக்குச் சென்று வருகின்ற வாய்ப்பில்லாமல் ஏமாந்து போயினர்.

அனைத்து இந்திய சுற்றுலாப் பயணிகள் நலன் கருதி இந்தப் படகுப் போக்குவரவைத் தொடர்ந்து நடத்திட அரசு விரும்பி, அவ்வாறே இந்தப் போக்குவரவு தமிழக அரசின் கட்டுப்பாட்டுக்குக்கொண்டுவரப்பட்டு 2.10.81 முதல் தமிழ்நாடு துறைமுகத் துறையால் நடத்தப்பட்டு வருகிறது. 30-4-1984 வரை 25,64,886 பார்வையாளர்கள் இதன் மூலம் விவேகானந்தர் நினைவுப் பாறைக்குச்சென்று திரும்பியுள்ளனர். இதன் மூலம் ரூபாய் 45,80,666 படகுக் கட்டணமாக அரசுக்கு வருவாய் கிட்டியுள்ளது.



# ஆதிதிராவிடர்க்கு உதவும் சிறப்பு உள்ளடக்கத் திட்டம்

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்

**திரு. எம். விஜயசாரதி**

தமிழ்நாடு அரசு ஆதிதிராவிடர்களின் சமூக - பொருளாதார முன்னேற்றத்திற்காகப் பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. ஒவ்வொரு துறையும் அதன் வரவு செலவுத் திட்டத்தில் ஆதிதிராவிடர் நலனுக்காக ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலவிட வேண்டும் என வரையறை செய்யப்படுகிறது. இம்மாதிரி வரையறை செய்யும் திட்டமே சிறப்பு உள்ளடக்கத் திட்டமாகும். இத்திட்டம் தமிழ்நாட்டில் 1980-81ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப் படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்:

ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் இம்மாநிலத்தில் உள்ள 9 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்கு மேல் வர உதவுதல்.

ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குத் தேவையான குடிநீர், கல்வி, மின்வசதி, இணைப்புச் சாலை போன்ற வசதிகளைச் செய்து தரல்.

இம்மாநிலத்தில் உள்ள ஆதிதிராவிடர் மக்களில் பெரும்பாலோர் விவசாயக் கூலிகளாகவும், சிறு விவசாயிகளாகவும் உள்ளனர். எனவே, இவர்களின் முன்னேற்றம் கருதி, பல திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

வேளாண்மை இடுபொருட்கள் 25 சதவிகித மானியத்தில் சுமார் 5 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. பயிற்சிவழி தொடர்புத் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு நவீன விவசாய முறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மைய அரசு அளிக்கும் சிறப்பு நிதி உதவியிலிருந்து கடைமடைப் பகுதிகளில் உள்ள ஆதிதிராவிடர்களுக்குச் சொந்தமான நிலங்களுக்குக் கிணறுகள் அமைத்துத் தரப்படுகின்றன.





தமிழ்நாடு குழாய்க் கிணறுக் கழகத்தின் மூலம், ஆதிதிராவிடர்களுக்குச் சொந்தமான நிலங்களைக் கண்டுபிடித்து அந்நிலங்களுக்குக் குழாய்க்கிணறுகள் அமைத்துத் தரப்படுகின்றன. உபரி நிலங்களை எடுத்து வழங்கும் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் நிதி உதவியைப் (ஒரு எக்டேருக்கு ரூ. 1,000) பெறுபவர்களில் சுமார் 40 சதவிகிதம் ஆதிதிராவிடர்கள் ஆவர்.

கால்நடை வளர்ச்சித் திட்டத்தைப் பொறுத்தவரை பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களில் ஆதிதிராவிடர்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 18%ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சரியாக இயங்காத ஆதிதிராவிடர் பால் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புத்துயிர் அளிக்கவும், அவைகளைப் பால் சேகரிக்கும் தடங்களில் அமைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. கறவை மாடுகள் வழங்க அளிக்கப்படும் மானியம் 33 1/3 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதம் ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ச்சித் துறையில் கால்நடைகளுக்குத் தேவையான மருத்துவ வசதியும், அதிக இலாபம் தரும் உயர் இனக்கால்நடைகள் வழங்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பயன்பெறும் 600 குடும்பங்களில் சுமார் 300 குடும்பங்கள் ஆதிதிராவிடர்களாக இருக்க வேண்டும் என அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் ஆதிதிராவிடர்களுக்குப் பாசனக் கிணறுகள் அமைக்கவும், உழவு மாடுகள் வாங்கவும் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

**சிறப்பு உள்ளடக்கத் திட்டத்திற்கான மத்திய சிறப்பு நிதியில் ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்:**

வேளாண்மைத் தொழில் ஆண்டு முழுவதும் ஆதிதிராவிடர்களுக்கு வருவாய் அளிப்பதாக இல்லை. எனவே, அவர்களை நிரந்தரமாக வறுமைக் கோட்டினைக் கடக்கச் செய்ய அவர்களது தொழில் முறையை மாற்றியமைப்பது அவசியம் என்று உணரப்பட்டது. ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக்கழகத்தின் மூலம் மத்திய அரசு அளிக்கும் மத்திய சிறப்பு நிதி இதற்காகச் செலவிடப்பட்டு வருகிறது.

ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த தொழில் முனைவோர்க்கு ஊக்கம் தரத்தக்க வகையில் எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகிறது. சுயவேலைவாய்ப்புக்கான கிராமப்புற இளைஞர் பயிற்சித் திட்டத்தின்கீழ் ஆங்காங்கே அவர்களுக்குப் பயிற்சியளிக்கவும் ஏற்பாடு செய்யப்படுகிறது. 1980 முதல் 1983 டிசம்பர் வரை இம்மாநிலத்திற்கு மத்திய அரசு ரூ. 38.56 கோடி மத்திய சிறப்பு நிதியுதவி அளித்துள்ளது.

பல்வேறு கூட்டுத் திட்டங்கள் தொழில் கூட்டுறவுகள் மற்றும் இதுபோன்ற பல திட்டங்களுக்குச் சிறப்பு மத்திய நிதியிலிருந்து உதவியளிக்கப்படுகிறது. அவற்றுடன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு நூற்பாலைகள், கல்லுடைக்கும் கூடங்கள், தரை விரிப்பு நெசவுத் தொழில்கள், செங்கல் தொழில் கூட்டுறவுகள், பனைப்பொருட்கள் உற்பத்தி நிலையங்கள், பாய் முடையும் மையங்கள், பனை ஓலை மற்றும் கோரைப்பொருள் தொழில்கள், தோல் பதனிடும் நிலையங்கள், கிராமப்புற நூற்பு மையங்கள், நேபாளி நெசவு மையங்கள் ஆகியவை அடங்கும். அவற்றில் கீழ்க்கண்ட முக்கியமான கூட்டுத் திட்டங்கள் குறிப்பிடத்தக்கவை:

**கைத்தறி மற்றும் துணி நூல்துறை**

இத்துறையின் வாயிலாக அநேக திட்டங்களைச் செயல்படுத்த அரசு அனுமதியளித்துள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக 5151 ஆதிதிராவிடர்கள் பயன் பெறுவர்.

கைத்தறித்துறை மூலம் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களுக்கான திட்டத்தொகை ரூ. 2096.07 இலட்சம் ஆகும். இதில் ரூ. 546.52 இலட்சம் மத்திய சிறப்புநிதியுதவியிலிருந்து மானியமாகவழங்கப்பட்டுள்ளது.



**தொழில் மற்றும் வணிகத்துறை**

இம்மாநிலத்திலுள்ள தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பல்வேறு திட்டங்களை இத்துறை செயல்படுத்தி வருகிறது. இத்துறைபலதொழில்கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பல்வேறு வேலை வாய்ப்புகளை உருவாக்கி 3484 ஆதிதிராவிடர்களைப்பயனடைய

செய்துள்ளது. அவைகளில் முக்கியமான தொழில்கள் வருமாறு:

செங்கல் உற்பத்தித் தொழில் சங்கங்கள், பாலிதீன் பைகள் செய்யும் தொழில்கள், தீப் பெட்டித் தொழில்கள், கயிறு உற்பத்தி ஆகிய தொழில்களில் சடுபடுத்தப்பட்டுள்ளனர். திட்டத் தொகை ரூ. 167·1510 இலட்சம். மத்திய சிறப்பு நிதியுதவி ரூபாய் 76.2310 இலட்சம்.

**கதர் மற்றும் கிராமத்தொழில்**

இம்மாநிலத்தில் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் ஆதிதிராவிடர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் அநேகக் கதர் கிராமத் தொழில்கள் துவக்கப்படடுள்ளன. காலணித் தொழிலாளர் 1,000 பேருக்கு இலவசமாக பங்க் கடைகள் வழங்குதல், கிராம நூற்பு மையங்கள், நேபாளி நூற்பு மையங்கள் மற்றும் இதைச் சார்ந்த தொழில்கள், தமிழ்நாடு பனைப் பொருட்கள் இணையத்தின் மூலம் பனை மற்றும் பனை இலைப் பொருட்கள் உற்பத்தி வளாகங்கள் உருவாக்குதல், பாய் முடையும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல் ஆகிய இதுபோன்ற திட்டங்கள் இவ்வாரியத்தின் பெரும் திட்டங்களுள் அடங்கும். 1,500 ஆதிதிராவிடர்கள் வேலை வாய்ப்புப்பெறும் வகையில் கையினால் காகிதம் உற்பத்தி செய்யும் 15 கூடங்களை இவ்வாரியம் அமைத்து வருகிறது. தோல் தொழில் வளாகங்கள் மற்றும் காலணி உற்பத்திக் கூடங்கள் ஆகியவை மற்றும் பெருந்திட்டங்களாகும்.

மொத்த திட்டத் தொகை ரூ 363.31 லட்சம். மத்திய சிறப்பு நிதியிலிருந்து மானியம் ரூபாய் 356.325 லட்சம். வேலை பெறும் ஆதிதிராவிடர்களின் எண்ணிக்கை 12,860.

**கூட்டுறவுத் துறை:**

இத்துறையில் கல் உடைக்கும் சங்கம் மற்றும் உழைப்பாளர் குத்தகைச் சங்கம் அமைப்பதில் அரசு தனிக்கவனம் செலுத்துகிறது. இச்சங்கங்கள் மூலம் ஆதிதிராவிடர்கள் ஆண்டு முழுவதும் வேலை பெற்றுப் பயனடைகிறார்கள்.



திட்டங்களின் மொத்த செலவு ரூபாய் 239.06 இலட்சம். இதில் மத்திய சிறப்பு உதவி நிதியில் மானியம் ரூபாய் 172.7575 இலட்சம். இதன் மூலம் பயன் பெறும் ஆதிதிராவிடர்கள் 3192 பேர் ஆவர்.

**பால் மற்றும் பண்ணை வளர்ச்சி:**

தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர்களுக்கென்று இதுவரை 365 பால் கூட்டுறவுச்சங்கங்களை அரசு ஏற்படுத்தியுள்ளது. நிதி மற்றும் கருவிகள் போதாமையால் இச் சங்கங்களில் சில, சரியாக இயங்க முடியாமல் உள்ளன. தேவைப்பட்ட சங்கங்களுக்கு முதலீடு மற்றும் கருவிகள் வாங்க, மத்திய சிறப்பு உதவி நிதியிலிருந்து பண உதவி அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வுதவி மூலம் இச்சங்கங்கள் இலாபத்துடன் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றன.

கறவை மாடுகள் வாங்க ஆதிதிராவிடர்களுக்கு அளிக்கப்படும் மானியம் 33·1/3 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக்கப்பட்டுள்ளது. இம்மானியம் (1) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட நிறுவனங்கள் (2) ஆதிதிராவிடர் நலநிதி (3) பால் உற்பத்தி பால் பண்ணை வளர்ச்சித் துறை மூலம் ஆதிதிராவிடர்களுக்கு அளிக்கப்படுகிறது. இம்மானியம் மேற்கண்ட நிறுவனம் துறை மூலம் 25 சதவீதம் முதல் 33.1/3 சதவீதம் வரை மட்டும் அளிக்கப்படுகிறது. மீதி மானியம் மத்திய சிறப்பு உதவி நிதியிலிருந்து அளிக்கப்பட்டு ஒவ்வொரு ஆதிதிராவிடரும் மொத்தம் 50 சதவீத மானியம் பெற வகை செய்யப்படுகிறது.

**கால்நடைத் துறை:**

நடப்பு 1983-84-ஆம் ஆண்டில் கால்நடைத் துறை மூலம் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்த திட்டமுள்ளது. இத்திட்டங்களுக்கான செலவில் 50 சதவீதம் மத்திய சிறப்பு நிதியிலிருந்து வங்கிக் கடனாகப் பெறப்படுகிறது.

| | பயன் பெறும் ஆதிதிராவிடர்கள் |
|---|---|
| செம்மறியாடு உற்பத்தித் திட்டம் | 1500 |
| தீவன உற்பத்தித் திட்டம் | 800 |
| கறி, கோழி உற்பத்தித் திட்டம் | 200 |

**நகர வளர்ச்சித் திட்டங்கள்:**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் அநேகக் குடும்பம் சார்ந்த சுயவேலை வாய்ப்புத் திட்டம் கிராமங்களில் செயல்படுத்தப்படுகிறது. ஆனால் இவ்வகைத் திட்டங்கள் நகரங்களில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு இல்லை. ஆயினும் 2 அல்லது 3 நகரங்களில் ஆதிதிராவிடர்களுக்குச் சுயவேலை வாய்ப்புத் திட்டத்திற்கான உதவி செய்யப்பட்டுள்ளது.



உதாரணமாக, கடலூர் நகரத்தில் கள்ளச் சாராயம் உற்பத்தி செய்த 93 ஆதிதிராவிடர்களை வழி திருப்பி, ஒவ்வொருவருக்கும் 2 கறவை மாடுகள் வழங்கப்பட்டு சுயவேலை அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆதிதிராவிடர்களுக்குப் பலவிதமான திட்டங்களுக்கு இது வரை ரூ. 8.28 இலட்சம் மத்திய சிறப்பு உதவி நிதியிலிருந்து அளிக்கப்பட்டது. கூடிய வரை அனைத்துக் குடும்பங்களும் ஒன்றிற்கு மேல் தொழில் திட்டம் பெற்றுள்ளன. மொத்தத்தில் 216 பேர் அடங்கிய 93 குடும்பங்களும் பயன்பெற வழி செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த நகரத்தில் 260 ஆதிதிராவிடர்களுக்குச் சைக்கிள் ரிக்ஷா வண்டிகள் ரூ. 3.90 லட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

சென்னையில் 31 இந்து ஆதிதிராவிடர்களுக்கு மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷா வண்டிகள் மத்திய சிறப்பு நிதி உதவி மூலம் வழங்கப்பட்டுள்ளது. சென்னையில் ஆதிதிராவிடர்களுக்குப் பரிசோதனைச்சாலையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.



**கூட்டுக்கிராம வளர்ச்சித் திட்டம்:**

மாநிலத்தில் பின்தங்கிய 15 வட்டாரங்களில் கூட்டாக உள்ள கிராமங்களில் வாழும் 15,000 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பொருளாதார மேம்பாடடைய சகல உதவிகளும் செய்யப்பட்டு வருகின்றன.

இங்கு ஊரகத் தொழில்கள் ஏற்படுத்தப்பட்டு குடும்பத்தில் ஒருவருக்கு ஆண்டு முழுவதும் வேலை கிடைக்கும். இவை தவிர ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

**ஆதிதிராவிடர்கள் நிலங்களுக்குக் குழாய்க் கிணறுகள்:**

ஆதிதிராவிடர்களுடைய நிலங்கள் பாசன வசதி பெறும் பொருட்டு இந்நிலங்களுக்குக் குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டம் தமிழ்நாடு குழாய்க் கிணறுகள் கழகத்தில் செயலாக்கப்படுகிறது. இத்திட்டம் செங்கற்பட்டு, தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. மூன்று ஏக்கருக்குக் குறைவாக நிலமுடைய ஆதிதிராவிடர்களின் நிலங்கள் அடுத்தடுத்து இருந்தால் இந்நிலங்களில் ஒன்றில் குழாய்க்கிணறு அமைத்துக் கொடுக்கப்படும்.

இத்திட்டத்தின் குழாய்க் கிணறு அமைக்கத் தேவைப்படும் தொகையில் 50 சதவிகிதம் மானியமாகவும் 25 சதவிகிதம் குறியீட்டுக்கடனாகவும் தாட்கோ வழங்குகிறது. மீதி 25 சதவிகிதம் வங்கிகள் கடனாக அளிக்கின்றன. முடிக்கப்பட்ட குழாய்க் கிணறுகள் பயன் பெறும் ஆதிதிராவிடர் பாசனச் சங்கத்திடம் பராமரிக்க ஒப்படைக்கப்படுகின்றன.

30-9-83 முடிய தமிழ்நாடு குழாய்க் கிணறுக் கழகம் 262 குழாய்க்கிணறுகளை ரூ. 379.5 இலட்சம் செல்வில் உருவாக்கத் திட்டமிடப்பட்டு 63 கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. தஞ்சாவூர் மாவட்டத்தில் 8 குழாய்க் கிணறுகள் நிறைவு பெற்றுள்ளன. இதுவரையிலும் ரூ. 56.72 இலட்சம் மானியமாகவும் குறியீட்டுக் கடனாகவும் செலுத்தப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் பெண்கள் பயன் பெறுவது:**

இவ்வாண்டு கீழ்க்கண்ட திட்டங்களில் பயன் பெறுபவர் 50% ஆதிதிராவிடர் பெண்களாக இருக்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

கால்நடைத் துறை மூலம் செம்மறியாடு உற்பத்தித்திட்டம், கறிக்கோழி உற்பத்தித்திட்டம், மாட்டுத்தீவன புல் உற்பத்தித் திட்டம்

பால்மாடுகள் திட்டம்— பால் பண்ணை ஆணையாளர் மூலம்

நகர ஆதிதிராவிடர் மேம்பாட்டுத் திட்டம் தாட்கோ.

**குறியீட்டுக் கடன் (மார்ஜின் மணி) இருவழிகளில் பயன் தருகிறது. (1) வங்கிக்கடன் பொறுப்பின் பளுவைக் குறைக்கிறது. இத்திட்டத் தொகையில் 25 சதவிகிதம் குறியீட்டுக் கடனாக அளிக்கப்படுகிறது. (2) தாட்கோ அளிக்கும் குறியீட்டுக் கடனுக்கு 4 சதவிகித வட்டி (ஆண்டுக்கு). சில ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தலாம். வங்கிகளுக்கும் ஆதிதிராவிடர்களுக்கும் ஒரு இணைப்பாக தாட்கோ செயல்படுகிறது. தாட்கோ 77,498 ஆதிதிராவிடர்களுக்கு ரூபாய் 446.65 இலட்சமும் குறியீட்டுக்கடனாகவும், 61944 ஆதிதிராவிடர் வேலை வாய்ப்புப்பெறும் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 7081 இலட்சமும் வழங்கியுள்ளது. இத்திட்டங்களுக்குத் தேவைப்படும் மீதித்தொகை வணிக மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் பெறப்பட்டன.**



# கால்நடைகளைக் காத்திடுவோம்

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்

**திருமதி கோமதி ஸ்ரீனிவாசன்**

தமிழகத்தின் கிராமப் பொருளாதாரம் வேளாண்மை மற்றும் அத்துடன் இணைந்த செய்வினைகளையுமே பெரிதும் சார்ந்துள்ளது. தமிழகம் பெருமளவு கால்நடைச் செல்வத்தைக் கொண்டுள்ளதால், கால்நடை பராமரிப்பு, பொருளாதார மேம்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் இயங்கும் தமிழக அரசு. கடந்த நான்கு ஆண்டுகளில் கால்நடை வளர்ச்சியில் மகத்தான முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. செயற்படுத்தப்பட்ட பல்வேறு முன்னேற்றத் திட்டங்களின் பயனாக, கிராமப்புற மக்களின் வறுமை நிலையைக் குறைக்க வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.



**ஆவின் வளர்ப்பு:**

ஆவின வளர்ப்பில் செயற்கை முறை கருவூட்டல் பணிகளுக்கான வசதிகளை அதிகரிக்கச் செய்து, அதன் மூலம் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன், ஏற்கெனவே இயங்கி வந்த 7 தீவிர கால்நடை வளர்ச்சித் திட்டங்களுடன் மேலும் 3 திட்டங்கள் கூடுதலாகக் துவக்கப்பட்டன. இதுபோன்று ஏற்கெனவே இயங்கி வந்த 57 கேந்திர கிராம வட்டாரங்கள் தவிர, மேலும் 5 வட்டாரங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டன. இந்த 3 தீவிர கால்நடை வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதன் பலனாக, ஆண்டு ஒன்றுக்கு 3 கோடி ரூபாய், தரம் உயர்த்தப்பட்ட கன்றுகள் மூலமாகக் கிடைக்கிறது. மற்றும் 2,70,00,000 லிட்டர் பால் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது.

செயற்கை இனக் கருவூட்டல் **பணியில் நவீன உத்தியான உறை**விந்து முறை சமீப ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க விதத்தில் தமிழகத்தில் விரிவாக்கப்பட்டுள்ளது. பால்வளத்தைச் சாரா-தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் ரூ. 117.31 இலட்சம் செலவில் 7 இலட்சம் இனப்பெருக்க ஆவினங்களை உள்ளடக்கும் வகையில் 400 கால்நடை மருத்துவ நிலையங்களிலும், ஒருங்கிணைந்த கிராமப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 173 நிலையங்களிலும், வறட்சி நிவாரணப் பணித் திட்டத்தின்கீழ் தர்மபுரி மாவட்டம் முழுதும் முறை புகுத்தப்பட்டுள்ளது. இத்தொழில் நுட்பம், பால் உற்பத்தியில் சிறந்த காளைகளின் விந்தைக் கொண்டு நாட்டின்கால்நடைகளின் தரம் உயர்த்த, அதன் மூலம் வரும் ஆண்டுகளில் அதிக பால் உற்பத்தி பெற, பெரிதளவில் பயன்படுகிறது.

ஆவின வளர்ச்சிக்கு அத்தியாவசியமான கிடேரிகளை வினியோகிக்கும் நோக்குடன் ரூ. 19.72 இலட்சம் செலவில் இரு கிடேரி உற்பத்தி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு, ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், இதுவரை 97 கிடேரிகள் வினியோகிக்கப்பட்டுள்ளன. மேலும், ரூ. 1.77 இலட்சம் செலவில் பால் மற்றும் உழைப்பு வர்க்கத்தைச் சார்ந்த ஓங்கோல் இனக் கால்நடை வளர்ப்பு நிலையம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.



தாய்-மகள் பால்கொடுக்கும் அளவை ஒப்பிட்டு, முர்ரா காளைகளின் ஆற்றலை ஆய்வு செய்யும் திட்டமொன்று ரூ. 37.15 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பால் வளத்திற்குத் தேவையான ஆற்றல்மிக்க முர்ரா இனக் காளைகள் தேர்ந்தெடுக்கப்படும்.

**செம்மறியாடு, வெள்ளாடு வளர்ச்சி:**

ஆடுகளுக்குப் பெருமளவில் குடற்புழு நீக்கம் செய்வதன் மூலம் இறைச்சி உற்பத்தியை அதிகரிக்கும் திட்டமொன்று 1980-81ல் ரூ. 3.75 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்விதம் குடற்புழு நீக்கம் செய்யப்படுவதால் ஆடுகள் நோயின்றி திடகாத்திரமாக இருப்பதுடன் ஆண்டொன்றுக்கு இரண்டு கிலோ இறைச்சி எடை அதிகரிப்பதற்கு ஏதுவுண்டு. மொத்தத்தில் ஆண்டு ஒன்றுக்குக் கூடுதலாக ரூ.87.12 இலட்சம் மதிப்புள்ள 3.96 இலட்சம் கிலோ இறைச்சி உற்பத்தி செய்யப்படும்.

இது தவிர, தமிழகம் முழுவதிலுமுள்ள 54.75 இலட்சம் செம்மறி ஆடுகளுக்கு நோய் நீக்கம் செய்யும் திட்டமொன்று கடந்த ஆண்டுகளில் ரூ. 51.93 இலட்சம் செலவில்மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் சிறந்த தரமுள்ள இறைச்சி, தோல் மற்றும் கம்பள உற்பத்திக்குத் தடையாக இருக்கின்ற உண்ணிகள், குடற்புழுக்கள் ஆகியவை ஒழுங்கான வரையறுக்கப்பட்ட இடைவெளியில் நீக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், ஆட்டின் இறப்பு பெருமளவில்தடுக்கப்பட்டதுடன் விவசாயிகளுக்குக் கூடுதல் நிகர லாபம் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இம்மாதிரி குடற்புழு நீக்குவதன் மூலம் ஆடு ஒன்றுக்கு ரூபாய் 20 கூடுதல் வருமானம் பெற இயலும்.

ஆடு வளர்ப்பைத்தொழிலாகக் கொண்ட நலிந்த பிரிவினருக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் அளிக்கும் வகையில் கடந்த நான்காண்டுகளில் 704 ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் கூடுதலாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வேலையற்ற கிராமப்புற இளைஞர்கள் ஆடு வளர்ப்பைத் தொழிலாகக் கொண்டு, வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ளும் வகையில் ஆடு பராமரிப்பில் குறுகிய காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுகாறும் 800 இளைஞர்கள் பயிற்சி பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

வெள்ளாடு வளர்ப்புக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, புதுக்கோட்டையில் வெள்ளாடுவளர்ப்புப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை 122 தெல்லிச்சேரி கிடாக்களும்; 89 ஜமுனா பாரி கிடாக்களும் இனவிருத்திக்காக விற்கப்பட்டன. இராமேஸ்வரம் தீவில் நாட்டின வெள்ளாடுகளின் தரத்தை உயர்த்துவதில் ஊக்கமளிக்கும்பொருட்டு ஆளுக்கொரு கிடா வீதம் 50 பேருக்கு, 50% மானியத் தொகையில் ஜமுனா பாரி வெள்ளாட்டுக் கிடாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**கோழி வளர்ப்பு:**

கோழி நோய் கண்டறியும் ஆய்வுக் கூடம் ஒன்று ஈரோட்டில் ரூ. 2.77 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. கோழிகளில் பரவும் நோய்களைக் கண்டறிந்து, நோய்த் தடுப்புப் பணிகளை மேற்கொண்டு, கோழி இழப்பினால் ஏற்படும் பெரும் சேதத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை இக்கூடம் மேற்கொண்டிருக்கிறது.

**பன்றி வளர்ப்பு:**

பன்றி வளர்ப்பு இன்னமும் சமுதாயத்தில் மிகவும் நலிந்த பிரிவினராலேயே பராமரிக்கப்படுவதால், அவர் தம் பொருளாதார நிலையை உயர்த்தும் பொருட்டு பன்றி வளர்ப்பில் தனிக்கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வடஆர்க்காடு, சேலம், செங்கல்பட்டு மாவட்டங்களிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 125 பேருக்கு, ஆளுக்கொரு ஆண் பன்றி வழங்கப்பட்டுள்ளது. பன்றியின உற்பத்தித் திட்டத்தின்கீழ் 100 பன்றிப் பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**பசுந்தீவன வளர்ப்பு:**

பால் உற்பத்தி அதிகரிப்பதற்கான கலப்பினக் கால்நடை மேம்பாட்டுத் திட்டங்களின் வெற்றி பசுந்தீவன உற்பத்தியையே சார்ந்துள்ளது. ஆகவே, மானியமளித்தும், பல்வேறு திட்டங்களின்





மூலமும் பசுந் தீவன உற்பத்திக்கான பெருமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏற்கெனவே இயங்கி வந்த 4 பசுந்தீவன உற்பத்தி நிலையங்கள் தவிர, கடந்த நான்கு ஆண்டுகளில் கூடுதலாக 4 நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. கடந்த ஆண்டில் மட்டும் 46.88 இலட்சம் புல்நறுக்குகள் உற்பத்தி செய்யப்பட்டு, 34.13 இலட்சம் புல்நறுக்குகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. 11.84 இலட்சம் டன் தீவனப் பயிர் விதைகளும் உற்பத்தி செய்யப்பட்டன. கூடுதல் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்படுவதன் மூலம் கூடுதல் பால் உற்பத்தி செய்யப்படுகிறது.

**கால்நடை மருத்துவப் பணிகள்:**

கால்நடை பராமரிப்புத் திட்டங்களின் வெற்றி, போதுமான நோய் நீக்கப் பணிகள் அளிப்பதையும் சார்ந்துள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு, கடந்த நான்கு ஆண்டுகளில் 80 புதிய கால்நடை மருத்தகங்களை அரசு திறந்திருப்பதுடன், 18 மருந்தகங்கள் மருத்துவமனைகளாகவும், 9 மருத்துவமனைகள் பிரதம மருத்துவ நிலையங்களாகவும் உயர்த்தப்பட்டுள்ளன. தமிழகத்தில் கால்நடை நோய் நீக்கப் பணிகளுக்காக ஒவ்வோராண்டும் செலவிடப்படும் தொகை பிற மாநிலங்களில் செலவிடப்படும் தொகையை விடக் கூடுதலானது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கால்நடைகளிடையே பெரும் சேதத்தை உண்டு பண்ணும் கொடிய வெக்கை நோயை முற்றிலும் ஒழிக்கும் பொருட்டு ரூ.4.27 இலட்சம் செலவில் மேலும் 3 வெக்கை நோய் மாவட்டக் குழுக்களும்; ரூ. 4.41 இலட்சம் செலவில் 3 வெக்கை நோய் சோதனைச் சாவடிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கால்நடைகளின் உள் பகுதிகளைப் படமெடுத்து, தக்க சிகிச்சையளிக்கும் நோக்குடன், முதன் முதலாக மதுரையில் ரூ. 3.30 இலட்சம் செலவில் ஒளி ஊடுருவிக் கதிர் இயக்கப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

கால்நடைகளிடையே பெரும் சேதத்தை உண்டாக்கும் பிறிதொரு நோயான கோமாரி நோயைத் தடுக்கும் திட்டம் ஒன்று 1980-81ல் ரூ. 7.40 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டு, தடுப்பூசிகள் போடப்படுவதன் மூலம் விலை மதிப்புள்ள ஆவினங்கள் உயிர்ச் சேதத்திலிருந்து பாதுகாக்கப்படுகின்றன.

கால்நடை மருத்துவப் பணிக்கான தரமுள்ள மருந்துகளைத் தயாரிக்கும் பொருட்டு ரூ.16.14 இலட்சம் செலவில் 1980-81ல் புதிய 'மருந்து தயாரிக்கும் நிலையம்' ஒன்று நிறுவப்பட்டது.

மருத்துவ நிலையங்களுக்குத் தேவையான மருந்துகளை வாங்கி சரியான சமயத்தில் விநியோகிப்பதில் உள்ள இடர்ப்பாடுகளை நீக்கும் நோக்குடன் 1980-81ல் ரூ. 2.00 இலட்சம் செலவில் 4 மருந்துக் கிடங்குகள் ஏற்படுத்தப்பட்டன.

தமிழகத்தில் மறையவிருந்த நாய் இனங்களான ராஜபாளையம் மற்றும் கோம்பை இனங்களைப் பாதுகாக்கும் பொருட்டு 1980-81ல் ரூ. 0.50 இலட்சம் செலவில் சென்னை நகரில் சைதாப்பேட்டை கால்நடை மருத்துவமனையில் நாய் வளர்ப்புப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, பொதுமக்களுக்கு நாய்க்குட்டிகள் விற்கப்படுகின்றன.

இராணிப்பேட்டையில் இயங்கி வரும் கால்நடைநோய்த் தடுப்பு மருந்து உற்பத்தி நிலையத்தின் பல்வேறு பிரிவுகள் கடந்த 4 ஆண்டுகளில் விரிவாக்கப்பட்டு, கூடுதலான தடுப்பு மருந்துகள் தயாரிக்கப்பட்டு, தமிழகத்தின் தேவை பூர்த்தி செய்யப்படுவதுடன், அண்டை மாநிலங்களுக்கும் தேவைக்கேற்ப விற்கப்படுகின்றன.

**சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டம்:**

இத்திட்டத்தின்கீழ் கன்று வளர்ப்பிலும், ஆடு, கோழி மற்றும் பன்றி வளர்ப்புப் பிரிவுகள் நிறுவுவதிலும் சிறு குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு உதவியளிக்கப்படுகிறது. கடந்த நான்காண்டுகளில் இத்திட்டங்களின் கீழ் ரூ. 87.92 இலட்சம் மானியமாக அளிக்கப்பட்டு, 8,556 ஆடுவளர்ப்புப் பிரிவுகளும்; ரூ. 20.32 இலட்சம் மானியமாக அளிக்கப்பட்டு 564 கோழி வளர்ப்புப் பிரிவுகளும், ரூ. 1.44 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு 100 பன்றியின வளர்ப்புப் பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டன. கன்று வளர்ப்பின் கீழ் 18,380 கன்றுகள் சேர்க்கப்பட்டு, ரூ. 150.65 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது. இத்திட்டங்களினால் 1651 தாழ்த்தப்பட்ட குடும்பங்களும், 2618 பெண்களும் பயனடைந்துள்ளனர்.

**ஆடு உற்பத்தித் திட்டம் தமிழகத்தில் முன்னேற்றமும், பெரும் சாதனையையும் அடைந்துள்ளது. இதனை, ''ஆடுகள் வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது'' மற்றும் ''ஆடுகள் வளர்ப்பு விவசாயிகளுக்குப் புதியதோர் பாதையை வகுத்துள்ளது'' என்ற தலைப்புகளின்கீழ் முறையே ''குருசேத்ரா'' மற்றும் ''கூட்டுறவுச் செய்திகளின் சாரம்'' என்னும் செய்தி இதழ்களில் வெளியான கட்டுரைகள் விளக்கும். மேலும் மத்திய அரசு மற்றும் உலக வங்கி நிபுணர்கள் ஆகியோரும் இம்மாநிலத்திற்கு வருகையளித்தபோது பெரிதும் பாராட்டியுள்ளனர்.**

**ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்:**

இத்திட்டத்தின்கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ. 8.59 இலட்சம் மானியத்தில் 744 கறவை மாடுகளும்; ரூ. 18.52 இலட்சம் மானிய செலவில் 1504

வேலை மாடுகளும், வழங்கப்பட்டன. ரூ. 14.59 இலட்சம் மானிய செலவில் 1311 ஆடு வளர்ப்புப் பிரிவுகளும்; 0.65 இலட்சம் செலவில் 65 கோழி வளர்ப்புப் பிரிவுகளும்; ரூ. 0.16 இலட்சம் செலவில் 65 பன்றியின வளர்ப்புப் பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டன. மொத்தத்தில் இத்திட்டத்தால் 3689 பழங்குடியினர்கள் பயன் அடைந்துள்ளனர்.

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:**

இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் மட்டுமே செயல்படுகிறது. கடந்த 4 ஆண்டுகளில் 4 ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 415 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, '5884 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 40 பன்றி வளர்ப்புப் பிரிவுகளும் நிறுவப்பட்டுள்ளன.

**மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்:**

இத்திட்டத்தின்கீழ் சிறு-குறு விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் பொருட்டு கன்று மானியத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கடந்த 4 ஆண்டுகளில் மட்டும், 1500 கன்றுகளுக்கு ரூ. 25.31 இலட்சம் மானியமாக அளிக்கப்பட்டுள்ளது.

**வழட்சி நிவாரணப் பணித்திட்டம் :**

இத்திட்டத்தின்கீழ் தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் 430 ஆடு வளர்ப்போர் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. 2606 கறவை மாடுகள்வழங்கப்பட்டன மேலும், கடந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் பொருட்டு, ரூ. 97.63 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதுதவிர, ரூ. 10.51 இலட்சம் செலவில் இராமநாதபுரம் மாவட்டம் முழுமையும் உறை விந்து முறை இனவிருத்தியின்கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**வறட்சி மற்றும் வெள்ளநிவாரணப் பணிகள்:**

1981-82 மற்றும் 1983-84 ஆண்டுகளில் தமிழகத்தைத் தாக்கிய கடும் வறட்சியினால் ஏற்பட்ட வைக்கோல் பற்றாக்குறையைத் தீர்க்கும் பொருட்டு, 3,79,803 மாடுகளுக்கு, கிலோ ஒன்றுக்கு 7 முதல் 15 காசு வீதத்தில் 12,738 மெட்ரிக் டன் வைக்கோல் விநியோகிக்கப்பட்டது. மேலும், ரூ. 123.60 இலட்சம் செலவில் கோமாரிநோய்த்தடுப்பு மருந்து வாங்கப்பட்டு 5,94,809 மாடுகளுக்குத் தடுப்பூசிகள் போடப்பட்டதன் மூலம், நோய் தாக்காதவாறு பாதுகாக்கப்பட்டன.

- நாகரீக மென்பதன் பொருள்,விலங்கினங்
களை விட மனிதன் குறைவாக வேலை
செய்து அதிகப் பயன் அடைவது தான்.
- சமுதாயத்திற்கு உழைக்க வேண்டும் என்ற
ஆர்வத்திலுள்ள மாணவர்கள், கிராமங்
களுக்குச் சென்று அங்குள்ள பாமர
மக்களுக்கு அறிவு புகட்ட வேண்டும்.
- மகிழ்ச்சிஊட்டுவது,புதிய எண்ணங்களைத்
தூவுவது,பழைய கருத்துக்களை மாற்று
வது, பண்பு தருவது,செயல் புரியும் திறன்
அளிப்பது என்பன போன்ற பயன்களைப்
பெறுவதற்கே படிக்கிறோம்!
- நாட்டிலே மறுமலர்ச்சிஏற்பட்டு விட்டது;
தமிழ்மொழி உணர்ச்சியும், தமிழ் மக்கள்
உணர்ச்சியும் இனிப்பிரிந்துவாழமுடியாது;
தென்றலும், புயலும் ஒன்று சேர்ந்து
விட்டன.
- பண்டையமுறையில்தேவையானவற்றைத்
தெரிந்து எடுத்துப் போற்றத் தவறக்
கூடாது. அதுபோலவே தேவையற்றன
வற்றைத் தள்ளிடவும் தயங்கிடக் கூடாது!





மேலும் கடந்த ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தினால்உண்டான கால்நடை இழப்பை ஈடுசெய்யும் விதத்தில் அரசு 5 லட்சத்திற்கு ஒப்புதல் அளித்து, அதற்கான நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்படுகின்றன.

**சிறப்பு மத்திய உதவித் திட்டம்:**

முற்றிலும் ஆதி திராவிடர்கள் மட்டும் பயன்பெறும் வகையில் ரூ. 50.28 இலட்சம் செலவிலான புதிய திட்டத்திற்கு அரசு கடந்த ஆண்டில் ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஆடு உற்பத்தித் திட்டம், பசுந்தீவன உற்பத்தித் திட்டம் மற்றும் இறைச்சி இனக் கோழி உற்பத்தித் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்பட்டு 50%மானிய செலவில் ஆடு மற்றும் கோழி வளர்ப்புப் பிரிவுகள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. இதுவரை, 1700 ஆதி திராவிடர்கள் பயனடைந்துள்ளனர். இதில் 50 சதவீதத்தினர் பெண்டிர் ஆவர்.

**மேற்கண்டுள்ள கால்நடை பராமரிப்புத் திட்டங்கள் செயற்படுத்தப் பட்டதன் பயனாக, பசு மற்றும் எருமைப் பால் உற்பத்தியில் உயர்வு ஏற்பட்டுள்ளது கண்கூடு.**

**1977-78ல் 1.888 கிலோகிராம் மற்றும் 2.534 கிலோகிராம் பெறப்பட்ட பசு மற்றும் எருமையின் தினசரி சராசரி பாலின் அளவு முறையே 82-83ல் பசு ஒன்றுக்கு 2.12 கிலோகிராம் ஆகவும் எருமை ஒன்றுக்கு 2.94 கிலோகிராமாகவும் உயர்ந்துள்ளது.**

1977-78ல் கிடைக்கப்பெற்ற மொத்தப் பால் உற்பத்தியாகிய 1.68 மில்லியன் டன், 1982-83ல் 1,788 மிலியன் டன்னாகவும் உயர்ந்துள்ளது. மேலும், 1977-78ல் 682 மில்லியனாகயிருந்த முட்டை உற்பத்தி 1982-83ல் 898 மில்லியனாகவும் உயர்ந்துள்ளது.

உற்பத்தியில் உயர்வு பெற்றது மட்டுமின்றி, கடந்த 4 ஆண்டுகளில் ஆடு, கோழி மற்றும் பன்றி வளர்ப்புப்பிரிவுகளும்,கறவைமாடுகள் வழங்கப்பட்டதன் பயனாகவும் 13,206 பேர் நேரிடையான வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். இது தவிர ஏராளமான மறைமுகமான வேலை வாய்ப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் வருங்காலங்களில் மேலும் மேலும் சிறந்த திட்டங்களைச் செயல்படுத்த அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

# வகைபெறச் செயல்படும் வக்ஃபு வாரியம்

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் கீழ் இயங்கி வருகின்ற இந்த அரசு, முன்னுதாரணத்திற்கு உரிய பல வகையில் திகழ்ந்து வருகிறது என்பது மிகைப்பாடில்லாத மெய்ப்பாடாகும்.

வக்ஃபு வாரியம் என்பது இஸ்லாமிய அறநிலையத் துறையாகும். மசூதிகள், தர்க்காக்கள் ஆஷூர்கானாக்கள் போன்றவற்றின் சொத்துக்களைப் பாதுகாப்பதும், கண்காணிப்பதும், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தால் அதை மீட்பதும் வக்ஃபு வாரியத்தின் தலையாய பணிகளாகும்.

**மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர்**

## திரு. யா. சை. மு. யூசுப்

**இத்துறையில் தமிழக அரசு எவ்வாறு செயல்படுகிறது? இதை நான் சொல்வதைவிட இந்த அரசுக்கு எதிரணியில் உள்ள முஸ்லீம் எம். பி. ஒருவர் சமீபத்தில் நாடாளுமன்றத்தில் பேசியுள்ளதைக் கேளுங்கள்:**

**"மேற்கு வங்க அரசும் அதைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசும் எந்தக் காலவரையறையும் இல்லாமல், நிரந்தரமாக எந்தக்காலத்திலும் ஆக்கிரமிக்கப்பட்ட வக்ஃபுச் சொத்துக்களை மீட்பதற்குரிய முறையில் சட்டங்கள் இயற்றி இருக்கின்றன. இத்தகைய சட்டங்களை மற்ற மாநில அரசுகள் செய்ய வேண்டுமென்ற ஒரு சுற்றறிக்கையை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அனுப்ப வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."**

இந்த அரசோடு கொள்கை ரீதியாக வேறுபட்டவர்கள்கூட அரசின் ஆக்கபூர்வமான பணிகளைப் பாராட்டுகின்றார்கள் என்றால் அதற்குக் காரணம் புரட்சித் தலைவர் அவர்களே ஆவார்.

இஸ்லாமிய சமுதாயத்திற்கென இந்த ஆட்சியின் எட்டாண்டுக்காலச் சேவை குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாகும்.

இருபத்தைந்து ஆண்டுக்கால வக்ஃபு வாரிய வரலாற்றில் வக்ஃபு வாரியத்திற்கென்ச் சொந்த அலுவலகக் கட்டடம் இல்லாமல் வாடகை இடத்திலேயே இருந்து வருகிறதுஎன்பது பரிதாபமான நிலையாகும். அந்நிலையை மாற்றி, வக்ஃபு வாரியத்திற்கெனச் சொந்தக் கட்டடம் ஒன்றை எழுப்ப நிலம் வாங்கப்பட்டுள்ளது. வரைபட ஒப்புதலோடு விரைவில் கட்டடம் கட்டி முடிக்கப்படவிருக்கிறது.

இடிந்தும், நலிந்தும், தகர்ந்தும் கிடக்கின்ற மசூதிகளைச் செப்பனிட்டு மராமத்துப் பார்க்கும் வகைக்கு, இதற்கு முந்தைய அரசு மான்யமாக ஆண்டுதோறும் மூன்று இலட்சமே கொடுத்து வந்துள்ளது.



ஆனால் புரட்சித் தலைவரின் அரசு அதை ஒவ்வொரு ஆண்டும் ஐந்து இலட்சமாக உயர்த்தித் தந்துள்ளது மட்டுமல்லாமல் இந்த மராமத்துப் பணிக்காக விசேஷமாக ஒரு கோடி ரூபாய் வழங்கி, இந்தியாவில் எந்த மாநிலமும் ஆற்ற முன்வந்திராத பெரும் உதவி புரிந்து, இறை இல்லங்களைப் பாதுகாக்கத் துணை புரிந்துள்ளது.

அது மட்டுமல்லாமல் மராமத்துப் பணிக்கு வழங்கப்படும் ரூ. 5,000 போதுமானதல்ல என்று கருதி, இதை இரட்டிப்பாக-ரூ. 10,000 ஆக வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதுவரை ரூ. 5,000 விதம் 940 வக்ஃபுகளுக்கு 45 இலட்ச ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதனால் வக்ஃபுகளின் மேம்பாடு

அனைத்து சாலைகளும் அஞ்சலகத்தை நோக்கியே!

# உங்கள் பணத்தை 6 ஆண்டுகளில் இரட்டிப்பாக்குங்கள்

## தேசீய சேமிப்புப் பத்திரம்

6-வது வெளியீட்டில் முதலீடு செய்யுங்கள்




ஒவ்வொரு ரூ.100/-ம் ரூ.201.50 ஆக பெருகுகிறது

உங்கள் பணத்திற்கு நல்ல வட்டியும் பாதுகாப்பும் அளிக்கிறது. இப்பத்திரம் ரூ.10, 50, 100, 500, 1000, 5000 மதிப்பில் கிடைக்கும். முதலுக்கும், வட்டிக்கும் வருமான வரி சலுகை உண்டு!

அயல் நாட்டில் வாழும் இந்தியர்களுக்கு 13% வட்டி அளிக்கிறோம்!

தொடர்பு கொள்க :
இயக்குநர்,
**சிறு சேமிப்புத் துறை,**
143, அண்ணா சாலை, சென்னை-600 002
அல்லது அருகிலுள்ள அஞ்சலகங்கள்.

DIPR-509/83-EP



**வக்ஃபு வருவாய் வளர்ச்சிக்காக தமிழக அரசின் நீண்ட காலக் கடனுதவி மூலம் சிதம்பரத்தில் உருவாக்கப்பட்டுள்ள தங்கும் விடுதி**

களுக்குத் தமிழக அரசின் தயாள தாராள மனப்பான்மையை இஸ்லாமியர்கள் உணரக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

வக்ஃபுகளில் செம்மையான மராமத்துப் பணிக்கு உதவுவதோடு மட்டுமல்லாமல் வக்ஃபுகளின் வருமானம் பெருக்கவும் இந்த அரசு நீண்டகாலத்தவணையில் மத்திய அரசின் உதவியோடு ஒவ்வொரு வக்ஃபுக்கும் இலட்சக் கணக்கில் கடன் வழங்கி வருகிறது.

இதனால் திருமண மண்டபங்கள், கடைகள், விடுதிகள், கட்டடங்கள் ஆங்காங்கே கட்டப்பட்டு வருகின்றன.

இதுவரை இவ்வகைக் கடனுதவியாக் மத்திய, மாநில அரசுகள் வழங்கிய 86 லட்ச ரூபாயினால் 35 வக்ஃபுகள் நல்ல முறையில் பயனடைந்துள்ளன. இதில் 27 வக்ஃபுகள் மட்டும் மாநில அரசின் உதவியைப் பெற்று முன்னேற்றமடைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒவ்வொரு ஆண்டும் கல்வி ஊக்கத் தொகையாக மத்திய வக்ஃபு கவுன்சிலிடமிருந்து மாணவர்களுக்குப் பண உதவி செய்யப்படுகிறது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக-முத்தாய்ப்பாகத் தமிழக அரசு இஸ்லாமிய சமுதாயத்திற்குச் செய்து வரும் அளப்பரிய சேவையை இங்கே குறிப்பிடுவது நலம் என்று கருதுகிறேன்

இஸ்லாமிய மார்க்க வல்லுநர்களான ''உலமாக்கள்'' எனப்படுவோரும், இஸ்லாமிய மார்க்கத்தின் முதன்மையான சேவகர்களான 'மூ அத்தின்' எனப்படுவோருக்கும் தமிழக அரசு ஓய்வூதியம் மாதந்தோறும் ரூ. 250 வழங்கி வருவது தெரிந்ததே! இது இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அற்புதமான திட்டம் என்பது மட்டுமல்லாது மலேஷியா, பாகிஸ்தான் போன்ற இஸ்லாமிய நாடுகளில்கூட இது போன்ற திட்டம் அமல்படுத்தப்படவில்லைஎன்பது உற்று நோக்கத் தக்கதாகும்.

500 பேர்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருந்த இவ் ஓய்வூதியத்தை இவ்வாண்டு முதல் 600 பேர்களுக்கு வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இஸ்லாத்திற்கும் இஸ்லாமிய சமுதாயத்திற்கும் பாடுபட்டவர்களை கவுரவிப்பதிலும் கண்ணியப்படுத்துவதிலும் இந்த அரசு முன்னுதாரண்மாக விளங்கி வருகிறது.

மாவட்டங்களுக்கு தேசியத் தொண்டாற்றியவர்களின் பெயர்களைச் சூட்டும் திட்டத்தில் தஞ்சை மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து, நாகப்பட்டிணத்தைத்தலைநகராகக்கொண்ட பகுதிக்கு கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் பெயர் சூட்டப்படவிருக்கிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் திருவாழ்க்கைச் சரிதமான ''சீறாப்புராணத்தை' இயற்றிய உமறுப்புலவர் அவர்களின் நினைவாக அவர் பிறந்த எட்டையபுரத்தில் சுமார் 4 இலட்ச ரூபாய் செலவில் நூல் நிலையம் ஒன்று நிறுவப்படும் வகையில் எல்லா வேலைகளும் பூர்த்தியாகி உள்ளன.

அதேபோல் சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர்அவர்கள் பிறந்த ஊரான நாகர்கோயில் கோட்டாறில், அவர்களின் நினைவாக, நினைவு மணி மண்டபத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளதையும் இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.



நாகர்கோவில் இடலாக்குடியில் சதாவதானி செய்குத்தம்பிப் பாவலரின் நினைவு மண்டபம் கட்டும் இடத்தைப் பார்வையிட்டும், சமாதியில் மலர்மாலை வைத்தும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மரியாதை செலுத்தினார்கள்.(29-4-84)

PHILIPS

# பிலிப்ஸ்

# தோற்றத்தில் எல்லா பல்புகளும் ஒன்றுதான்.




# ஆனால், பிலிப்ஸ் எனும்போது தரம் பளிச்சிடும்.

தரத்திற்கு உறுதி தருவது இப்பெயர், நீடித்திருக்கும்
பளிச்சிடும் வெளிச்சம் தரும் பல்பினைப் பெறவும்
இப்பெயர் சொன்னால் போதும். உங்கள் பணத்திற்குத்
தகுந்த மதிப்பு தருவதும் இதுவே.

பிலிப்ஸ் பல்புகள். எமது பெயர் கொண்டவை
உமது சோதனையில் வெல்லும்.

**பிலிப்ஸ் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய வீடுதோறும் விளங்கும் நம்பகமான பெயர்**

PEI-1264

# தாய் சேய் நலம் காப்போம்



குழந்தை நலமே குடும்ப நலம் என்பார்கள். குழந்தைகள் உடல் நலத்துடன் உற்சாகமாக இருந்தால் குடும்பத்திலும் மகிழ்ச்சி நிலவுகிறது.

சிறுவயது முதலே குழந்தைகள் நோய் நொடியின்றி வளர்ந்திட நாம் கண்ணும் கருத்துமாக இருந்திட வேண்டும். இதில் தாயின் பங்கு மிக முக்கியமாக விளங்குகிறது.

பொதுவாக, தாய் சேய் நலமானது, வளமான சமுதாயத்துக்கு வழிகோலுகிறது எனலாம். இந்த நல்ல நோக்கத்தோடு, சென்னை மாநகராட்சியின் மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் துணைப் பணியாளர்களுக்கு 'யுனிசெப்' ஆதரவில், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியின் குழந்தை மருத்துவத்துறை ஒரு பயிற்சியை நடத்தியது. அதுதான் 'குழந்தை நலப் பராமரிப்புப் பயிற்சி' யாகும்.

1984 மே முதல் ஜூன் 16 முடிய இந்தப் பயிற்சியில் 240 பேர் கலந்து கொண்டனர்.

இந்தப் பயிற்சியின் உடனடி நோக்கம், தாய்மைப் பேறு குறித்தும் குழந்தை நலம் குறித்தும் மாநகராட்சி நலத் துறை மூலம் சமுதாயத்திற்கு உணர்த்துவதாகும்.

இதன் நீண்ட கால நோக்கம், இதில் பயிற்சி பெற்றோர் தொடர்ந்து இப்பணியில் ஈடுபடுவதன் மூலம், தாமே பிறரைப் பயிற்றுவிக்கும் திறமை பெறுவது ஆகும்.

இதன் இறுதி நோக்கம், சமுதாயம் முழுவதும் குழந்தை நலனைப் பேணும் முறைகளை அறிந்து அவற்றைப் பயன்படுத்துவது ஆகும்.

குழந்தைகள் நோய்வாய்ப்படுவதற்கும், இறந்து போவதற்கும் முக்கிய காரணம் என்ன? சத்துணவின்மையால் வரும் வயிற்றுப் போக்கும், நோய்த்தொற்றுமேயாகும். சத்துணவின்மை காரணமாக அதிகமாகப் பரவி வரும் தீர்க்க முடியாத நோய்களுக்கு, அண்மைக் காலத்தில் விஞ்ஞானத் தொழில் நுட்ப ரீதியாகத் தீர்வு கண்டுள்ளனர். இது குறித்து அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய சில விதிமுறைகளும் வகுக்கப்பட்டுள்ளன.

• வயிற்றுப் போக்கால் நோய்வாய்ப்பட்டு இறப்பதை வெகுவாகக் குறைக்க, நீர் வற்றா வண்ணம் வாய்வழி நீர் அளிக்கும் சிகிச்சை.

• காசநோய், தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல் இரண ஜன்னி, தட்டம்மை இவை குழந்தையைத் தாக்காமலிருக்கத் தடுப்பு ஊசிகள், மருந்துகள் அளித்தல்.

• தாய்ப்பால் ஊட்டுவதை ஊக்குவித்தல்.

• சரியான கட்டி ஆகாரத்தை குழந்தையின் வளர்ச்சிக்கேற்ப அறிமுகப்படுத்தல். ஊட்டச் சத்து அதிகரித்தல்.

• குழந்தைகள் வளர்ச்சியைத் தாய்மார்கள் கண்காணித்தல்.

• குழந்தைப்பேற்றுக்கிடையே போதிய இடைவெளி.

• பெண்கள் கல்வி

குடும்பத்தில் தாயின் பங்கு முக்கியமானது. தாய்க்கு அறிவூட்டுவது, குடும்பம் முழுமைக்கும் அறிவூட்டுவதாகும். தாய்மைக் கல்வியானது குழந்தை நலத்திற்கு மிக இன்றியமையாததாகும். இது 'தேவையான நுட்பத்தைக் குடும்பத்திற்கு அளித்தல்' என்னும் முக்கிய நோக்கத்தை நிறைவேற்றுவதாகும்.

தாய்க்கும், குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும் இந்த நலச் செய்தியைப் பரப்புவதற்கு, நலத்துறையில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் புதிய பயிற்சி தேவை.

# எல்லோரும் விரும்பும் எகானமி மாடலுக்கு நிகராக இப்பொழுது ஒரு

# புதிய சாலிடெர் TS33E!

சாலிடெர் TS 32E, எல்லோரும் விரும்பி வாங்கும் ஜனதா மாடலாக திகழ்ந்தது. இதற்கு நிகராக இப்பொழுது தனிச் சிறப்பு வாய்ந்து, உங்கள் ரசனைக் கேற்ப எழிலான அமைப்பு கொண்ட சாலிடெர் TS 33E ஒரு அற்புத படைப்பு.

எளிதாக நகரக்கூடிய இரண்டு ஷட்டர்கள், பகட்டான பாலிஸ்டைரின் முகப்பு, நேர்த்தியான கன்ட்ரோல்கள் போன்ற சிறப்பான அம்சங்கள் அடங்கியது சாலிடெர் TS 33E.

அதுமட்டுமின்றி விஷன் இன்டர்மீடியட் ஃபிரிகுவன்ஸியில் (VIF) கண்டுள்ள முன்னேற்றத் திறல் செய்தி வாசிப்பவரின் கண் இமைகள் கூட துல்லியமாக தெரியும் படத்தோற்றம். படம் மேலும் கீழுமாக ஓடாமலிருக்க பிரத்யேக ஆட்டோமாடிக் 'ஒலி தடுப்பு' அமைப்பு.

மேலும் இதிலுள்ள 4 வாட் ஆம்ப்ளிஃபையர் வெகு சீரான ஒலியை அளிக்கிறது. தொலைதூர இடங்களுக்கென இதில் கூடுதலாக ஒரு ஹை-கெய்ன் ஆன்டெனு அமைப்பு பொருத்தப் பட்டுள்ளது. விசிஆர், டேப்ரெக்கார்டர் போன்றவற்றுக்கு பிரத்யேக அமைப்பு உள்ளது.

இத்தகைய முற்போக்கான அம்சங்களை மிக சிக்கனமாக உங்களுக்கு அளிக்கிறது TS 33E. எப்பொழுதாவது சர்வீஸ் வசதி தேவைப்பட்டால் உடனடியான பராமரிப்பு உண்டு.

**ரூ. 325 மிச்சம்**

உள்ளடங்கிய வோல்டேஜ் ஸ்டெபிலைஸர்



# சாலிடெர்

-தொல்லையில்லாத் தொலைக்காட்சி

HE 860B

DIPR|216|84|61 ASP



# நூல் நயம்

## தோட்டக்காட்டினிலே...

(ஆசிரியர்கள்: மலரன்பன், மாத்தளை சோமு, மாத்தளை வடிவேலன், வெளியீடு: மாத்தளை தமிழ் எழுத்தாளர் ஒன்றியம், மாத்தளை, கிடைக்குமிடம்: 95, மெயின்ரோடு, மண்ணச்சநல்லூர் திருச்சி மாவட்டம், விலை ரூ.7.50 பக்கம்:98)

''1939ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை இந்த நாட்டிற்காக 'தோட்டக் காட்டினிலே' இறுதி மூச்சுவரை உழைத்து உழைத்துத் தம்மைச் சுரண்டிச் சொகுசு கண்ட வர்க்கத்தினரின் அடக்குமுறைக்கும், அட்டூழியத்திற்கும் எதிராக அவ்வப்போது குரல்கொடுத்தும், கொடி உயர்த்தியும், போராடி அவர்களின் துப்பாக்கிகளுக்குப் பலியாகி உயிர் நீத்த தோட்டத் தொழிலாளர் தோழர்களுக்கு இச்சிறுகதைத் தொகுதி சமர்ப்பணமாகிறது...'' என்ற குறிப்புடன் இச் சிறுகதைத்தொகுதி ஆரம்பமாகிறது.

இத்தொகுதியில் உள்ள ஒன்பது கதைகளும் மலரன்பன், மாத்தளை சோமு, மாத்தளை வடிவேலன் ஆகியோரால் சுவையுற எழுதப்பட்டுள்ளன.

சிறுகதைகள், இலங்கை மலையக வாழ்க்கையைச் சித்திரிக்கின்றன. அங்கு உழைப்பைச் சிந்தும் தோட்டத் தொழிலாளர்களை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றன. கதாசிரியர்கள் தாங்கள் கண்ட, கேட்ட, பழகிய நிகழ்ச்சிகளை எழுத்து வடிவமாக்கி, சிறந்த சிறுகதைத் தொகுப்பாக வெளியிட்டிருக்கிறார்கள். இதிலுள்ள சிறுகதைகள் இலங்கைத் தமிழ் இதழ்களில் வெளிவந்தவையாகும்.

## சிந்தனைக் கோவை

(ஆசிரியர்: சக்தி சீனிவாசன், வெளியீடு: அல்லயன்ஸ்கம்பெனி, அஞ்சல் பெட்டி எண்: 617, மயிலாப்பூர், சென்னை-4. விலை ரூ. 4.50. பக்கம்: 64)

பயனுள்ள சிந்தனைகளின் தொகுப்பாக இந்நூல் விளங்குகிறது. மானம் காக்க உதவுவது ஆடை; மனம் காக்க உதவுவது சிந்தனை' என்று ஆசிரியர் அழகாகக் குறிப்பிடுகிறார்.'

வெற்றியின் திறவுகோல் திறமையே, செயலே சிறப்பை அளிக்கும், எத்தனை கோடி இன்பம், அன்பு எதை எதிர்பார்க்கிறது? வீரத்துடன் எதிர்த்து தீரத்துடன் போராடு!.. இப்படிப் பல தலைப்புகளில் நம் சிந்தனைக்கு விருந்தூட்டும் பலப் பல கருத்துக்களை ஆசிரியர் நூல் முழுவதும் தெரிவிக்கிறார். வெற்று அலங்காரம் இல்லாமல் வாழ்க்கைக்கு வழி காட்டக்கூடிய வளமுள்ள கருத்துக்களை மணிகளாகக் கோத்து, மாலையாகக் கட்டியிருக்கிறார். மாணவர் மட்டுமல்ல, பெரியவர்களும் இந்நூலைப் படித்துப் பயன் பெறலாம்.

—பி. வி. ஜி.

---

நாமே அவற்றை நன்கு தெரிந்து கொள்ளவும், குழந்தை நலத்துறையில் இதுவரை-இன்று வரை கண்டுள்ள முன்னேற்றங்களை அறிந்து கொள்ளவும், நாம் செய்ய வேண்டிய தொண்டின் எல்லையை வரையறுக்கவும், தம் மனப்பான்மைகளை மாற்றிக் கொள்ளவும், அறிவும் திறமையும் பெறவும் இத்தகைய பயிற்சி இன்றியமையாததாகிறது.

சென்னையைப் பொறுத்த மட்டில், நல்ல நல அமைப்பு உருவாகியுள்ளது. மாநகராட்சியில் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நலப்பணியாளர்கள் உள்ளனர். மேலும் 11 ஒருங்கிணைந்த நகர்ப்புறக் குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்களும் இயங்கி வருகின்றன. இவற்றுள் 3, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியின் மேற்பார்வையில், மாநகராட்சியில் 150 கோட்டங்களில் 40-ல் இயங்குகின்றன.

பயிற்சி அளிக்கப்பட்ட 240 பேர்களும் மாநகராட்சியின் மருந்தகங்கள், குழந்தை நல மையங்கள், நல மையங்கள் இவற்றைச் சேர்ந்தவர்கள், மேலும், களப்பணியாளர்களாகிய துப்புரவு ஆய்வாளர்கள், நலக்கண்காணிப்பாளர்கள், அடிப்படை நலப் பணியாளர்கள் ஆகியோரும் இதில் அடங்குவர்.

சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில், 16-6-84 அன்று நடந்த நிறைவு விழாவில், பயிற்சி பெற்ற 240 பேர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பெற்றன.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள் தம் சிறப்புரையில், 'இந்தப் பயிற்சியின் விளைவாகச் சமுதாயத்துக்கு லாபம் கிடைத்திருக்கிறது என்று சொல்லலாம். குழந்தை நலனில் ஆர்வம் உள்ளவர்களுக்குத் தரப்படும் இந்தப் பயிற்சியைத் தமிழ்நாடு முழுக்க விரிவுபடுத்த வேண்டும்' என்றுகேட்டுக் கொண்டார்.

விழாவில் சென்னை மாநகராட்சிச் சிறப்பு அலுவலர் திரு. கே. சந்திரசூடன் இ. ஆ. ப. சென்னை மாநகராட்சி ஆணையர் திருமதி. சாந்தஷீலா நாயர் இ. ஆ. ப., ஸ்டான்லி மருத்துவக் கல்லூரிப் பேராசிரியையும், இந்தப் பயிற்சியின் அமைப்பாளருமான டாக்டர் பி. சந்திரா, மக்கள் நல்வாழ்வுத் துறை ஆணையர் மற்றும் செயலாளர் திரு. ஆர். சண்முகம், இ. ஆ. ப., ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் பி.நடராஜன், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைமை சமுதாய வளர்ச்சி அலுவலர் திரு. எம். ஸ்வரூப், சென்னை மாநகராட்சி மருத்துவ அலுவலர் டாக்டர் எம். சுவாமிநாதன் ஆகியோர்,தாய் சேய் நலம் பற்றி விளக்கம் தந்தனர்.

மருத்துவர்கள், மற்றும் மருத்துவத் துணைப் பணியாளர்கள் ஆகியோருக்கு அளிக்கப்பட்டுள்ள இந்தப் புதிய பயனுள்ள பயிற்சியானது, செம்மையான முறையில் சமுதாயத்தைச் சென்றடையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

—பி. வி. கிரி








தமிழ்நாட்டில் ஏற்கெனவே உள்ள 12 கூட்டுறவு நூற்பு ஆலைகளும் கைத்தறி நெசவாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 3.17 லட்சம் கதிர்களில் மாதம் ஒன்றுக்குப் பல ரகங்களில் 75,00 பேல்கள் பருத்தி நூல் உற்பத்தி செய்து கொண்டு வருகின்றன.

தமிழக அரசு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் புதிய ஐந்து கூட்டுறவு நூற்பு ஆலைகளை தர்மபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரையிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கியிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டயபுரத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதியிலும், மதுரை மாவட்டத்தில் தேனியிலும் கட்டுவதற்கு அனுமதி அளித்தது.

தமிழகத்தின் 17 கூட்டுறவு நூற்பு ஆலைகளிலும் தேனி கூட்டுறவு நூற்பு ஆலை ஒன்றுதான் அடிப்படையிலேயே பருத்தி உற்பத்தி செய்யும் விவசாயிகளின் நன்மைக்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ள ஆலையாகும்.

அங்கத்தினர்களின் பொருளாதார மேம்பாட்டுக்காகவும், பருத்தி உற்பத்தியினைப் பெருக்குவதற்காகவும், ஆலையில் நூல் உற்பத்தி, சாயம் போடுதல், தறிபோடுதல் போன்ற எல்லா வகையான நூல், துணி உற்பத்தியினையும் செய்து அதற்காகப் பருத்தி உற்பத்தியாளர்கள் மற்றவர்களிடமிருந்து பஞ்சு வாங்கி எல்லா வகையான நூல்களையும் நெசவாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் கொடுப்பது இந்த கூட்டுறவு நூற்பு ஆலையின் நோக்கங்களில் ஒன்றாகும். இவ்வாலை 25,000 கதிர்கள் கொண்டு இயங்கும்.

இந்த ஆலை மதுரை தேனி நெடுஞ்சாலையில், தேனியிலிருந்து 9 கி.மீ. தூரத்திலும், ஆண்டிப்பட்டியிலிருந்து 8 கி.மீ. தூரத்திலும், வைகை அணையிலிருந்து 6 கி.மீ. தூரத்திலும் உள்ள கண்டமனூர்விலக்கு என்று கூறப்படும் இடத்தில் அமைந்துள்ளது.

ஆலையினை நிறுவுவதற்கான முதலீடுரூ ·714 லட்சமாகும்· இதில் 50 சதவிகிதம் தமிழ்நாடு அரசின்

# மதுரை மாவட்டத்தில் புதிய நூற்பு ஆலை

அ. மருதவிநாயகம்





பங்காகும்; மீதம் 50 சதவிகிதம் இன்டஸ்ட்ரியல் க்ரெடிட் அண்ட் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன், இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் பாங்க் ஆப் இந்தியா, இன்டஸ்ட்ரியல் பைனான்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா ஆகிய மூன்று நிறுவனங்களும் சேர்ந்து வழங்கும் நீண்ட காலக் கடனாகும்.

மொத்த முதலீடான ரூ. 714 லட்சத்தில், அங்கத்தினர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய பங்குத் தொகை, ரூ. 35 லட்சம் ஆகும். அங்கத்தினர் பங்குத் தொகையில் இதுவரை ரூபாய் 9.25 லட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. அங்கத்தினர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய பங்குத் தொகை தவிர, தமிழ் நாடு அரசின் பங்கு, கடன் வழங்கும் நிறுவனங்களின் நீண்ட காலக் கடன் தொகை முழுமையாகப் பெறப்பட்டாகிவிட்டது. இது தவிர, தமிழ்நாடு அரசின் 'சிப்காட்' நிறுவனத்திடமிருந்து இவ்வாலைக்கு ரூ. 15 லட்சம் மானியமாக விரைவில் கிடைக்கும்.

தமிழக அரசு இந்த ஆலையின் பல்வேறு கட்டடங்களைக் கட்டுவது பற்றித் தீர்மானம் செய்யப் 'பணிக்குழு' ஒன்றை அமைத்துள்ளது. அந்தக் குழு, ஆலையின் கட்டுமானத்திற்கு திருவாளர்கள் சி. ஆர். நாராயண ராவ் (கன்சல்டன்ட்) பிரைவேட் லிமிடெட் சென்னை அவர்களை ஆலையின் திட்டம், வரைபடம் முதலியன தயார் செய்வதற்கான சிற்பியாக நியமனம் செய்துள்ளது.





பஞ்சுக் கிட்டங்கி ரூ. 6.60 இலட்சம்மதிப்பீட்டில்மே '83லும் தற்காலிக அலுவலகமும், கிட்டங்கியும் ரூ. 90,000 திட்ட மதிப்பீட்டில் மார்ச் 1983லும் முடிவடைந்து, ஏப்ரல் 1983முதல் தேனியில் வாடகை இடத்தில் இயங்கிக் கொண்டிருந்த அலுவலகம் புதிய அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது.

இரும்பு டிரஸ்கள், ஏ. சி. சீட்., கூரை ஆகிய பணிகளைத் தமிழ் நாடு அக்ரோ இன்ஜினீயரிங் அண்டு சர்வீஸ் கூட்டுறவு இணையம் ரூ. 36 இலட்சம் செலவில் வேலை செய்தது. ஆலையின் கட்டுமானப் பணியில் 'புளோரூம் பிரிபரேட்டிரி பிரிவுகள் முழுவதும் முடிவடைந்துள்ளன. இதரப் பிரிவுகளும் முடியும் நிலையில் உள்ளன.

ஆலையின் நிர்வாக அலுவலகக் கட்டடம் ரூ. 10,15,139 செலவில் கட்டப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளது.

புதிய கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கு எல்லாவிதமான இயந்திரங்கள் வாங்குவதற்காக தமிழக அரசால் மத்திய இயந்திரங்கள் வாங்கும் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவின் பரிந்துரையின்படி இதுவரை ரூபாய் 416.55 லட்சங்கள் பெறுமானமுள்ள இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளது.

* **இடைத்தரகர்களிடம் இருந்து பருத்தி விவசாயிகள் விடுதலைபெற இந்த ஆலை அமைக்கப்பட்டுள்ளது.**
* **ஆதிதிராவிடர்களுக்கும், தாயகம் திரும்பியோருக்கும் அதிக அளவில் வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.**
* **சமூகப் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கியுள்ள ஆண்டிப்பட்டி வட்டாரத்தில் ஆலை அமைந்துள்ளது.**

பெரும்பான்மையான இயந்திரங்கள் புளோரூம் இயந்திரம் முதல், நூற்புப் பகுதி இயந்திரங்கள் வரை இந்தியாவில் தலை சிறந்த நூற்பு ஆலை இயந்திரம் என்று கருதப்படும் லட்சுமி ரைட்டர் இயந்திரங்கள் லட்சுமி மிஷின் ஒர்க்ஸ், கோவையிடமிருந்து வோல்டாஸ் கம்பெனி மூலமாக ஆலைக்கு வரங்கப்பட்டுள்ளன. இந்தக் கம்பெனியின் இயந்திரங்கள் சுவிட்சர்லாந்து நாட்டுடன் கூட்டுத் தயாரிப்பு என்பதாலும் தலை சிறந்ததாகக் கருதப்படுகின்றன.

ஆலையில் 124 அடிக்கு ஆழ்துளைக் கிணறுகள் இரண்டு தோண்டப்பட்டுள்ளன. அந்தக் கிணறுகளில் 34 அடியிலேயே நல்ல தண்ணீர் வேண்டிய அளவு கிடைக்கிறது. ஒரு கிணற்றில் ஒரு மணி நேரத்திற்கு 1,200 கேலன் தண்ணீர் கிடைக்கிறது. ஆலைக்குப் போதுமான தண்ணீர் இந்த இரண்டு கிணறுகளிலிருந்தும் கிடைக்கிறது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தினின்றும் உயர் மின் அழுத்தம் 1,500kVA ஆலைக்கு அனுமதிக்கப்பட்டு அதற்கான பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆலையின் முழு மின்சாரத் தேவைக்கு மாற்று ஏற்பாடாக 625 கிலோ வாட் டீசல் ஜெனரேட்டர் ஒன்றும், 325 கிலோ வாட் டீசல் ஜெனரேட்டர்கள் இரண்டும் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆலையின் இடத்தில் தென்னை, வேம்பு, போகன்வில்லா, யூகலிப்டஸ், மாங்கன்று, பலா மரங்கள் ஏறத்தாழ 1,000 நடப்பட்டுள்ளன.

ஆலையின் திட்ட அறிக்கையின்படி ஆலையில் 612 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப்பெறும். இதில் 225 சிலோன் அகதிகளுக்கும், 225 ஆதிதிராவிடர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்படும். மீதம் உள்ள 162 தொழிலாளர்களும் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக வேலைக்கு அமர்த்தப்படுவார்கள்.

* **தேனி கூட்டுறவு நூற்பாலையின் பரப்பளவு 42.64 ஏக்கர்**
* **ஆலை அமைந்துள்ள பகுதி பருத்தி நூல் உற்பத்திக்கு ஏற்ற கோயம்புத்தூர் பகுதி போன்று சீதோஷ்ண நிலை உடையது.**
* **திருப்பூர், தேனி பருத்திச் சந்தைகள் தமிழகத்தில் சிறப்பு வாய்ந்தவை**
* **முதலீட்டில் உற்பத்தி துவங்குவதற்கு முன் ரூ. 30 இலட்சம் கிடைத்துள்ளது.**
* **தீ போன்ற விபத்துக்களிலிருந்து பாதுகாக்க இன்ஷுரன்ஸ் கம்பெனிகளின் ஆலோசனைப்படி ஆலை அமைக்கப்பட்டுள்ளது.**
* **திட்ட அளவீட்டிற்குள் ஆலைப் பணி முடிக்கப்பட்டுள்ளது.**
* **கூட்டுறவுத் துறையில் உள்ள நூற்பாலைகளில் இது தலை சிறந்ததாகத் திகழும்.**

மின் பணிகள் 6-2-'84 அன்று துவங்கப்பட்டுள்ளன. பிரிபரேட்டரி பிரிவின் இயந்திரங்கள் பொருத்தும் பணி 2-3-'83 அன்று துவங்கப்பட்டது.

ஆலையின் அலுவல்களைக் கவனிப்பதற்கென மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை ஆலையின் தலைவராகக் கொண்ட நிர்வாகக் குழு ஒன்றினை, கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் அவர்கள் நியமனம் செய்துள்ளார்.

ஆலையின் தலைவராக திருமதி வி. சந்திரலேகா இ.ஆ.ப. அவர்களும், நிர்வாக இயக்குநராக திரு ஜே. ராஜமாணிக்கமும் பணியாற்றி வருகிறார்கள். இந்த ஆலையின் உற்பத்தி, திட்ட காலத்திற்கு முன்னதாக சோதனை முறையில் தொடங்கப்பட்டுள்ளது. விரைவில் முழு உற்பத்தியைத் துவக்க இருக்கிறார்கள்.

இயற்கை எழில் சூழ்ந்த–பின் தங்கிய ஆண்டிபட்டி வட்டாரத்தில் அமைந்துள்ள இவ்வாலை தமிழகத்தின் சிறந்த ஆலைகளில் ஒன்றாகத் திகழும் என்பதில் ஐயமில்லை!



# அலை கடலோரம் அழகிய குடியிருப்புகள்

பல்லவர், சோழர் காலத்தில் முன்பு அடர்ந்த வனமாக இருந்த இடம், சென்னை நகரில்இருந்தது.

எந்த இடம் என்று ஊகிக்க முடிகிறதா?

சென்னை மயிலாப்பூர், அகில இந்திய வானொலி நிலையத்துக்கு எதிரில் உள்ள டொம்மிங் குப்பம் தான் அந்த வனப்பகுதி என்று வரலாறு கூறுகிறது.

இந்தத் தகவலை, 6.6.'84 அன்று தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்றுவாரியத்தின் சார்பில் நடந்த குடியிருப்புகள் திறப்பு விழாவின் போது தெரிந்து கொள்கிறோம்.

இந்த டொம்மிங்குப்பத்தில் 120 குடியிருப்புகள் திறந்து வைக்கப் பெற்றன. 408 குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

சென்னை மாநகராட்சி 131வது வட்டத்தில், சுமார் 90 மனைப்பரப்பளவில், வங்கக் கடலோரமாக அமைந்துள்ளது தான் டொம்மிங்குப்பம்.

கடலோரப் பகுதிகளில் பெருமளவில் எவ்வித வசதியுமின்றி கடலரிப்பினால் பாதிக்கப்படும் நிலையில் வசித்து வரும் ஏழை எளிய மீனவ மக்களுக்கு, எழில் மிகு மாடிக் குடியிருப்புகளைக் கட்டித் தரும் நோக்குடன், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், பல திட்டங்களைச் செயலாற்றி வருகின்றது.

இந்தத் திட்டப் பகுதியில் ஏற்கெனவே 276 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தற்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒப்புதல் அளித்த திட்ட வரைபடத்தின்படி 'அட்கோ' உதவியுடன் 216 குடியிருப்புகள் ரூ. 33.00 இலட்சம் செலவில் கட்டத் திட்டமிடப்பட்டு, தற்போது 120 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

1974-ஆம் ஆண்டு சோதனை முறையில் இத்திட்டப் பகுதியில் கட்டப்பட்ட 90 குடியிருப்புகள் கடற் காற்றினால் பாதிக்கப்பட்டு, மக்கள் குடியிருக்கத் தகுதியற்ற அளவில் பழுது பட்டு விடவே, அக்குடியிருப்புகளை இடிப்பதற்கு ஆணையிடப்பட்டது அக்குடியிருப்புக்களை அகற்றி விட்டு அந்த இடத்தில் மீதமுள்ள 96 குடியிருப்புகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு குடியிருப்பின் மதிப்பு சுமார் 18.000 ரூபாய் ஆகும். மேலும் 'அட்கோ' நிதி உதவியுடன் ரூபாய் 53.41 இலட்சம் செலவில் 312 குடியிருப்புகள் கட்டுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பகுதியில் உள்ள ஒரு குடியிருப்பின் கட்டடப் பரப்பு 21.06 சதுர மீட்டர்கள் ஆகும். ஒவ்வொரு குடியிருப்பும் ஒரு பொது அறை, சமையல் பகுதி கழிப்பிட வசதியுடன் கூடிய குளியல் அறை கொண்டதாக இருக்கும், ஒவ்வொரு குடியிருப்பிற்கும் தண்ணீர், குழாய் மூலமாக, மேல்நிலைத் தொட்டிகளில் இருந்து வழங்கப்படும்.

இக்குடியிருப்புகளில் வசிக்கும் மீனவ மக்களுக்கு மாத வாடகை எவ்வளவு தெரியுமா? ரூ. 22 தான்!

குடிநீர் வசதிக்காக இப்பகுதியில் 16 அடி விட்டமுள்ள கிணறு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வெளிப்புறத் தண்ணீர்க் குழாய் வசதிகள் ரூபாய் 0.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

குடியிருப்புகளில் இருந்து வெளியேறும் கழிவு நீர், சீரான முறையில் வெளியேற ரூ. 0.30 இலட்சம் செலவில் உட்புற, வெளிப்புறக் கழிவு நீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டு, முக்கிய சாலைகளில் செல்லும் கழிவு நீர்க் கால்வாய்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

# செயற்கை இருதயம்

செயற்கை இருதயம் உருவாக்குவதில்
சோவியத் நிபுணர்கள் முக்கிய முன்னேற்றம்
கண்டுள்ளனர். அதாவது, இரத்தத்தில் உள்ள
உயிரணுக்கள் படும்பொழுது அவற்றைக்
கெடுத்துவிடாத ஒரு பொருளை அவர்கள்
கண்டுபிடித்து இருக்கின்றனர். செயற்கை இரு
தயம் தயாரிப்பதற்கு இதைப் பயன்படுத்த
லாம்.

இதற்கு முன், செயற்கை இருதயம் செய்
வதற்குப் பயன்படுத்தப் பட்டிருந்த பொருள்
களின் மீது இரத்தத்தில் உள்ள உயிரணுக்கள்
பட்டால், அவை கெட்டுப்போய்த் தங்கள்
பணிகளைச் செய்ய முடியாத நிலைமை ஏற்
பட்டது. இதனால் உடல் திசுக்களில் பிராண
வாயு குறைந்து, இரத்தத்தில் நச்சுப்பொருள்
கள் சேரத் தொடங்கின.

இரத்தத்தில் உள்ள நுண் உயிர்கள்
செயற்கை இருதய பிளாஸ்டிக்கில் பட்டாலும்
கெடாத அளவுக்கு அவற்றை வலுப்படுத்தக்
கூடிய பொருள்களைக் கண்டுபிடிப்பதில் விஞ்
ஞானிகள் முனைந்தனர்.

இந்த முயற்சியில் இர்குட்ஸ்க் உயிரியல்
இரசாயனக்கழகநிபுணர்களும்சேர்ந்துகொண்
டனர். நீண்ட ஆராய்ச்சிக்குப்பின் அவர்கள்
பல பொருட்களைக் கண்டுபிடித்தனர். இரத்
தத்தில் உள்ள உயிரணுக்கள் கடினமான
செயற்கைப் பொருள்கள் மீது மோதுவதால்
சேதமடைவதானது, இந்தப் புதியபொருள்
களை இரத்தத்தில்செலுத்துவதால்பாதியாகக்
குறைந்தது. இதை ஒட்டிய ஆராய்ச்சி நீடிக்
கிறது: இரத்தத்தில் உள்ள உயிரணுக்களை
மேலும் வலுப்படுத்தக்கூடிய பொருள்களைக்
கண்டுபிடிக்க முடியும் என்று விஞ்ஞானிகள்
நம்புகின்றனர்.

இருதய அறுவைச் சிகிச்சையின்போது,
ரத்த ஓட்டத்தைச் செயற்கை முறையில் நீடிக்
கச் செய்வதிலும் இந்தப் புதிய தயாரிப்புக்கள்
பயன்படும் என்று நிபுணர்கள் கருதுகின்
றனர்.

—சோவியத் சிறப்புக் கட்டுரைகள்.

இப்பகுதியில் தெரு விளக்குகள் ரூ.18,000 செலவில் அமைக்கப் பட உள்ளன. ரூ. 22 இலட்சம் செலவில் கப்பிச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. குடியிருப்புகளைச் சுற்றி உள்ள தரைப் பகுதிகளில், சகதியைத் தவிர்க்க சிமெண்டினால் ஆன தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

"பொதுவாக, சென்னை மாநகரிலே எங்கேயும் பார்க்கலாம், வாரியம் அமைத்த இது போன்ற அடுக்கு மாடிக் குடியிருப்புகளில், சாலை வசதி, மின் வசதி, குடிநீர்வசதி, தனிகழிப்பிடங்கள், சுற்றுப்புறக் காம்பவுண்டுகள். அங்கேயே கல்வி நிலையங்கள், தொழிற் கூடங்கள், விளையாட்டுத் திடல்கள், மருத்துவக் கூடங்கள், நூல் நிலையங்கள் முதலான பல வசதிகள் இருப்பதை, அது மட்டுமல்லாது - உடனடியாகக் குடியிருப்புகள் கட்ட இயலாது குடிசைப் பகுதிகளில் மக்களின் அடிப்படைத் தேவைகளான கழிப்பிடம் - 10 பேருக்கு ஒன்று என்ற வகையில், சாலை வசதி, மின்வசதி, குடிநீர் வசதி, சாக்கடை வசதி போன்றவையும் வழங்கப்பட்டுள்ளன. இதனால் பயனடைந்த குடும்பங்கள்50,000 -செலவழித்த தொகை 303 இலட்சங்களாகும். இதுவரை 45,000 குடியிருப்புகளை வாரியம் அமைத்துத் தந்திருக்கிறது. 1981ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை 25,000 குடும்பங்களுக்கு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. வீடுகட்டிக் கொள்ளக் கடனுதவி 17,000 பேருக்கு ரூ. 478 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேற்கொண்டு 30,000 பேருக்குக் கடனுதவி வழங்கப்படவிருக்கிறது" என்ற தகவல்களைத் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைவர் திருமதி சு. வெ. கி. சுலோசனா சம்பத் அவர்களின் தலைமையுரையிலிருந்து தெரிந்து கொள்கிறோம்.

"சென்னையில் 150க்கு மேற்பட்ட குடிசைப் பகுதிகள் உள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்த அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. ஏழை எளியவர்களுக்கு இம்மாதிரி அடுக்கு மாடி வீடுகளைக் கட்டித் தரும் பணியில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகம் முன்னணியில் உள்ளது" என்று மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் குடியிருப்புகளைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றுகையில் கருத்துத் தெரிவித்தார். சுற்றுப்புறங்களைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றும், உலகிலேயே இரண்டாவதாகத் திகழும் இந்தக் கடற்கரையை அசுத்தப்படுத்த வேண்டாம் என்றும் அவர் மீனவ மக்களைக் கேட்டுக்கொண்டார்.

மீனவ மக்களுக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் பல உதவிகளை அரசு வழங்கி வருகிறது என்றும், கொருக்குப்பேட்டை போன்ற பகுதிகளில் தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டித் தர அரசு தக்க ஏற்பாடுகளைச் செய்து வருகிறதென்றும் மாண்புமிகு பொதுப் பணித் துறை மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள், கட்டப்படவிருக்கும் 408 குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அலைகடலோரத்தில் கட்டப்பட்டுள்ள இந்த அழகிய குடியிருப்புகளில் குடியேறப் போகிறோம் என்ற குதூகலம் தாய்மார்கள் அகத்திலும் முகத்திலும் தெரிந்தது.

—பி. வி. கிரி.

# அறிஞர் அண்ணா சுற்றுலா வளாகம்

சுற்றுலாவால் உண்டாகும் மகிழ்ச்சியும் பயனும் மட்டற்றவைகளாகும்.

தான் கண்டின்புறுவதை உலகம் உணர்ந்து இன்புறவேண்டும் என்ற வகையிலே, சுற்றுலாவின்போது கண்டவற்றைச் சுவைபட எடுத்துக் கூறும் ஆற்றல் மிகச் சிலருக்கே வாய்க்கும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த வகையிலே இணையற்றுத் திகழ்ந்தார். எங்கே சென்று வந்தாலும் 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற உயரிய எண்ணத்தோடு அதை இனிய கட்டுரை வடிவாக்கி வழங்கும் இயல்பு அவருக்கிருந்தது.

இதோ - சிதம்பரத்திற்கு அருகிலுள்ள பிச்சாவரம் பகுதிக்குச் சென்று திரும்பியபின், 'தம்பிக்கு' அவரளித்த கடிதக் கட்டுரையின் ஒரு பகுதியைப் பாருங்கள்:

''....நான் நெய்தல் நிலக் காட்சிகளைக் கண்டு கொண்டிருந்தேன். தம்பி, நெய்தல் நிலம் சென்றேன், கண்டேன், களிப்புமிகக் கொண்டேன். தில்லைக்குச் சில மைல் தொலைவில் உள்ள கிள்ளை எனும் கடலோரச் சிற்றூரைத் தொட்டுத் தோழமை கொண்டாடும் உப்பங்கழி சென்றோம், தோணியில். பிச்சாவரம் காடு என்று பெயர் அந்த இடத்துக்கு. தம்பி, கடல் நீரின்மீது ஒரு காடு! வேறெங்கும் அதிகம் காணப்படாததும் உப்பங்கழிகளில் மட்டுமே வளரக் கூடியதுமான பல வகை மரங்கள், கொடிகள், செடிகள் நிரம்பி உள்ளன. ஆலுக்குள்ள விழுதுகள் போல அந்த மரங்களிலிருந்து கிளம்பித் தண்ணீரைத் தொடுகின்றன. உள்ளேயும் செல்கின்றன. இடையிடையே திட்டுகள் உள்ளன. அவை மேய்ச்சல் இடங்களாகப் பயன்படுகின்றன. விழுதுகளும் கொடிகளும் வழிமறித்து நிற்கின்றன. வளைத்தும், பிரித்தும், நீக்கியும் வழிகாண வேண்டியிருக்கிறது.

''செம்போத்தும், குருகும், வக்காவும், வண்ணப் பறவைகளும், இசை எழுப்பும் பறவைகளும் உள்ளன. ஆள் அரவம் கேட்டு மரத்திலிருந்து கிளம்பிச் சிறகடித்துக் கொண்டு, வேறிடம் செல்லும் காட்சி! வெளிர் நீல வண்ணம் நீர், சூழப் பச்சை, மேலே நீலமும் வெண்மையும் கொண்ட மேகக் கூட்டம், இடையில் வெண்ணிறக் கொக்குகள், விமானப்படை அணிவகுத்துச் செல்வதுபோல!

''இதை நீங்கள் மட்டுந்தானா கண்டு களித்திடக் கற்றீர்கள் என்று கூறுவது போல், துள்ளித்துள்ளி மேலே வருகின்ற மீனினம் எதையும் அழித்திடும் மாந்தர் உளரே என்ற வெறுப்பில் மீண்டும் தண்ணீருக்குள் சென்றுவிடுகின்றன! தரையில் நடக்க மட்டுமே கற்றுக் கொண்ட இனமே! இதற்கே உனக்கு இத்துணைத் தலைக்கனம் ஏற்பட்டுவிட்டதே! என்போல் நீரில் நடக்க வல்லாயோ என்று கேட்டுக் கேலி செய்வதுபோல, சின்னஞ்சிறு மீன்கள் துள்ளித்துள்ளி நீரின் மீது நெடுந்தூரம் செல்கின்றன.....''

—இப்படி எழுதிக்கொண்டே செல்லும் பேரறிஞர் அண்ணாவின் கட்டுரையினைப் படித்தாலே பிச்சாவரம் சென்று வந்த நிம்மதி நமக்குத் தோன்றும். அவரால் போற்றிப் புகழப்பட்ட அந்த பிச்சாவரம் தமிழக அரசால் இப்போது சுற்றுலா மையமாக்கப்பட்டிருக்கிறது.






பேரறிஞர் அண்ணாவின் இதயம் கவர்ந்த இடமல்லவா? இந்தக் காரணத்தினாலேயே 'அறிஞர் அண்ணா சுற்றுலா வளாகம்' என அப்பகுதிக்குப் பெயரிட்டிருக்கிறது அரசு.

சிதம்பரத்திற்குக் கிழக்கே 16வது கிலோ மீட்டரில் உள்ள மூவாயிரம் ஏக்கர் உப்பங் கழி பகுதியே பிச்சாவரம். கண்டமரம், சுரப் புன்னை மரம், ஆங்காங்கே சில தில்லைமரம் ஆகியவை நீர்ப்பரப்பின்மேலே நின்றிருக்கும் இங்கே. திட்டுத் திட்டாகக் காணப்படும் இந்த மரக்கூட்டங்கள் யாவும் ஒரே நாளில் பிறந்தவைபோலப் பத்தடிக்கு உட்பட்ட உய ரத்துடனேயே காணப்படுகின்றன. ஆனால், அவற்றின் வயதோ நூற்றுக்கணக்கான ஆண்டு களுக்கு மேலிருக்கும்!.

ஆங்கிலத்தில், 'மாங்குரோவ்' காடுகள் எனக் குறிப்பிடப்படும் 18 வகை சுரப்புன்னை மரங்கள் உள்ள காடுகள் உலகிலேயே இங்கு தான் மிக அரிதாகக் காணப்படுகின்றன. இது பற்றித் தாவர இயல் ஆராய்ச்சியாளர் மேற் கொண்ட ஆய்வுகள் தொடர்ந்துகொண்டிருக் கின்றன.

பிச்சாவரத்திலிருந்து கிழக்கே 5 கிலோ மீட்டர் தூரம் நீர்வழியே சென்றால் நாம் கடலைக் காணமுடியும். இடைப்பட்டதெல் லாம் இயற்கை வளம் மிகுந்த அந்த வனப் பகுதிதான்; நீர்ப்பகுதிதான்.

1978ஆம் ஆண்டில் இப்பகுதியைச் சுற் றுலா மையமாக ஆக்கத் தமிழக அரசு மேற் கொண்ட முயற்சிகள் முற்றுப்பெற ஐந்தாண் டுக் காலம் பிடித்ததென்றால், இந்தத் தாம தத்திற்குக் காரணம் உண்டு. உப்பங்கழியோ ரத்தில் கட்டடம் எழுப்பவேண்டும்; கல வைகள் கலந்திட உப்புத் தண்ணீர் உதவுமோ? எனவே இங்கிருந்து 5 கிலோ மீட்டர் தொலை வில் உள்ள கிள்ளையிலிருந்து நல்ல தண்ணீர் கொண்டு வரப்பட்டது. கரையில், லாரிமூலம் கொண்டு வந்து இறக்கப்படும் செங்கல், சிமெண்ட் போன்றவை சிறு படகு மூலமே தூர உள்ள தீவில் கட்டப்பட்ட சுற்றுலாப் பயணிகள் தங்கும் விடுதிப் பணிகளுக்காகக் கொண்டுசெல்லப்பட வேண்டும். இதற்கிடை யில் அங்கே மரங்களை வெட்டலாகாது, கட்ட டங்களை எழுப்பலாகாது என்றெல்லாம் தெரி வித்துக் கொண்டிருந்த மத்திய அரசுக்கு முறைப்படி விவரம் தெரிவித்து அவர்கள் முரண்படாதிருக்கச் செய்யவும்வேண்டும். இவ் வாறான காரணங்களினாலேதான் இச் சுற் றுலா மையம் திறக்கப்படுவதிலே சிறிது கால தாமதம் ஏற்பட்டது.



'முயற்சி திருவினை ஆக்கும்' அல்லவா?

16.6.'84ல், இந்த பிச்சாவரம் பகுதியில் 'அறிஞர் அண்ணா சுற்றுலா வளாகம்' திறப்பு விழா இனிதே நடைபெற்றது.

இக்கரையில், பேரறிஞர் அண்ணா சிலை யருகே ஒரு சிற்றுண்டிச்சாலை அமைத்திட வும், சுமார் ஒன்றரை கி.மீ. தொலைவிலுள்ள அக்கரையில் சுற்றுலாப் பயணியர் தங்கும் அறைகள் கட்டிடவும் என இதுவரை 22½ இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இப்பகுதியிலுள்ள மீனவர்களுக்கென 100 இல வசக் குடியிருப்புகள் கட்டித்தரப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் பிச்சாவரம் பகுதியை இன் னும் மேம்படுத்துவதற்காக ஏழு இலட்சம் ரூபாய் செலவில் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

மாண்புமிகு மீன்துறை அமைச்சர் திரு. கே.கலைமணி முன்னிலையில், மாண்புமிகு



தனி அறைக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 35 வாடகை; இளைஞர் விடுதி பொது அறைப் படுக்கைக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 5 வாடகை.

தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறை-தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் சார்பிலே நடைபெற்ற இந்த வளாகத் திறப்பு விழாவிற்கு முன்னதாகப் பிச்சாவரத்தில் கரகஆட்டம் போன்ற கலைநிகழ்ச்சிகளெல்லாம் நடைபெற்றன. பின்னர், விழாவிற்கு வருகை தந்திருந்தோரை, வரவேற்ற தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு க.பாலசுப்பிரமணியம் எம்.எம்.ஏ., "இந்த சுற்றுலா வளாகம் சிறப்படைய இப்பகுதி மக்கள் பெருமளவில் ஒத்துழைப்புத் தர வேண்டும்'' என்றார்.

மீன்துறை துணை இயக்குநர் திரு. நடராசன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.வி.வி. சுவாமிநாதன், திரு கே.ஆர். கணபதி, மேலவை உறுப்பினர் திரு ஏ.பி. சிவராமன் ஆகியோர் உரையாற்றினர். இந்த விழாவில் முக்கிய விருந்தினராக வந்து கலந்து கொண்டனர் திரு. ரோடர் என்ற ஜெர்மனிய தம்பதிகள்; அவர்கள் தங்களது பெண்குழந்தைக்கு 'சீதா' என்று பெயர் வைத்து, தமிழகத்தின் மீது தமக்குள்ள அன்பை வெளிப்படுத்திக் கொண்டுள்ளனர். திருமதி. ரோடர் பேசுகையில் ''கல்வி, பண்பாடு, கலாச்சாரம் இவற்றோடு இணைந்தாற்போலச் சுற்றுலாவை வளர்த்துவரும் தமிழ்நாடு அரசுக்கும், அரசின் இப்படிப்பட்ட நல்ல முயற்சிகளுக்கும் எங்கள் பாராட்டுக்கள்'' என்றார்.

அந்த அம்மையாரின் ஆங்கில உரையைச் சுற்றுலாத் துறை இயக்குநரும், அலுவலால் செயலருமான திரு இரா. கிருபாகரன், இ.ஆ.ப. தமிழில் மொழி பெயர்த்தார்.

மாண்புமிகு மீன்துறை அமைச்சர் திரு. க.கலைமணி பேசுகையில்: ''முதன் முதலில், தன்னிகரற்ற தலைவர் பெயரால் திறக்கப்



செய்தி-சுற்றுலா மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தலைமையில், மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு ச.இராமச்சந்திரன் திறந்து வைத்த அறிஞர் அண்ணா சுற்றுலா வளாகத்தில் 6 தனிக்குடில்களும் 2 இளைஞர்விடுதி பொதுப் படுக்கை அறைகளும், உணவகமும், படகுக் குழாமும் கட்டப்பட்டுள்ளன. இளைஞர் விடுதி பொதுப் படுக்கை அறை ஒன்றுக்குப் பத்துப் படுக்கை வீதம் போட்டிருக்கிறார்கள்.





4-வது அட்டைச் செய்தி

படும் சுற்றுலா வளாகம் இதுவே, இந்த அரசு வந்த பிறகுதான் சுற்றுலாத்துறை மக்களோடு தொடர்புடையதாக, இந்தியாவிலேயே முன்னோடித் துறையாக விளங்கி வருகிறது'' என்றார்.

திரு. தேவேந்திரன் என்பார், தன்னிடம் பெயர் சூட்டக் கொடுத்த பெண் குழந்தைக்கு 'மணிமேகலை' என்று பெயரிட்ட மாண்புமிகு செய்தி-சுற்றுலா மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன், அங்கே மரக்கன்று நட்டார். பின்னர் பேரறிஞர் அண்ணா படத்தைத் திறந்து வைத்துப் பேசிய அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''பேரறிஞர் அண்ணா அவர்கள், இந்த பிச்சாவரம் பகுதியைச் சுற்றுலா மையமாக்க விரும்பினார்கள். அந்த விருப்பத்தை நிறைவேற்றி வைக்கும் வகையில் இங்கே ஒரு சுற்றுலா வளாகத்தை உருவாக்கி, பேரறிஞர் அண்ணா அவர்களின் பவள விழா ஆண்டிலேயே, அவர்கள் பெயராலேயே இதைத் திறந்து வைப்பதில் நாங்கள் பெருமகிழ்ச்சி கொள்கிறோம். இந்தப் பகுதியில் மிக அரிதாகக் காணப்படும் சுரப்புன்னை மரங்களை வேறு யாரும் வெட்டாமல்-தாமும் வெட்டாமல் இங்குள்ள மக்கள் பாதுகாக்க வேண்டும். மிக விரைவிலேயே இந்தச் சுற்றுலா வளாகம் உலகப் புகழ் பெற்றதாக மாறவிருக்கிறது. அதற்கேற்ற 'மாஸ்டர் பிளான்' ஒன்று தமிழ்நாடு அரசால் விரைவில் தயாரிக்கப்படும்''.



மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு ச.இராமச்சந்திரன், சுற்றுலா வளாகக் குடில்கள், இளைஞர் விடுதி, உணவகம், படகுக் குழாம் ஆகியவற்றைத் திறந்து வைத்துப் பேசியதாவது:

''அரசு மூலம் அமைக்கப்படும் சுற்றுலா மையங்களில் விளையாடுமிடம், விஞ்ஞானக் கூடம், வியாபார நிலையம் போன்றவற்றைத் தனியார் நிறுவனங்களே உருவாக்க முன்வர வேண்டும். அப்படிச் செய்வோருக்கு மத்திய அரசு வரிவிலக்குச் சலுகை தரலாம். இதனால் மிகுந்த அன்னியச் செலாவணி வர மார்க்கமுண்டு. ஏற்றுமதி மூலம் பெருத்த வருவாய் ஈட்டித் தரும் தொழில் என்றே சுற்றுலாத் துறையையும் கருதி மத்திய அரசு இதற்கான சலுகைகளை இன்னும் அதிகமாக்க முன் வர வேண்டும்.''

விழா முடிந்தபின், அமைச்சர்களால், நலிந்தோர்க்குக் கடன் வழங்குதல் திட்டத்தின் மூலம் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் 16 பேருக்குக் கறவை மாடுகளும், 46 பேருக்கு மீன் வலைகளும், 7 பேருக்கு டயர் வண்டிகளும், 7 பேருக்குத் தொழிற்கடன்களும் வழங்கப்பட்டன.

இவைகளின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 3,08,000 ஆகும்.

விழா முடிவில் சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் திரு நை.கோவிந்தன், இ.ஆ.ப., நன்றி கூறினார்.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**

**பி. எல். ராஜேந்திரன்.**



# தர்மபுரியில் குடும்ப நல விழா

'அளவின்றிக் குழந்தைகள்
பெறுவதைத் தவிர்ப்போம்
பயன்மிக்க மரங்களை நட்டு
வளர்ப்போம்'

என்ற புதிய குடும்ப நல மொழியின் அறிமுகத்துடன் தர்மபுரியில் குடும்ப நல விழா சீரும் சிறப்புமாக நடந்தேறியது. மக்கள் தொகைப் பெருக்கத்தால் காடுகள் அழிக்கப்பட்டன. வீடுகளும் பள்ளிகளும் பிறவும் கட்டப்பட்டன. காலப் போக்கில் தட்ப வெப்ப நிலைகளில் தாறுமாறான நிலைமைகளும். எரி பொருள் பற்றாக்குறையும் ஏற்படும் அளவுக்குக் காடுகள் மக்கள் தொகைப் பெருக்கம் காரணமாக அழிக்கப்பட்டன. மழை பெய்யும் அளவும் அதனாலே மாறிக் குறைந்துவிட்டது. எனவே மக்கள் தொகைப் பெருக்கத்தால் அழிந்து பட்ட காடுகளை வளர்க்க வேண்டுமெனக் கங்கணம் கட்டிக் கொண்டு அரசு செயல்பட்டு வருகிறது. அரசின் இப்பணிக்கு ஆக்கம் ஊட்டுவதாக அமைந்திருந்தது தர்மபுரியில் நடந்தேறிய குடும்ப நல விழா!

தர்மபுரி மாவட்ட அனைத்து அரசு அலுவலர் சங்கங்களும் இணைந்து திட்டமிட்ட குடும்பம் அமைத்து வாழ்வோம் என அறிவித்துக் குடும்பநல விழா எடுத்தன. மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதான விழா நிகழ்ச்சிகளின் தொடக்கமாக - மக்கள்தொகைப் பெருக்கத்தால் அழிந்துபட்ட மரங்களை வளர்த்து ஈடுகட்டும் பணியாக மரம் நடு விழாவினை நடத்தினார்கள். தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் உள்ள மண்டலப் போக்குவரத்து அலுவலர் அலுவலகப் பகுதியில் மாவட்டக் கடைநிலை ஊழியர் சங்கப் பிரதிநிதிகளும் மற்றவர்களும் அரசின் இரண்டாம் செயலாளர் திரு. டி. வி. அந்தோணி தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வீ. மணிவண்ணன் ஆகியோர் முன்னிலையில், மா, சப்போட்டா போன்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட பயன்மிகு மரங்களை நட்டனர். இவ்விழாவில் அரசு கடைநிலை ஊழியர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் திரு. துளசிங்கம் கலந்து கொண்டார்.

**மகளிர் கூட்டம் :**

மரம் நடு விழாவை அடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அலு

வலகத்திலுள்ள வளர்ச்சி மன்றக் கூடத்தில் மாவட்டத்திலுள்ள மகளிர் மன்றங்களைச் சேர்ந்த தாய்மார்கள் - குறிப்பாக இஸ்லாமியத் தாய்மார்கள் பேரளவில் கலந்து கொண்ட குடும்ப நலத் திட்டக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வீ. மணிவண்ணன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு வந்திருந்தோரை திருமதி மணிக்கொடி வரவேற்று உரையாற்றினார்.

சிறப்புரையாற்றினார் தமிழ்நாடு அரசு இரண்டாம் செயலாளர் திரு டி. வி. அந்தோணி அவர்கள்.

குடும்பநலத் துறை இயக்குநரும், அரசு அலுவல் வழிச் செயலாளருமான திரு து. முருகராசு, குடும்பநலத் துறை துணை இயக்குநர் திரு கே. இராதா கிருஷ்ணன் ஆகியோரும் இவ் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அன்று மதியம் தர்மபுரி மாவட்ட அனைத்து அரசு அலுவலர் சங்கப் பிரதிநிதிகள் கூட்டம் மேற்படி மண்டபத்திலேயே நடந்தது. இக்கூட்டத்தில் அரசு இரண்டாம் செயலாளர் திரு டி. வி. அந்தோணி அவர்கள் '58 வயதில் ஓய்வு பெறும் அரசு ஊழியர்கள் திட்டமிட்டுக் குடும்பத்தை அமைத்துக் கொள்வது குறித்து' விரிவாக விளக்கி உரையாற்றி அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர், குடும்ப நலத் துறை இயக்குநர் மற்றும் அலுவல் வழி அரசுச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். அரசு ஊழியர் சங்கங்களைச் சார்ந்தோர், 1985 ஆம் ஆண்டைத் திட்டமிட்ட குடும்ப ஆண்டாக வெற்றிகரமாக நிறைவேற்ற எல்லாவிதமான ஒத்துழைப்பையும் நல்குவதாக உறுதி கூறினர்.

அன்று மாலை அனைத்து அரசு அலுவலர்களும் ஊழியர்களும் கலந்து கொண்ட மாபெரும் குடும்ப நல ஊர்வலம் தர்மபுரியிலுள்ள அரசு அவ்வையார் மகளிர் மேல்நிலைப் பள்ளியிலிருந்து புறப்பட்டது. குடும்பநலத் திட்டம் குறித்த எழுச்சிமிகு இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் குடும்ப நல மொழிகளைக் கொண்ட அட்டைகளையும் கைகளிலேந்தி முழக்கமிட்ட வண்ணம் வந்தனர்.

உணர்வு பூர்வமான இந்த ஊர்வலத்தால் பல்லாயிரக்கணக்கான மக்கள்-அன்று நடந்த தர்மபுரி சந்தைக்கு வந்த பல்லாயிரக் கணக்கான கிராம மக்கள் குடும்ப நலத் திட்டம் குறித்து விளக்கம் பெற்றனர். இந்த ஊர்வலம் நான்கு ரோடு சந்திப்பில் - பேரறிஞர் அண்ணா அவர்களது சிலை அருகே வந்தபோது அரசு உயர் அலுவலர்கள் கண்டு களித்து ஊர்வலத்தினருக்கு உற்சாக மூட்டினர்.

தர்மபுரி விளையாட்டு அரங்கை ஊர்வலத்தினர் அடைந்ததும், மாவட்ட ஆட்சித் தலைவர் வீ. மணிவண்ணன் தலைமையில் '1985 ஆம் ஆண்டு திட்டமிட்ட குடும்ப ஆண்டு உறுதி மொழி ஏற்பு விழா' நடைபெற்றது. தர்மபுரி மாவட்டக் கடைநிலை ஊழியர் சங்கத் தலைவர் திரு. மதலைமுத்து வரவேற்புரையாற்றினார்.

தலைமையுரையாற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர், எழுச்சிமிக்க ஊர்வலத்தை நடத்திய அத்தனை பேருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் குடும்ப நலத் திட்டத்தின் சீரிய கொள்கையை அரசு ஊழியர்கள் பின்பற்ற எல்லா உதவிகளையும் செய்ய அரசு தயாராக உள்ளது என்றும் கூறினார்.

அடுத்து அரசு கடைநிலை ஊழியர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் திரு. துளசிங்கம் பேசுகையில் குடும்ப நலத் திட்டத்தை வெற்றியுறச் செய்ய புரட்சிகரமான அணுகுமுறை பின்பற்றப்பட்டு வருகிறது என்றார். அவரைத் தொடர்ந்து பேசிய தமிழ்நாடு அரசு அலுவலர் கழகத்தின் (சி&டி) மாவட்டத் தலைவர் திரு சோமசுந்தரம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாவட்டத் தலைவர் திரு. அப்துல் சுபான் ஆகியோர், உறுதிமொழி ஏற்கும் அரசு ஊழியர்கள்



# குளிர்ச்சி மூலம் அறுவைச் சிகிச்சை



மருத்துவத்தில் குளிர்ச்சியைப் பயன் படுத்தி, நோய்களைக் குணப்படுத்தும் முறை நெடுங்காலத்திற்கு முன்பே மருத்துவர்களுக் குத் தெரிந்திருந்தது. புராதன கிரேக்க நூல் களில் இது பற்றிய குறிப்புகள் உள்ளன; இதைப் பயன்படுத்தும் முறைகளை ஹிப் பாக்ரட்டீசும் தம் நூல்களில் விளக்கியுள் ளார்.

உடலில் நோய் கண்ட இடத்தை மட்டும் உறைய வைப்பதற்கான சாதனங்கள் கண்டு பிடிக்கப்பட்ட பின், இந்த முறையில் புதிய சாத்தியப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இந்தச் சாதனத்தைக் கொண்டு உடலின் மேற்பரப் பில் மட்டுமல்லாமல், உட்புறத்தில் உள்ள உறுப்புகளையும் உறைய வைத்துச் சிகிச்சை செய்ய முடியும்.

இந்த முறையைக் கையாள்வதால் அறு வைச் சிகிச்சையை மிகத் திறம்படவும் விரை வாகவும் செய்ய முடிகிறது. இதனால் உடலில் நோய் கண்ட இடத்தைச் சுற்றியுள்ள ஆரோக் கியமான திசுக்கள் சேதமடைவதில்லை. அறு வைச் சிகிச்சை செய்யும்பொழுது இரத்தமும் வீணாவதில்லை.

சோவியத் யூனியனில் உக்ரேனிய விஞ் ஞானப் பேரவையில் குறைந்த-வெப்ப பௌதிக, தொழில் நுட்பக் கழகம் இந்தச் சாதனத்தைத் தயாரித்துள்ளது. மூளை அறு வைச் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் இத் தகைய சாதனத்தை மருத்துவர்கள் பெரிதும் போற்றுகின்றனர். உலோகத்திலான அறு வைச் சிகிச்சைக் கருவிகளைவிட இது அதிகம் திறமை வாய்ந்ததாகும். காக்காய் வலிப்பு, மூளையில் தோன்றும் கட்டிகள் முதலிய நோய்களை இந்தச் சாதனத்தைக் கொண்டு குணப்படுத்த முடிதும். இந்தச் சாதனத்தை எளிதில் கையாள முடியும் என்பதுடன், அறு வைச் சிகிச்சை செய்யப்பட்ட இடத்தில் வடுவும் இருப்பதில்லை.

தீராத எக்ஸிமா போன்ற சரும நோய் களைக் குணப்படுத்தவும் இந்தச் சாதனம் பயன்படுகிறது.

**சோவியத் செய்திக் கட்டுரைகள்.**

நிச்சயமாகக் குடும்பநலத் திட் டத்தைப் பின்பற்றுவார்கள் என உறுதி கூறினார்கள். பின் உரை யாற்றிய குடும்பநலத் துறையின் துணை இயக்குநர் திரு கோ. இராதாகிருஷ்ணன் அவர்கள் திட் டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்திச் சாதனை ஏற் படுத்தி வரும் நாம், மக்கள் தொகைப் பெருக்கம் ஏற்படக் காரணமாகிச் சோதனைக்குள் ளாகி விடக் கூடாதென்றும், வீடு தோறும் ஆண்டுக்காண்டு பிள்ளை பெற்றால் நாடு தாங்காது என் றும் கூறினார்.

இவ்விழாவில் கலந்து கொண்ட சட்டமன்ற உறுப்பினர்கள், 'பொதுமக்களும் அரசு ஊழியர் களைப் போலவே 1985 ஆம் ஆண்டைத் திட்டமிட்ட, குடும்ப நல ஆண்டாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்று' கேட்டுக் கொண் டனர்.

அடுத்து உரையாற்றிய அரசு இரண்டாம் செயலாளர் திரு. டி. வி. அந்தோணி அவர்கள், உறுதி மொழி ஏற்ற அரசு ஊழியர்கள் அதைச் செயல்படுத்துவதில் கண் ணும் கருத்துமாக இருந்து வெற்றி தேடித்தர வேண்டுமென்று கேட் டுக்கொண்டார்.

பின், தமிழ்நாடு அரசு அலு வலர் ஒன்றியத்தின் தர்மபுரி மாவட்டத் தலைவர் திரு அப்துல் சுபான் 1985 ஆம் ஆண்டு குழந்தை பெற்றுக்கொள் ளமாட்டோம் என்ற உறுதி மொழியைப் படிக்க, விழாவில் கலந்து கொண்ட அத்தனை அரசு அலுவலர்களும் ஊழியர்களும் உறுதி மொழி ஏற்றனர்.

சிறுசேமிப்புத் திட்டம், குடும்ப நலத்திட்டம் ஆகியவற்றில் கடந்த ஆண்டு சிறப்பாகப் பணி யாற்றியவர்களுக்கு குடும்பநலத் துறை இயக்குநர் மற்றும் அலு வல்வழி அரசுச் செயலாளர் திரு. து. முருகராசு இ. ஆ. ப. அவர்களும், அரசு இரண்டாம் செயலாளர் திரு. டி. வி. அந்தோணி அவர்களும் பரிசுகளை வழங்கினார்கள். தர்மபுரி மாவட்டக் குடும்பநல விளம்பர அலுவலர் திரு இராமச் சந்திரன் நன்றி கூறி உரையாற்றி னார். கடைசியில் அரசு ஊழியர் கள் நடத்திய ''குறையல்ல ... நிறை' என்ற குடும்ப நல நாட கம் அனைவரையும் கவர்ந்தது.

**தொகுப்பு :**

**எஸ். முத்துராமலிங்கம்**




# இதயங்கவர் இளைஞர் விடுதி

—செ. மு. பசீர்,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், (பொறுப்பு).
கன்னியாகுமரி மாவட்டம்

தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறை கன்னியாகுமரியில், ரூ. 5 இலட்சம் செலவில் இளைஞர் விடுதி ஒன்றைக் கட்டியுள்ளது.

மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் இந்த இளைஞர் விடுதியை கன்னியாகுமரியில் 25-5-84 அன்று திறந்து வைத்தார்.

''இன்று இங்கு திறக்கப்பட்ட இளைஞர் விடுதி தமிழ்நாட்டில் ஒன்பதாவது இளைஞர் விடுதியாகும். இந்த இளைஞர் விடுதி உலக அளவில் புகழ் பெற்றதாக உள்ளது. இன்று திறக்கப்பட்ட இளைஞர் விடுதி 34 படுக்கைகள் கொண்டது. மேலும் 8.5 லட்ச ரூபாயில் 50 படுக்கைகள் கொண்ட விடுதியும், 1.5 லட்சரூபாயில் 16 படுக்கைகள் கொண்ட ஒரு விடுதியும் விரைவில் கட்டப்படவுள்ளன. உல்லாசப் பேருந்தில் கன்னியாகுமரி வருகிறவர்கள் இரவில் படுத்து காலையில் குளித்துச் செல்ல வசதியாக நவீன சத்திரம் ஒன்று 2.5 லட்சம் ரூபாயில் கட்டப்படவிருக்கிறது'' என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

கன்னியாகுமரியை நவீனப் படுத்துவதற்குத் தமிழ்நாடு அரசு இப்போது ஒரு கோடி ரூபாய் செலவில் பல திட்டங்களைச் செய்து கொண்டிருக்கிறது.

இந்த இனிய விழாவிற்குத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. க. பாலசுப்பிரமணியம் தலைமை வகித்தார். கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. எல். கே. திரிபாதி, இ.ஆ.ப. முன்னிலை வகித்தார்.

விழாவின் துவக்கத்தில் சுற்றுலாத்துறை இயக்குநர் திரு. இரா. கிருபாகரன் வரவேற்றுப் பேசினார். இறுதியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் திரு. என். கோவிந்தன் நன்றி கூறினார்.

**மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள இளைஞர் விடுதியைத் திறந்து வைக்கிறார்.**



## நாகர்கோவில் நாகராஜா கோவில் திருமண மண்டபம்.

அறநிலையத் துறையின் சார்பில், நாகர்கோவில் அருள்மிகு நாகராஜா திருக்கோவிலில் ரூ. 7 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள திருமண மண்டபத்தை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் 25—5—84 அன்று திறந்து வைத்தார்.

இந்த விழாவிற்கு மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமை யேற்றார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமது உரையின்போது குறிப்பிட்டதாவது:

''மூன்றாண்டுகளுக்கு முன்னர் இந்தத் திருமண மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு—இன்று கட்டி முடிக்கப்பட்டு திறக்கப் பட்டுள்ளது. இந்த மண்டபம் திருமணத்திற்கு மட்டுமல்லாமல் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தும் அரங்கமாகவும் செயல்படும். ரூபாய் 7 இலட்சம் செலவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சுசீந்திரம் கோவில் திருப்பணி முடியும் கட்டத்தில் உள்ளது. விரைவில் குடமுழுக்கு விழா நடைபெறும். தேவஸம் போர்டு நடத்திவரும் குழித்துறை தேவி குமாரி பெண்கள் கல்லூரியில் ரூபாய் 2½ இலட்சம் செலவில் கட்டப்பட்டு வரும் கட்டடத்தில் திறப்பு விழாவும் விரைவில் நடைபெறும்.

“இப்பணிகள் நிறைவேற்றிய பின்னர், சுசீந்திரம் கோவில் தெப்பக்குளம் ரூ. 2 இலட்சம் செலவில் தூர் எடுக்கப்படும். கன்னியாகுமரி அருள்மிகு பகவதியம்மன் கோவிலில் குமரித்தாய்க்கு ராஜ கோபுரம் கட்டப்படும். தமிழகத்தின் உயர்வையும், பண்பாட்டையும், கலையையும் உலகிற்கு எடுத்துக்காட்டும் வகையில் இந்த ராஜகோபுரம் விளங்கும்.''

விழாவில் 100 கைத்தறி நெசவாளர்களுக்குத் தொழில் செய்ய நாகர்கோவில் பாரத வங்கியின் மூலம் வழங்கப்பட்ட ரூ. 4 இலட்சம் கடனுதவியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை


கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி சேலைகள்
ஆயிரம் மலர்கள் பூத்து குலுங்கும்
அழகோவிய சேலைகள்...
ண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
ண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
ளிர் அனைவரும் விரும்பும் அருமை
துமை இழையும் ஆடைகள் ஆயிரம்
கைகள்... அழகார்ந்த ரகங்கள்
னைத்தும் உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி










# தமிழரசு

Licence No. TN/MS(C)/PP-23

பதிவு எண். M. 8676


